**ANGLO ASIAN MINI MART**
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 5 16 – 22 செப்டெம்பர் 1999 முழக்கம்: 244

**CAR CHECK**
**Mot & Repair Center**
உங்களுடைய சகல திருத்த
வேலைக்கும், M.O.T க்கும்
தொடர்புகொள்ளவேண்டிய இடம்:
(Honda & Nisson Dealer க்கு அருகாமையில்)
Unit 17 Stonefield Close.
Off Stonefield Way
Ruislip - Middx.
தொடர்புகளுக்கு: 0181–841 1880
(குமார்)
Pub.

# விடுதலைப் புலிகள் பதிலடி

## * பள்ளமடுவில் 90ற்கு மேற்பட்ட இராணுவம் பலி
## * 800 இராணுவத்தினர் காயம்

(13.09.99)

வன்னியின் மேற்குப் பகுதியில் பள்ளமடு, பெரியமடு பகுதிகள் ஊடாக முன்னோக்கி நகர முயன்ற சிறீலங்கா இராணுவம் மீது புலிகள் நடாத்திய பதிலடித் தாக்குதலினால் சுமார் தொண்ணூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதுடன் எண்ணூறிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் காயப்படுத்தப்பட்டுள்ளனர். இந் நகர்வு முயற்சிக்கு 'ரணகோசா 5' என பெயர் சூட்டப்பட்டுள்ளது. புதிய நடவடிக்கை மூலம் மூன்று முறிப்பு பகுதிகளை பள்ளமடுப் பகுதிகளுடன் இணைக்கும் முயற்சியே இது எனக் கருதப்படுகின்றது.



நேற்று ஞாயிறு காலை ஆறு மணியளவில் மூன்று முனைகள் ஊடாக சிறீலங்காப் படையினர் நகர முயன்றனர். இவர்களுக்கு துணையாக விமானப் படை விமானங்கள் புலிகளின் நிலைகள் மீது கடும் குண்டு வீச்சுக்களை மேற்கொண்டன. இராணுவ நிலைகளில் இருந்து பீரங்கிகள் பலத்த குண்டு வீச்சுக்களை மேற்கொண்டன.

இவ் நகர்வு முயற்சியை தடுத்து நிறுத்திய புலிகளின் படையணிகள் பலத்த பதிலடி தாக்குதலை நடாத்தினர். புலிகளின் பீரங்கிப் படையினர் எதிரிப் படைகள் மீது துல்லியமான குண்டு வீச்சுக்களை நடாத்தி பலத்த சேதத்தை ஏற்படுத்தினர்.

மாலை நான்கு மணியளவில் தமது நகர்வு முயற்சியை கைவிட்ட படையினர் தமது முன்னைய நிலைகளுக்கு பின்வாங்கி ஓடியதாக வன்னியிலிருந்து ஈழமுரசுவுக்குக் கிடைத்த தகவல்கள் கூறுகின்றன.

இத் தாக்குதல் தொடர்பாக இன்று காலை கொழும்பில் விடுக்கப்பட்ட அறிக்கையில் 53ற்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதாகவும் 6 படையினரைக் காணவில்லை எனவும் சிறீலங்கா இராணுவ அமைச்சு அறிவித்துள்ளது. இதேவேளை

(☞ 2ம் பக்கம்)

## 19 விடுதலைப்புலிகள் வீரச்சாவு புலிகளின் குரல் அறிவிப்பு

(13.9.99)

பள்ளமடு, பெரியமடு சமர்களில் 19 விடுதலைப் புலிகள் வீரச்சாவை தழுவியுள்ளனர் என புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது. வீரச்சாவடைந்த போராளிகளுக்கு வீரவணக்கம் தெரிவித்த வானொலி இச்சமர் தொடர்பான விபரங்ளை வெளியிட்டுள்ளது.

இம் மும்முனைச் சமரை முறியடித்து இராணுவத்தினரை புலிகளின் படையணிகள் விரட்டியடித்ததை உறுதிப்படுத்திய வானொலி பள்ளமடுவில் கைப்பற்றப்பட்ட ஆயுத தளவாடங்களின் விபரங்களை வெளியிட்டது. சிறீலங்காப் படைகளிற்கு விமானப்படைகள் பலத்த ஆதரவுத்

(☞ 2ம் பக்கம்)

## வவுனியா இராணுவத்திற்கு சவால்?
## இராணுவத் தலைமையகம் முன் தாக்குதல்

(13.09.99)

வவுனியாவில் அமைந்துள்ள வன்னிக்கான இராணுவத் தலைமையகம் முன்பாக ஆயுதம் தரித்த சிறப்பு அணியொன்று துணிகரத்தாக்குதல் ஒன்றை நடாத்தியுள்ளது. இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, புலிகளின் சிறப்புப் பயிற்சி பெற்ற அணியொன்று வவுனியா இராணுவத் தலைமையகம் முன் ஒரு வாகனமொன்றில் வந்தனர். அங்கு நிறுத்தப்பட்ட வாகனங்களை குண்டுவீசித் தாக்கினர், பின்னர் வவுனியா பஸ் நிலையம் முன் நிறுத்தப்பட்டிருந்த 8 வண்டிகளில் பொறிவெடிகளை பொருத்திவிட்டு சிறீலங்கா அரசுக்குச் சொந்தமான 65800 ரூபாய்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

இதே வேளையில் வவுனியா நகருக்கு மேற்கே தோனிக்கல் புகைவண்டி கடவையடியில் அமைந்திருந்த காவலரணை புலிகளின் அணியொன்று இருபது நிமிடம் தாக்கியுள்ளது. இதன்போது ஒரு படையினன் கொல்லப்பட்டதாக சிறீலங்கா அரசு அறிவித்துள்ளது.

வவுனியா நகரின் மற்றுமொரு பகுதியில் ஒரு இராணுவ பாதுகாப்புள்ள மின்சார மற்றி குண்டுவைத்து தகர்க்கப்பட்டுள்ளது. இன்று மாலை மூன்று மணியளவில் இது இடம்பெற்றது. இதேவேளை அதிகாலை ஒரு மணியளவில் வவுனியா பண்டாரிக்குளம் மின்

(☞ 2ம் பக்கம்)

## புலிகளின் பீரங்கிகளே ஆபத்தானவை

– பி.பி.சி.யிடம் இராணுவம் ஒப்புதல் –

மன்னார் சமரில் புலிகளின் பீரங்கி எறிகணைத் தாக்குதல்கள் தமது தரப்புக்குப் பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாக இராணுவம் பிபிசி. செய்தி நிறுவனத்திடம் ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஏராளமான தமது படையினர் சிறுரக காயங்களுக்கு உள்ளானதாகவும் தமது விமானப் படையும் பீரங்கிகளும் புலிகளின் பீரங்கிகளை அழிப்பதற்காக பலத்த தாக்குதலை நடாத்தியதாகவும் இராணுவம் கூறியுள்ளது.

## சாபிநகர் பொலிஸ் நிலையம் தாக்கியழிப்பு

**4 அதிரடிப் பொலிசார் பலி – 18 பேர் படுகாயம்**

(13.09.99)

மட்டு. சாபி .நகரில் அமைந்துள்ள சிறீலங்கா பொலிஸ் நிலையமொன்று. இன்று அதிகாலை விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டது. மூதூர் நகரப்பகுதியில் இருந்து தெற்கு பக்கமாக 2 கி.மீ. தூரத்தில் சாபிநகர் அமைந்துள்ளது. இன்று அதிகாலை 12.45 மணியளவில் அப்பகுதி பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்ட புலிகளின் விசேட தாக்குதல் அணியினர், பொலிஸ் நிலையத்தை முற்றாக தாக்கியழித்தனர். இதன்போது நான்கு அதிரடிப் பயிற்சி பெற்ற பொலிசார் கொல்லப்பட்டதுடன், 18 பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் ஐந்து பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக படைத்தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. வெற்றிகரமாக தாக்குதலை முடித்துக் கொண்ட புலிகளின் அணிகள் பொலிஸ் நிலையத்திலிருந்த ஏராளமான ஆயுத தளவாடங்களையும் கைப்பற்றிச் சென்றுள்ளனர் என படைத்தரப்புச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. இத்

(☞ 2ம் பக்கம்)

**தமிழினி**
பல்பொருள் அங்காடி
**TAMILINI** Cash and Carry
195-197 The Broadway, Southall
Middx Ub1 1LZ
Tel: 0181-606 9900 Fax: 0181-813 8269

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
Leama
Tel: 0208 2053650
Fax: 0208 2053651

டென்மார்க்:
T. சுரேஸ்காந்த்
Møller vcj - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: மக்கள் கடை
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin,
Swiss.
Natel: 079 635 02 16

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
ஹரி - Tel: 07887874177

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
`EELAMURASU'
P.O Box S-109
Homebush South
N.S.W 2140
Australia
E-Mail:tccsydney@one.net.au


# காங்கிரஸ் ஆட்சிக்கு வராது

## - ஜெயலலிதா -

இன்று ஜெயலலிதா ஐதராபாத் புறப்படுவதற்கு முன்னர் அகில இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் கரிகிருஷ்னசிங் சுர்ஜித்தை சந்தித்து பேசியுள்ளார். சுமார் 40 நிமிடங்கள் இடம்பெற்ற இச் சந்திப்பு இந்திய அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெயலிலதவும், சுர்ஜித்தும் சந்தித்துக் கொண்டமை காங்கிரசுடனான கூட்டணியை முறித்து மூன்றாவது அணியை வெற்றிகொள்ள வைப்பது பற்றியே பேச்சுக்கள் இருந்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி நிருபர்கள் ஜெயலலிதாவிடம் கேட்டபோது தேர்தலுக்கு பின் 3வது அணி உருவாகி மத்தியில் ஆட்சியமைப்பதற்கு முயற்சி எடுத்தால் அதற்கு தனது முழு சம்மதமும் கிடைக்கும் என சுர்ஜித்திடம் தான் கூறியதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை காங்கிரஸ் கட்சியினர் தனித்து போட்டியிட்டு வெற்றியடைவொம் என தெரிவித்துள்ளமை பற்றி ஜெயலலிதாவிடம் கேட்டபோது காங்கிரஸ் ஆட்சிக்கு வராது என உறுதிபட தெரிவிப்பதாக நிருபர்களிடம் தெரிவித்துள்ளார். அத்துடன் மூன்றாவது அணியின் ஆட்சிக்கே தன் ஆதரவு எனவும் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### விடுதலைப்...

200ற்கு மேற்பட்ட படையினர் மிக மோசமாக காயப்பட்டு அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரிகளை ஆதாரம் காட்டி பிபிசி சிங்கள சேவை லண்டனில் தெரிவித்துள்ளது. இவர்களில் 92 படையினரின் நிலை கவலைக்கிடமானது. மேலும் 600 காயப்பட்ட படையினர் அநுராதபுரத்திலிருந்து கொழும்புக்கு சிகிச்சைக்காக கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். அநுராதபுர வைத்தியசாலையில் 5 படையினர் இதுவரை இறந்துள்ளதாக காலையில் அறிவிக்கப்பட்டிருந்தது. இவற்றைவிட வைத்தியசாலையில் 45 சடலங்கள் கிடப்பதாக அறிவிக்கப்படுகின்றது. புலிகள் 12 சடலங்களை ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகள் இன்று இடம்பெற்றன.

வன்னியிலிருந்து ஈழமுரசுக்குக் கிட்டிய தகவலின் பிரகாரம் சுமார் தொண்ணூறு இராணுவத்தினர் புலிகளின் பதிலடியில் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. கொல்லப்பட்டோரில் அதிகாரிகள் சிலரும் அடங்குவர்.

இதேவேளையில் நேற்று இரவும் இன்று காலையும் சிறுசிறு துப்பாக்கிச் சத்தங்கள் அங்கு இடம்பெற்றுள்ளது. தமது 'ரணகோச 5' தொடர்வதாக இராணுவம் அறிவித்துள்ளபோதும் பெருமளவிலான எதுவித நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. தமது படையினர் 4 கி.மீ. பரப்பைக் கைப்பற்றி புலிகளின் நிலைகளை அழித்ததாக இராணுவம் கூறுகின்றது. வன்னியில் படையினர் மீள விரட்டப்பட்டுளனர் என ஈழநாதம் ஏடு இன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### 19 விடுதலைப்...

தாக்குதலை மேற்கொண்டன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் வீரச்சாவை தழுவிக்கொண்ட பத்தொன்பது போராளிகளில் நான்கு மாவீரர்களின் பெயர்கள் புலிகளின் குரல் வானொலியால் அறிவிக்கப்பட்டுள்ளது. லெப். சாந்தி அல்லது சாந்தினி (சின்னராசா சுகந்தி யாழ்ப்பாணம்), லெப்.நந்தா (சின்னையா விஜி திருகோணமலை), லெப்.ரஞ்சினி (சங்கர் இந்திராணி நெடுங்கேணி), யோகநாதன் (சங்கரன் ஈஸ்வரநாதன் குருநாகல).

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### வவுனியா...

மாற்றி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டமையால் அது எண்ணைக் கசிவை ஏற்படுத்தி வெடித்து சிதறியுள்ளது. இவ்விரு மின்மாற்றிகளும் 14 இலட்சம் ரூபாய் நஷ்டத்தை சிறீலங்காவுக்கு ஏற்படுத்தியுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### சாபிநகர்...

தாக்குதல் பற்றிய விடுதலைப் புலிகளின் செய்திகள் எவையும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

இதேவேளை மட்டக்களப்பில் உள்ள புதுவெளிப்பாலம் என்னுமிடத்தில் இன்று காலை 8.30 மணியளவில் ரோந்து சென்ற சிறீலங்காப் படைகள் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலில் நான்கு படையினர் படு காயமடைந்துள்ளனர். காயமடைந்த படையினரையும் தூக்கிக்கொண்டு முகாமிற்குத் தப்பியோடிய படையினர் அங்கிருந்து மக்கள் குடியிருப்புக்களை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர். இதன்போது மூன்று பொதுமக்கள் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பிறந்தநாள் வாழ்த்து

## செல்வன் வேந்தன்



தமிழீழம் வசாவிளானைச் சேர்ந்த திரு.திருமதி கதிரமலை தம்பதிகளின் கனிஸ்ட புதல்வன் செல்வன் 'வேந்தன்' 13.09.1999 திங்கட்கிழமை தனது 6-வது பிறந்தநாளை இங்கிலாந்தில் 109 Lynmouth Road-Walthamstow London ல் தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடினார்.

அவரை, இங்கிலாந்திலுள்ள அப்பா, அம்மா, பெரியண்ணா, அக்கா, ஆசை அண்ணா, சின்னமாமா, பிரான்சிலுள்ள பெரியமாமா, பெரியமாமி, அண்ணா (கபிலர்) தமிழீழத்திலுள்ள அப்பப்பா, அப்பம்மா, ஐயா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், அன்ரிமார் அண்ணாமார், அக்காமார், மச்சாள்மார், ராதா (இலண்டன்) ஆகியோர் பல்கலைகளும் கற்று சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

# பிரான்ஸ் மாவீரர் நாள் – 99

பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்களே
எம் மண்ணின் விடுதலைக்காய் மடிந்த மாவீரர்
மலர்ப்பாதங்களிற்கு ஒளி தீபம் ஏற்றிவைப்போம்.

28.11.1999 ஞாயிறு பிற்பகல் 3.00 மணி
L.S.C. - 144/146, Avenue du Prèsident Wilson,
93210 La Plaine St. Denis.

M°: Porte de la Chapelle/
RER-B: La Plaine Voyageurs.

*(நிகழ்ச்சிகள் யாவும் குறிப்பிட்ட நேரத்திற்கே ஆரம்பமாகும் என்பதை அறியத் தருகின்றோம்)*

***குறிப்பு:*** நடைபெறவிருக்கும் இம் மாவீரர்நாள் நிகழ்வில் எம் தாயக விடுதலையை உயிர் மூச்சாகக்கொண்டு உயிர்நீத்த மாவீரர்களின் பெற்றோர்களுக்கு, விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால், பிரான்சில் வாழும் மாவீரர்களின் பெற்றோர்கள் தயவு செய்து எம் அலுவலகத்திற்கு நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ அன்றில் உங்கள் பிரதேசங்களிற்கு வரும் எம் காரியாலயப் பிரதிநிதிகளூடாகவோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் இம் மாவீரர்நாள் நிகழ்வை முன்னிட்டு எம்மால் நடாத்தப்படவுள்ள பேச்சு, கவிதை, சிறுகதை, பாட்டு, ஓவியப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோரும் மேல் குறிப்பிட்ட வழிமுறைகள் மூலம் இவை சம்பந்தமான மேலதிக விபரங்களைப் பெறலாம் என்பதையும் அறியத்தருகின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
தொலைபேசி: 01 43 58 11 42


ERRANCES TRAVELS

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37
(ADV)

## தென்தமிழீழச் செய்திகள்

# சத்துருக்கொண்டான் படுகொலையின் ஒன்பதாண்டு நினைவுகள்

(12.09.99)

1990-ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் சிறீலங்காப் படைகள் மேற்கொண்ட படுகொலைகளில் மிகப்பெரும் படுகொலையான சத்துருக்கொண்டான் படுகொலையின் 9வது ஆண்டு நினைவுகள் கடந்த வியாழனன்று பனிச்சையடி பிள்ளையாரடி, கொக்குவில் ஆகிய இடங்களில் அனுட்டிக்கப்பட்டதுடன், கொல்லப்பட்ட மக்களின் நினைவாகச் சத்துருக்கொண்டானில் அமைந்துள்ள ஆலயங்களில் விசேட பூசைகளும், அஞ்சலிக்கூட்டங்களும் நடாத்தப்பட்டன. 1990 செம்டெம்பர் 9-ம் திகதி மாலை ஐந்து மணியளவில் சத்துருக்கொண்டான் பனிச்சையடி, பிள்ளையார் கோவிலடி, கொக்குவில் ஆகிய கிராமங்களில் இருந்து 184 பொதுமக்கள் படையினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டுப் பின்னர் படுகொலைசெய்யப்பட்டிருந்தனர். கொல்லப்பட்டவர்களில் 95 பெண்களும், 51 குழந்தைகளும் அடங்குவர் என சிறீலங்கா தரப்பின் ஜனாதிபதி ஆணைக்குழுவே தெரிவித்திருந்தது. இப்படுகொலையில் சில குடும்பத்தில் ஒருவர் கூட மிச்சமின்றி கொல்லப்பட்டுள்ளனர். அதன் 9வது நினைவு தினமே கடந்த வாரம் நினைவு கூரப்பட்டது.

இச்சம்பவத்தில் படுகாயங்களுடன் உயிர்தப்பிய க.கிருஸ்ணகுமார் என்ற இளைஞர் இச் சம்பவம்பற்றித் தெரிவிக்கையில், சம்பவம் நடந்த அன்று மாலை 6 மணியளவில் சத்துருக்கொண்டான் இராணுவ முகாமுக்கு விசாரணைக்கென நாம் அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு பல அறைகளில் கொஞ்சக்கொஞ்சப் பேராக அடைத்துவைக்கப்பட்டோம். அதன் பின்னர். 7.30 மணியிருக்கும் அறைக்குள் வந்த படையினர் நான்கு நான்கு பேராகக் கண்களைக் கட்டி வெளியில் கொண்டுசென்று கூரிய வாளினாலும் கத்தியினாலும் வெட்டினார்கள். அதன் பின்னர் அரையுயிர்களுடனே அங்குள்ள குழியொன்றில் போட்டு மூடினார்கள், நானும் அவ்வாறு வெளியே அழைத்துச் செல்லப்பட்டு பலத்த வெட்டுக்காயங்களுக்கு உள்ளானபோதும் படையினருக்குத் தெரியாமல் தவழ்ந்து சென்று அருகிலிருந்த முந்திரிகை மரம் ஒன்றின்கீழ் மறைந்திருந்து நடந்தவற்றை அவதானித்தேன் எனத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் கூறும்போது கைக்குழந்தையுடன் ஒரு பெண்ணை இழுத்துவந்தவர்கள் குழந்தையைப் பறித்தெடுத்து ஒரேவெட்டில் இருதுண்டாக்கி வீசினர் என்றும், மற்றொரு மூன்று மாதக் குழந்தையைப் படையினன் ஒருவன் தலைகீழாகப்பிடித்து நிலத்தில் அடித்துக் கொன்றுவிட்டு வீசியதாகவும் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் பொதுமக்களை முகாமுக்குக் கொண்டு சென்றபின் அவர்களைத் தேடிச் சென்றபோது சம்பவத்தை நேரில் கண்ட கசிவக்கொழுந்து என்பவர் தெரிவிக்கையில், தான் முகாமிற்குச் சென்றபோது மக்களின் அழுகுரல்கள் கேட்டதாகவும் அதனால் பயத்தில் தான் முகாமுக்குள் செல்லாது வேலியோரமாக மறைந்திருந்து பார்த்ததாகவும், அப்போது மக்களின் அழுகுரல்களுக்கு, இடையே எங்களுக்கு தெரியாது, ‘எங்களுக்குத் தெரியாது. ஐயோ எங்களைக் கொல்லவேண்டாம்’ என கத்தும் சத்தமும் குழந்தைகளின் அழுகுரல் சத்தங்களும் கேட்டதாகத் தெரிவித்திருந்தார்.

இப் படுகொலை நிகழ்ந்தபோது சத்துருக்கொண்டான் இராணுவமுகாம் பொறுப்பதிகாரியாக ‘கப்ரன் காமினி திசவர்ணகுலசூரிய இருந்தார். இவர் தற்போது லெப்ரினன் கேணலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்தவாரம் மட்டக்களப்பு பல்கலைக்கழக அகதிமுகாமில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டவர்களின் படுகொலை நினைவும் அனுட்டிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

## மக்களைக் கொண்டு அவர்களின் பணத்தினாலேயே சோதனைச்சாவடி அமைத்த பொலிசார்

(12.09.99)

மட்டு. மயிலங்கரையில் உள்ள சோதனைச் சாவடியொன்றை அப்பகுதித் தமிழ்மக்களை அச்சுறுத்தி அவர்களின் பணத்தினாலேயே சிறீலங்கா பொலிசார் கட்டவைத்துள்ளனர். கடந்த 6-ம் திகதி இரவு நேரத்தில், சிறீலங்கா பொலிசாரின் இச் சோதனைச்சாவடி இனந்தெரியாதோரால் எரிக்கப்பட்டது. ஆனால் சோதனைச் சாவடி எரிக்கப்பட்ட மறுநாள் 7-ம் திகதி மயிலங்கரைக் கிராம மக்கள் அனைவரையும் சோதனைச் சாவடிக்கு வருமாறு அழைத்த பொலிஸ் அதிகாரி, இச்சோதனைச் சாவடியைத் தமிழ் மக்களாகிய நீங்களே எரித்துள்ளீர்கள் என தெரிவித்துள்ளதுடன், இதனை நீங்கள் கல்லால் கட்டித்தர வேண்டும் எனவும் இதனைச் செய்யாவிட்டால் கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன், உங்களில் பலரைக் கைது செய்து தடுப்பு முகாங்களுக்கும் அனுப்பி வைப்பேன், எனவும் அச்சுறுத்தியுள்ளார். ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதால் நாங்கள் இரவானதும் வீட்டை விட்டு வெளியே வருவதில்லை என மக்கள் தெரிவித்த போதிலும் பொலிசார் அதனை ஏற்க மறுத்துள்ளனர். பொலிசாரின் இவ் அச்சுறுத்தலினால் அக்கிராம மக்கள் தமது செலவிலேயே சோதனைச்சாவடியை அமைத்துக்கொடுத்துள்ளனர்.

இதேவேளை இச் சோதனைச் சாவடி முன்னர் தென்னோலையாலேயே அமைக்கப்பட்டிருந்ததாகவும் தற்போது மக்களின் பணத்தினால் அதனைக் கற்களினால் கட்டியமைத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வைத்தியசாலைக்குச் செல்ல படையினர் தடை தாயும் குழந்தையும் மரணம்

(12.09.99)

சிறீலங்கா இராணுவத்தினர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு அனுமதி மறுத்ததால் கர்ப்பிணிப் பெண் ஒருவரும் அவருக்குப் பிறந்த குழந்தையும் மரணமான சம்பவம் ஒன்று மட்டு. செங்கலடி பகுதியில் உள்ள குமாரவேலியார் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது. கடந்த வாரம் திருமதி வினாயகமூர்த்தி யோகராணி(27) என்ற நான்கு குழந்தைகளின் தாயாருக்கு பிரசவவலி ஏற்பட்டபோது அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு உறவினர்கள் முயற்சி செய்தனர். இரவுவேளை ஆதலால் அப்பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரிடம் உறவினர்கள் அனுமதி கோரியுள்ளனர். ஆனால் வீட்டைவிட்டு யாரும் வெளியில் வரக்கூடாது எனப் படையினர் கடும் உத்தரவிட்டனர். இதனால் இப் பெண் வைத்திய சாலைக்குச் செல்ல முடியாது வீட்டிலேயே குழந்தையைப் பிரசவித்தார். எனினும் போதிய மருத்துவ உதவி உடனடியாகக் கிடைக்க முடியாததால் தாய் சற்று நேரத்தில் மரணமடைந்துள்ளார். பிறந்த குழந்தையைக் காலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோது அங்கு குழந்தையும் மரணமாகியுள்ளது. படையினரின் இச் செயலினால் நான்கு குழந்தைகளும் தாயை இழந்துள்ளனர்.

## புலிகள் மோட்டார் தாக்குதல் இரு பொலிசார் படுகாயம்

(12.09.99)

மட்டு. வாழைச்சேனையில் விடுதலைப் புலிகளின் பீரங்கிப் படையினர் நடாத்திய மோட்டார் தாக்குதலில் இரு பொலிசார் படுகாயமடைந்துள்ளனர். கடந்த வியாழனன்று இரவு 7 மணியளவில் வாழைச்சேனை நகரில் உள்ள உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தின் மீது புலிகள் தாக்குதலைத் தொடுத்தபோது இரு பொலிசார் காயமடைந்துதனர். காயமடைந்த பொலிசார் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலையடுத்துப் படையினர், குண்டுத்தாக்குதல் நடாத்தப்பட்ட இடத்தை நோக்கி எறிகணைத் தாக்குதலையும் துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்துள்ளனர். எனினும் சேதவிபரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் மட்டக்களப்பில் படிப்படியாக மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியிருப்பதையே இத் தாக்குதல் காட்டுகின்றது என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## சிப்பாய் சகோதரன் கொல்லப்பட்டதால் பெண் சிப்பாய் தற்கொலை

(12.09.99)

மட்டக்களப்பு நகரில் இராணுவ பெண் சிப்பாய் ஒருவர் நேற்று மாலை தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார். மட்டக்களப்பு புதிய பாலச் சந்தியில் உள்ள சோதனைச்சாவடியில் கடமையாற்றிய இராணுவ சிப்பாயான சாந்தமாலி (20) என்பவரே தற்கொலை செய்துகொண்டவராவார். நேற்று பிற்பகல் சோதனைச் சாவடியில் கடமையில் இருந்ததாகவும், அவ்வேளையில் தான்வைத்திருந்த துப்பாக்கியால் தனது வலதுபக்க வயிற்றில் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. பெற்றோரை இழந்த நிலையில் வீட்டில் ஏற்பட்ட வறுமை காரணமாக இவரது சகோதரன் இராணுவத்தில் சேர்ந்ததையடுத்து இப் பெண்ணும் இராணுவத்தில் சேர்ந்துகொண்டார்.

இராணுவச் சிப்பாயாக இருந்த இப்பெண்ணின் சகோதரன், அண்மையில் விடுதலைப் புலிகளுடான மோதல் ஒன்றில் கொல்லப்பட்டதையடுத்து இப் பெண் தான் அனாதையாகிவிட்டதாகக் கூறிக் கவலையோடு இருந்ததாகவும், இதன் பின்னரே இவர் தன்னைத்தானே சுட்டு, தற்கொலை செய்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


## ஆசிரியர்கள் தேவை

பிரான்சில் வளரும் நம் சிறார்களின் எதிர்கால நலனைக் கருத்தில்கொண்டு நம் அடுத்த தலைமுறை வரும் நூற்றாண்டில் தலை நிமிர்ந்து வாழ்ந்திட வழிகோல சமூக ஆர்வலர்களும் தமிழ் ஆர்வலர்களும் உருவாக்கிய தொண்டு நிறுவனம் தமிழ்ச்சோலை. தன் பணிகளின் விரிவாக்கத்திற்கு பின்வரும் துறைசார்ந்த ஆசிரியர் வழிகாட்டிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

**மொழியியல்:** தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன்.

**நுண்கலை:** நடனம், சங்கீதம், இசைக்கருவிகள்....

**கணினியியல்:** பள்ளிப்பாடங்களுக்கான மீட்டல்

விண்ணப்பங்களுடன், சுய விபரக்கோவை (C.V) இணைத்து அனுப்பவேண்டிய முகவரி:

**தமிழ்ச்சோலை**
22, Rue Perdonnet, 75010 Paris.

Pub Gra



## திருத்த வேலைகள்

T.V டெக் திருத்துவதற்கு அனுபவம் வாய்ந்த ஆட்கள் தேவை. கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**WEINGARTEN**
Hifi - TV - VIDEO
Lotkeweg 3, 59229 Ahlen
Tel: 023 82/831 02, Fax: 831 03

Pub

# மின்மாற்றியை காத்த ஊர்காவல் படையினர் சுட்டுக்கொலை

(12.09.99)

மட்டுஅம்பாறை மாவட்டத்தில் உள்ள சம்மாந்துறைப் பகுதியில் அமைந்துள்ள பொதுச் சந்தைக்கு அருகில் உள்ள மின்மாற்றிப் பாதுகாப்பிற்கென நிறுத்தப்பட்டிருந்த ஊர்காவல் படையைச்சேர்ந்த இருவர் இனந்தெரியாத இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இச் சம்பவம் கடந்த செவ்வாய் இரவு 8மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இரவு நேரத்தில் துவிச்சக்கர வண்டியில் வந்துகொண்டிருந்த இரு இளைஞர்கள் இவர்களுக்கு அருகில் வந்ததும் திடீரெனத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து அவர்களைக் கொன்றுவிட்டு அவர்களிடம் இருந்த ஆயுதங்களையும் எடுத்துச் சென்றுவிட்டனர் என, சம்மாந்துறை சிறீலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர். இலங்கையில் உள்ள மின்மாற்றிகள் மீது தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொண்டு வருவதால் அவற்றினைப் பாதுகாக்க ஒவ்வொரு மின்மாற்றிக்கும் அருகில் அதனைக் காவல் செய்வதற்கு படையினரும், பொலிசாரும் சிறீலங்கா அரசினால் நியமிக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

# நல்லூர் தேர்த்திருவிழா

(12.09.99)

நல்லூர் கந்தசாமி ஆலய தேர்த்திருவிழா கடந்த புதனன்று நடைபெற்றது. இத் தேர்த்திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டுள்ளனர். பறவைக்காவடி, தூக்குக்காவடி, செதில் காவடி என ஏராளமான பக்தர்கள் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றியதைக் காணக் கூடியதாக இருந்ததாக யாழ். செய்திகள் தெரிவிக்கின்றன. இத் தேர்த்திருவிழா நிகழ்வுகளை சிறீலங்கா ஒளி, ஒலி பரப்பு கூட்டுத்தாபனங்கள் நேரடி வர்ணனை செய்தன.

இதேவேளை மறுநாள் தீர்த்தோற்சவம் இடம்பெற்றுள்ளது. ஆனால் இம்முறை தீர்த்தக்கேணியில் இறங்கி குளிப்பதற்கு பக்தர்கள் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இது குசும்புங்கோ...!

★ யாழ். மக்களுக்கு உலருணவு அனுப்பாவிட்டால் நான் உண்ணாவிரதம் இருப்பேன். இரு மாதங்களாக தொடரும் பாராளுமன்ற பகிஸ்கரிப்பு தொடர்ந்து நீடிக்கும்

*- டக்ளஸ் தேவானந்தா*

★★★

★ மக்களுக்காக பாடுபடுவதற்காக தங்கள் வசதி வாய்ப்புக்கள் அனைத்தையும் விட்டு வந்தவர்கள் அநியாயமாக கொல்லப்பட்டுள்ளனர். இந் நிலை தொடருமானால் தமிழினம் மேலும் மோசமாகப் பாதிக்கப்படும்.

*- மாணிக்கதாசன் மரணச்சடங்கில் சித்தார்த்தன்*

★★★

★ வன்னிப்பகுதி ஆரம்பத்தில் மக்களே இல்லாத பகுதியாகத்தான் இருந்தது. தமிழர் புனர்வாழ்வு புனரமைப்பு, காந்தியம் என்று இரு அமைப்புக்களை நிறுவி அதனூடாக இந்தியாவிற்கு அனுப்பப்படவிருந்த ஒரு இலட்சம் தமிழர்களை வன்னிப் பகுதியில் குடியமர்த்தியுள்ளார்கள். சமாதானத்தை மேற்கொள்வதற்காக சில மதத்தலைவர்களும், பௌத்த பிக்குகளும் வடக்கு கிழக்கு பகுதிகளுக்குச் செல்கின்றனர். ஆனால் இவர்கள் சமாதான யாத்திரை போகும்போது வன்னிப்பகுதியை யுத்த பிரதேசமாக மாற்றிக்கொண்டு சண்டையிடுகிறார்கள் புலி இனவாதிகள்.

*- சிங்கள இனவாத அமைப்பான – வீரவிதான*

★★★

# திருவிழாவிற்கு சென்ற பக்தர்கள் படையினரால் விரட்டியடிப்பு

(12.09.99)

யாழ். வடமராட்சி கிழக்குப் பகுதி மருதங்கேணியில் அமைந்துள்ள விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் கலந்துகொள்ள மாமுனை, நெல்லியான், நாகர்கோவில், செம்பியன்பற்று ஆகிய பகுதிகளில் இருந்து சென்ற பக்தர்களை ஆலயத்திருவிழாவில் கலந்துகொள்ள விடாது மருதங்கேணியில் இராணுவ சோதனை சாவடியில் வைத்து படையினர் விரட்டியடித்துள்ளனர்.

கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற இச் சம்பவத்தால் பக்தர்கள் திருவிழாவில் கலந்துகொள்ளாது வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

படையினரின் இந் நடவடிக்கையால் கோயிலுக்கு தாங்கள் வைத்திருந்த நேர்த்திக்கடன்களை நிறைவேற்ற முடியவில்லை என பக்தர்கள் மிகவும் வேதனையடைந்துள்ளனர். இதுபற்றி படையினரிடம் பலவாறு எடுத்துக் கூறியும் அவர்கள் சம்திக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. வழக்கமாக இத்தடை அரணைத் தாண்டி மக்கள் தினமும் மருதங்கேணி பகுதிக்குச் சென்று வருவதாகவும், ஆனால் திருவிழாவுக்கு பக்தர்களைச் செல்லவிடாது படையினர் தடுத்ததன் நோக்கம் என்ன என்பது தெரியவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மக்களை ஆலயங்களுக்குச் செல்லவிடாது தடுத்து வரும் படையினர், தாம் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் உள்ள ஆலயங்களை அழித்து அப் பகுதிகளில் பௌத்த விகாரைகளை அமைத்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# தாக்குதலை நடாத்தாவிட்டாலும் மாதாந்தம் 100 கோடி செலவு

(12.09.99)

நாளைக்கு ஒரு துப்பாக்கிக் குண்டைத்தன்னும் பயன்படுத்தாவிட்டாலும் சிறீலங்கா இராணுவச்செலவாக மாதாந்தம் 100 கோடியை அவசியம் செலவிட வேண்டியுள்ளது என முன்னாள் இராணுவ தளபதி ஜெரி டி சில்வா தெரிவித்துள்ளார். ராய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந் நிறுவனத்திற்குச் செவ்வி வழங்கிய இராணுவத்தளபதி சிறீலால் வீரசூரியா தெரிவிக்கையில், தமது பாதுகாப்பிற்காக தங்கள் உயிர்களைத் தியாகம் செய்ய கிளர்ச்சியாளர்கள் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அந்தவிதமான தியாகத் தன்மை இங்கு இராணுவத்தினரிடம் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

# போலியோ தடுப்பு தினத்திற்கு அமைதிகாக்க இரு பகுதியினரும் இணக்கம்

## – யுனிசெப்

(12.09.99)

போலியோ தடுப்பு மருந்து கொடுக்கும் தினத்தை முன்னிட்டு அதனைச் சுமூகமாக நடாத்துவதற்கு செப்டெம்பர் 10-ம், 11-ம் திகதிகளிலும், ஒக்டோபர் 15-ம், 16-ம் திகதிகளிலும் யுத்தத்தில் ஈடுபடாது அமைதி காக்குமாறு சிறீலங்கா அரசையும் விடுதலைப்புலிகளையும் கேட்டுக்கொண்டபோது இதற்கு இரு பகுதியினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர் என யுனிசெப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள யுனிசெப் பிரதிநிதியான கொலின் கிளென்னியால் விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து இரு பகுதியினரும் இதற்கு இணக்கம் தெரிவித்திருப்பதாக யுனிசெப் தெரிவித்துள்ளது. போலியோ தடுப்பு தினத்தை முன்னிட்டு கடந்த வருடங்களில் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்து அதனை நடைமுறைப்படுத்தியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# 13 வயது சிறுவன் படையினரால் கைது

(12.09.99)

கதிரவெளி பகுதியில் புதிதாக முகாமமைத்துள்ள படையினர் பலரைக் கைது செய்த விசாரணைக்கென தடுத்து வைத்துள்ளனர்.

இதேவேளை கதிரவெளி புதூரைச் சேர்ந்த 13 வயதுடைய நவரத்தினம் சுவேந்திரன் என்ற சிறுவனும் கடந்த 2-ம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட பின்னர், மேலதிக விசாரணைகளுக்காக மட்டக்களப்பு நாசகார தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# கண்ணிவெடி அகற்றும் நிபுணர் காயம்

(12.09.99)

யாழ். கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் கண்ணிவெடி அகற்றிக் கொண்டிருந்தபோது அது வெடித்ததில் அவற்றினை அகற்றும் அதிகாரி ஒருவர் காயமடைந்தார். கடந்த புதன்கிழமை நண்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கண்ணிவெடியகற்றும் குழுவைச் சேர்ந்த ஷோகோ என்ற சிம்பாபே நாட்டைச் சேர்ந்தவரே காயமடைந்துள்ளார். கண்ணிலும், முகத்திலும் காயமடைந்த நிலையில் இவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை இப்பகுதியில் 300 கண்ணிவெடிகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கலகரமான நிகழ்ச்சிகள், மற்றும் மேடை நிகழ்ச்சிகள் அனைத்திலும் இசைமழையில் நனைந்திட ஐரோப்பா புகழ்

* ஈழநிலா *

தொடர்புகட்கு:
இயக்குநர் எஸ்.எஸ். தில்லைச்சிவம்
Tel: 01 40 37 56 69

சர்வதேச தமிழ் ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம் INTERNATIONAL TAMIL BROADCASTING CORPORATION

ITBC
(FIRST DIGITAL RADIO IN TAMIL)

24 மணி நேர சர்வதேச தமிழ் வானொலி

(கனடாவிலிருந்து நேரடியாக ஒலிபரப்பாகின்றது)
Eutelsat Hotbird 3 இல் 12475.5 Mhz

TECHNICAL PARAMETERS

| | | | |
|---|---|---|---|
| Satellite: | Hotbird 3-13 degrees East | Polarization: | Horizontal |
| Platform: | DVB/MPEG-2(MCPC) | Symbol Rate: | 27,5 MS/s |
| Freqyency: | 1247550 | FEC: | 3/4 |

ஒலிபரப்பாகும் நாடுகள்:
42 ஐரோப்பிய நாடுகள் (Eutal sat Hotbird 3 இல்)
Canada உட்பட வட அமெரிக்கா (Fm சிறப்பலை வரிசையில்)
மத்திய கிழக்கு நாடுகள் (Eutal sat hot bird 3 இல்)
வெகுவிரைவில் இலங்கை, இந்தியா [சிற்றலை வரிசை]

ITBC இற்கு கடமைபுரிய சகல நாடுகளிற்கும் பிரதிநிதிகள் கோரப்படுகின்றனர்.

தலைமையகத் தொடர்புகளுக்கு:
Tel: 1-416 412 7384 / Fax: 1-416 412 7386

# மட்டக்களப்பில் 8 மாதங்களில் 132 பேர் காணாமல் போயுள்ளனர்

(11.09.99)

இவ் வருடத்தில் ஓகஸ்ட் மாதம் வரை மட்டக்களப்புப் பிரதேசத்தில் காணாமல் போனவர்களில் 132 பேர் பற்றிய முறைப்பாடுகிடைத்ததாகவும் இவர்களில் 117 பேர் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டனர் எனவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்புப் பிரதிநிதி கிறிஸ்ரோப் ஹாட்மன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் வியாழன் மாலை நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இவ்வாண்டு இச்சங்கம் மேற்கொண்ட பணிகள் பற்றி அவர் விபரமாகக் கூறினார்.

இச் சந்திப்பின்போது ஐ.சி. ஆர்.சி. தகவல் தொடர்பு அதிகாரி ஹர்சா குணவர்தன, சுகாதாரப்பிரதிநிதி ஆன் லைஸ் பீட்டர்சன், விவசாய நிபுணர் வெயின் பௌமன், பொதுஜனத் தொடர்பு அதிகாரி உமாகாந்தன் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

இக்காலப்பகுதியில் 2158 பேர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்புகொண்டு தமக்கு அல்லது குடும்பத்தவர்களுக்கு உதவி அல்லது பாதுகாப்பு வழங்குமாறு வேண்டினார்கள். யுத்தம் தொடர்பாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களை ஐ.சி. ஆர்.சி. பதிவு செய்து வருகிறது. இந்த எட்டுமாத காலத்தில் புதிதாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள 155 பேரைச் சந்தித்துப் பதிவு செய்ததுடன், ஏற்கனவே தடுத்து வைக்கப்பட்டுள்ள 430 பேரையும் சந்தித்து அவர்களின் செய்திகளைக் குடும்பத்தினருக்கு வழங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். மட்டக்களப்பு பிரதேசத்தில் யுத்தத்தில் இறந்தவர்களில் 43 சடலங்களைப் பொறுப்பேற்று சம்பந்தப்பட்டவர்களிடம் கையளித்ததாகவும் அவர் வழங்கிய தகவலில் தெரிவித்தார்.

இது தவிர யுத்தப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சுகாதார விவசாய நீர்ப்பாசன வசதிகளையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வழங்கி வருகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் நடத்தப்பட்ட மருத்துவ சேவைகளின்போது 38686 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தற்போது இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் மருத்துவ சேவைகளை நடத்துவதற்கு சிறீலங்காப் பாதுகாப்புச் சபை அனுமதி வழங்க மறுத்துள்ளதாக வெளிவந்த செய்தி பற்றிக் கேட்கப்பட்டபோது, அது உண்மைதான், ஆனால் வைத்தியசேவை முகாம்களை மீண்டும் நடத்துவதற்கான அனுமதியை எதிர்பார்த்திருக்கிறோம் என அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

## குருநகர் மீனவர்களுக்கு அடிக்கடி மாறும் அடையாள அட்டைகள்

யாழ். குருநகர்ப் பகுதி மீனவர்களுக்கு சிறீலங்கா இராணுவத்தினரால் வழங்கப்படும் விசேட அடையாள அட்டைகள் அடிக்கடி மாற்றப்படுகின்றன. குடாநாட்டுக்கு இராணுவத்தினர் வந்த பின்னர் குருநகர் மீனவர்களுக்கு இதுவரை 7 தடவைகள் அடையாள அட்டைகள் மாற்றப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது. குருநகர் பகுதிக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி மாற்றப்படும் போது அவரின் இடத்திற்கு வரும் புதிய இராணுவ அதிகாரி முதல் வேலையாக மீனவர்களின் அடையாள அட்டைகளை மாற்றுவது வழமையாகிவிட்டதாக மீனவர்கள் கூறகிறார்கள்.

தற்போது நீலம், சிவப்பு, மஞ்சள் நிறங்களில் ஒரு சங்கத்திற்கு ஒரு நிறமென குருநகரில் உள்ள மூன்று கடற்தொழிலாளர்கள் சங்க உறுப்பினர்களுக்கும் மீனவர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## பிஸ்ரல் குழுவினரால் பொலிஸ் அதிகாரி படுகாயம்

(12.09.99)

மன்னாரில் இருந்து தாழ்வுப்பாட்டிற்கு சென்றுகொண்டிருந்த சிறீலங்கா பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் பிஸ்டல் குழுவினரால் சுடப்பட்டு படுகாயமடைந்துள்ளார். கடந்த வியாழன் மதியம் 11.30 மணியளவில் பேருந்தில் தாழ்வுப்பாடு பேருந்து நிலையத்தில் வந்திறங்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது இவரை நோக்கி துப்பாக்கிச் சூடு நிகழ்த்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத் தாக்குதலை புலிகளின் பிஸ்டல் குழுவினரே நடாத்தியுள்ளனர் என தெரிவிக்கும் பொலிஸ் தரப்பு, தாக்குதலைத் தொடர்ந்து இப் பகுதியை சுற்றி வளைத்து இராணுவத்தினருடன் இணைந்து தீவிர தேடுதலை நடாத்தினர்.

## சிங்களப் பத்திரிகை ஆசிரியர் சுட்டுக்கொலை

(10.09.99)

'சட்டன' சிங்கள பத்திரிகையின் பிரதம ஆசிரியர் இனந்தெரியாதோரால் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் அவரது வீட்டின் முன்னால் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என்று மிரிஹான பொலிசார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நுகேகொடை பெங்கிரிவத்தை வீதியில் இடம்பெற்றுள்ளது.

கொலையுண்ட பத்திரிகையாசிரியர் ரோஹனகுமார என்பவர் ஆவார்.

'சனல்—9' விவகாரம் சம்பந்தமாகக் கடந்த வாரம் 'சட்டன'வில் பல்வேறு திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி இருந்தன என்று கூறப்படுகிறது.


# உங்கள் தலைமுடி உதிர்கின்றதா? கவலை வேண்டாம் இதோ ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு

**தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை, மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம் போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!**

இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வை தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.

**இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.**

**Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.**

இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.

எமது புதிய தயாரிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் சர்மம் பளபளப்புத் தன்மையையும், ஆரோக்கியமான தோலினையும், பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது Naturina® தயாரிப்புக்களான கூட்டுக்குளிகைகள், ஷம்பு, கூந்தல் தைலம் (Capsules. Shampoo, Hair tonic) ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பயன் நிச்சயம்.

***இன்றே பாவியுங்கள் Naturina® உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்!***






**எமது ஸ்தாபனத்தின் தயாரிப்புக்களை உபயோகித்து பலன் பெற்றோர் கூறுவதைக்கேட்டு நீங்களும் பயன்பெறுங்கள்.**

**சுவிற்சலாந்திலிருந்து: திரு. ராஜன்.**
*நான் இந்த Naturina® தயாரிப்புக்களைக் கடந்த 3 மாதங்களாகப் பாவித்து குறுகிய காலத்தில் எனது தலைமயிர் உதிர்வைக் குறைத்துக்கொண்டேன்.*

**டென்மார்க்கிலிருந்து: திருமதி துரைராஜா.**
*நான் Naturina® மாத்திரைகளைப் பயன்படுத்தி எனது தோல் பிரச்சினைகளையும் நக அழகையும் பேணிக்கொண்டுள்ளேன்.*

**இங்கிலாந்திலிருந்து: திருமதி ரேணுகாதேவி.**
*இந்த Naturina® தயாரிப்புக்களைப் பற்றி பத்திரிகையில் படித்தபோதும் அதன் பிரதி பலன்களை நான் முழுமையாக நம்பவில்லை. இருந்தும் இவற்றை பயன்படுத்தியதில் முழுப் பலனையும் அடைந்துள்ளேன்.*

மேலதிக விபரங்களுக்கு:
**Intercare Handels GmbH**
Munster str 5, 59065 Hamm-Germany
Tel: 0049 2381 688347 / Fax: 0049 2381 688349 (நாம் தமிழும் கதைப்போம்)
Internet: http://www.intercare-naturina.com

பிரித்தானிய தொடர்புகளுக்கு:
Naturina® Uk LTD London
Tel: 0171-5150550
Mobil: 07930-471356

# செம்மணிப் புதைகுழிகள்


# நொருக்கப்பட்ட நிலையில் வெளிவரும் தமிழரின் எலும்புக்கூடுகள்

## 1வது நாள்

### இலக்கத்தகட்டுக்கு உரிமையாளர் யார்?

செம்மணி புதைகுழிகள் இரண்டாம் கட்டமாக கடந்த திங்களன்று *(6.9.99)* முதல்நாள் தோண்டப்பட்டபோது மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகடொன்று மட்டுமே மீட்கப்பட்டது. இப் புதைகுழியில் ஆலயக் குருக்களும் அவரது உதவியாளர் ஒருவரும் மோட்டார் சைக்கிளில் வரும்போது கொன்று புதைக்கப்பட்டதாக ராஜபக்ச தனது சாட்சியத்தில் தெரிவித்திருந்தார். எனினும் மோட்டார் சைக்கிளில் இலக்கத்தகடு மட்டுமே மீட்கப்பட்டது. எலும்புக் கூட்டையோ மோட்டார் சைக்கிளின் ஏனைய பாகங்களையோ அங்கு காணவில்லை. இவை படையினரால் அகற்றப்பட்டிருக்கலாம் என, பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மீட்கப்பட்டுள்ள 12-9171 என்ற இலக்கத்தையுடைய இந்த மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் பற்றிய விபரங்கள் தெரிந்தோர் தங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் பொது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.




## 2வது நாள்

### இரு எலும்புக் கூடுகள் மீட்பு

செம்மணிப் புதைகுழிகள் தோண்டும் நடவடிக்கை ஆரம்பமாகிய இரண்டாம் நாள் *(07.09.99)* செவ்வாய்க்கிழமை இரு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. புதைகுழி தோண்டப்பட்டபோது இரண்டு எலும்புக் கூடுகளும் எதிரெதிராக போடப்பட்டு மூடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. செம்மணியில் இருந்து 100 யார் தொலைவில் யாழ்ப்பாண வீதிக்குத் தெற்குப் பக்கமாக ராஜபக்சவினால் அடையாளம் காட்டப்பட்ட புதைகுழியிலேயே இவ் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில் ஐந்தடி ஆழத்துக்குத் தோண்டப்பட்டபோது இரு எலும்புக் கூடுகள் தென்பட்டதாகவும் அவ் எலும்புக் கூடுகளின் தலையில் தலைமுடி இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. எலும்புக்கூடுகளை குழியில் இருந்து வெளியே எடுப்பதற்கு முன்னர் அவைகள் வீடியோ ஒளிப்பதிவு செய்யப்பட்டு புகைப்படங்களும் எடுக்கப்பட்டுள்ளன. இக்குழியைத் தோண்டும்போது நான்கு அடிகளில் தண்ணீர் வரத்தொடங்கி விட்டதாகவும் எனினும் தண்ணீரை வெளியே அள்ளி ஊற்றியபடி தொடர்ந்து ஒரு அடி தோண்டியபோது எலும்புக்கூடுகள் தென்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 3வது நாள்

### ஐந்தடி உயரமுள்ள எலும்புக்கூடு மீட்பு

செம்மணியை தோண்டும் பணியின் மூன்றாவது நாளான புதன்கிழமை *(08.09.99)* மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் போது ஒரு எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. திங்கட்கிழமை தோண்டப்பட்ட புதைகுழிக்கு ஐந்தடி இடைவெளியில், ராஜபக்சவினால் அடையாளம் காட்டப்பட்ட கண்டி வீதிக்கு அருகிலுள்ள பூவரச வேலியின் அருகிலேயே, இவ் எலும்புக் கூடு மீட்கப்பட்டது. காலை ஒன்பது மணிக்கு குழியைத் தோண்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு ஐந்தடி ஆழம் தோண்டிச்சென்றபின் 11 மணியளவிலேயே எலும்புக்கூடு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

எலும்புக் கூட்டை வெளியே எடுப்பதற்கு முன்னர் அதன் உருவத்தை வரைபடமூலம் வரைந்ததன் பின்னரே அது வெளியே எடுக்கப்பட்டு, ஐந்தடி உயரமுள்ளது என அளவிடப்பட்டுள்ளது. இக்குழியில் இருந்த மண்ணும் ஆராய்ச்சிக்காக எடுக்கப்பட்டது.

## 4வது நாள்

### மூன்று மண்டை ஓடுகள் மீட்பு

செம்மணியில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் வீதி, செம்மணியில் இருந்து நல்லூர் செல்லும் வீதி ஆகிய பகுதிகளுக்கு இடைப்பட்ட பகுதியில் இராணுவ காவலரணுக்குப் பின்னால் பிட்டியாக காணப்பட்ட பகுதியில் மண் அகழப்பட்டது. சுமார் 50 யார் நீள அகலமான பகுதியில் தோண்டப்பட்ட போது ஒரு மண்டையோடு முதலில் தென்பட்டது. அதனை ஆராய்ந்தபோது அதில் ஒரு மூக்குத்தியும் காணப்பட்டுள்ளது. எனவே அது ஒரு பெண்ணுடையதாக இருக்கலாம் என தீர்மானிப்பட்டது. இதேவேளை அம் மண்ணில் ஏராளமான மனித எலும்புகள் நொருங்கிய நிலையில் காணப்பட்டதைத் தொடர்ந்து அரித்தட்டின் மூலம் மண் அனைத்தும் அரிக்கப்பட்டு ஏராளமான உடைந்த எலும்புகள் எடுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து தோண்டிய போது மேலும் இரு மண்டையோடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் மனித அவையவங்களும், பெண்கள் அணியும் பாவாடைகளின் துண்டுகளும், உள்ளாடைகளின் இலாஸ்ரிக் துண்டுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மண்டையோடுகள் அனைத்தும் வெடித்துக் காணப்பட்டதால் கனமான ஆயுதங்களால் கடுமையாக தாக்கப்பட்டு இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. மேலும் தொடர்ந்து தோண்டிய போது பெண்ணின் பின்னப்பட்ட நிலையில் இருந்த தலைமுடியும், ஆணின் உள்ளாடையும், குருசு அடையாமிட்ட பென்ரன் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இங்கு கண்டெடுக்கப்பட்ட மண்டையோடுகள் பார்க்கும் போது தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கும்போது படையினரால் கைது செய்யப்பட்டு கணவனின் முன்னிலையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு, மண்வெட்டியினால் அடித்துக் கொல்லப்பட்ட அரியாலையைச் சேர்ந்த தம்பதிகளாக இருக்கலாம் என அங்கிருந்த சட்டத்தரணி ஒருவர் சந்தேகம் தெரிவித்துள்ளார்.

## 5வது நாள்

### தலையும் இடுப்பும் முறிந்த நிலையில்

நால்வது நாள் தோண்டப்பட்ட புதைகுழியை மேலும் தொடர்ந்து ஐந்தாவது நாளும் தோண்டப்பட்டது. தோண்டிக் கொண்டிருக்கும்போது மண்டையோடு தென்படவே, குழியின் அகலம் அதிகரிக்கப்பட்டது. மெதுவாக மெதுவாக மண்ணை அப்புறப்படுத்தியபோது முகம் குப்புறக் கிடந்த நிலையில் இடுப்பு பகுதியும் இரு தோள் மூட்டுகளும், மார்புப் பகுதியும் முறிந்து நொருங்கிய நிலையில் காணப்பட்டுள்ளன. மண்டை ஓட்டிலும் மூன்று இடத்தில் வெடிப்புக்கள் காணப்பட்டுள்ளன. அக்குழியினுள் முகம் குப்புறப்போட்டு மண்போட்டு மூடும்போது அதன் முதுகுப் பகுதி பலமாக உழக்கப்பட்டதனால் நொருங்கி இருக்கலாம் என தெரிவித்துள்ளனர்.

## 6வது நாள்

### பழுதடைந்த நிலையில் ஒரு எலும்புக்கூடு

செம்மணிப்புதைகுழிகளை ஆறாவது நாளான சனிக்கிழமை *(11.9.99)* அன்று பிட்டியாக இருந்த ஒரு பகுதியில் சந்தேகம் கொண்டு அதை தோண்டுமாறு பணித்தபோது அப் பகுதி தோண்டப்பட்டது. அதன் போது மிகவும் சிதைந்த நிலையில் எலும்புக் கூடொன்று காணப்பட்டுள்ளது. சிதைவடைந்த நிலையில் இருந்ததால் அவை தலை பிறிம்பாகவும், உடல்பாகங்கள் பிறிம்பாகவும் பகுதி பகுதியாக தோண்டி எடுக்கப்பட்டன.

### இதுவரை 10 எலும்புக் கூடுகள் மீட்கப் பட்டுள்ளன

செம்மணி புதைகுழிகளைத் தோண்டும் இரண்டாம் கட்டம் ஆரம்பமாகி. கடந்த ஆறு நாட்களில் *(6.9.99-ல் இருந்து 11.9.99 வரை)* பத்து எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ராஜபக்சவினாலும் ஏனைய கைதிகளினாலும் அடையாளம் காட்டப்படாத இன்னும் பல புதைகுழிகள் அங்கிருப்பதாகவும், பல இடங்களில் மண் பிட்டியாக காணப்படுவதால் அவைகளும் புதைகுழிகளாக இருக்கலாம் அவைகளையும் தோண்டி ஆராயப்பட வேண்டும் என காணாமல் போனோர் சங்கத்தை சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

### சர்வதேச பிரதிநிதிகள் அவதானிப்பு

செம்மணி புதைகுழி தோண்டும் நடவடிக்கைகளை மனித உரிமைக்கான மருத்துவ அமைப்பைச் சேர்ந்த இரு பிரதிநிதிகளுடன் சர்வதேச மன்னிப்புசபை, ஆசியா பவுண்டேஷன், பிரிட்டிஸ் நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் நேரடியாக அவதானித்த வண்ணம் இருந்தனர். ஒரு பிரதிநிதி, குழிகளை தோண்டிய போது வெளிவந்த நீரை நாக்கில் விட்டு பரிசோதித்து பார்த்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

### எலும்புக் கூடுகள் காலிக்கு அனுப்பப்படவுள்ளன

செம்மணி புதைகுழிகளில் தோண்டியெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் இரசாயன பகுப்பாய்வுக்காக காலியிலுள்ள கராப்பிட்டி போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. இதுவரை புதைகுழிகளிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ள எலும்புக் கூடுகள் யாவும் பையில்போட்டு கட்டப்பட்டு யாழ். சிறீலங்கா பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. செம்மணி தோண்டும் நடவடிக்கைகள் முடிவடைந்ததும் இவைகள் காலிக்குக் கொண்டு செல்லப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### செருப்பும் துவிச்சக்கரவண்டியின் பாகங்களும் கண்டெடுப்பு

புதைகுழிகளைத் தோண்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட போது ஒரு அடி தோண்டப்படுவதற்கிடையில் சில பகுதிகளில் செருப்பும் துவிச்சக்கர வண்டிகளின் உதிரிப்பாகங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனினும் அக் குழியினுள் எவ்வித எலும்புக் கூடுகளும் கண்டுபிடிக்கப்படவில்லை.

### ஆழமாக தோண்டுங்கள் எலும்புக்கூடுகள் கிடைக்கும்

*- ராஜபக்ஸ*

செம்மணிப்புதைகுழிகளை ஐந்தரையடி ஆறடி வரை ஆழமாகத்தோண்டுகள் அப்போதுதான் எலும்புக்கூடுகளைக் கண்டுபிடிக்கமுடியும் என ராஜபக்ஸ தெரிவித்துள்ளார். ஆனாலும் 180 செ. மீற்றர் தோண்டப்பட்ட நிலையிலும் அம் மண்ணை ஆரராய்ந்து பார்த்த மண்ணியல் நிபுணர்கள் இவற்றில் எலும்புக்கூடுகள் இருப்பதற்கு வாய்ப்பில்லை எனத் தெரிவித்ததையடுத்து, சில குழிகளை இடையிலேயே தோண்டுவது கைவிடப்பட்டுள்ளன.

# யாழ்.மக்களின் கண்களுக்கு குண்டெறியப்பட்டது!

தெற்கில் பத்திரிகையாளர்களுக்கு எதிராக கொட்டாந்தடிகளும், பட்டன்களும், கண்ணீர்புகைகளும் பாவிக்கப்படுகையில், வடக்கில் பத்திரிகைக்கு எதிராக கைக்குண்டு பாவிக்கப்பட்டுள்ளது. யாழ்.குடா நாட்டுக்குள் படையினரின் கட்டுப்பாட்டின் கடுமையான பாதுகாப்புக்களைக் கொண்ட யாழ். நகரப் பகுதியில் உதயன் பத்திரிகை காரியாலயத்தின் மீது கடந்த 21-ம் திகதி குண்டுத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது.

பலமான பாதுகாப்பு வலையத்துக்குள் செயற்படும் பத்திரிகையொன்றுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள இத் தாக்குதலானது, யாழ்.மக்களுக்கு மிகுந்த நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளது. உதயன் காரியாலயத்துக்குப் பின்புறமாக உள்ள மதிலுக்கூடாக கைக்குண்டுகள் வீசக்பட்டுள்ளன. உயிர்ழப்புக்கள் எதுவும் ஏற்படாத போதிலும், கடமையில் இருந்த பாதுகாவலர் காயங்களுக்கு உள்ளானார்கள். அதுவல்லப் பிரச்சினை. அங்கு இயங்கும் ஒரே பத்திரிகைக்கு உள்ள கொஞ்ச நஞ்ச சுதந்திரத்துக்கும் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகவே இதைக் கருதவேண்டியுள்ளது.

வடக்கில் சாதாரண அன்றாட வாழ்க்கை முறை சீரழிய முதல், அங்கு ஈழநாடு, ஈழமுரசு, ஈழநாதம் போன்ற பத்திரிகைகள் வெளிவந்தன. யுத்தம் வலுவடைந்துவர எல்லா பத்திரிகைகளும் வருவது நின்று போயின. இன்று வன்னியில் ஈழநாதம் தொடர்ந்து வெளிவருகிறது. ஜனநாயக வாதிகளாலேயே யாழ்.குடாவின் பத்திரிகைகளுக்கு அழிவுகளும் மேற்கொள்ளப் பட்டன. யாழ்.நகரின் நூல் நிலையத்தை தீயிட்டுக் கொழுத்தியவர்கள், அதில் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளின் முன்னிலையிலேயே ஈழநாடு பத்திரிகை கட்டடத்தையும் தீக்கிரையாக்கினார்கள் என்று சொல்லப்படுகிறது.

உதயன் பத்திரிகை நிறுவனத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலானது அதில் பிரசுரமாகியிருந்த செய்திகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகவே என நம்பப்படுகிறது. இக்குண்டுத் தாக்குதலுக்குக் காரணமானவர்கள் யார் என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் இத்தாக்குதல்களுடன் ஜனநாயக நீரோட்டத்திற்குத் 'திரும்பியுள்ளவர்கள்'. எனக் கூறப்படும் சில தமிழ் அமைப்புக்கள் சம்பந்தப்பட்டுள்ளன என்ற சந்தேகங்கள் மட்டும் உள்ளன. இந்த அமைப்புக்களின் நடவடிக்கைகள் பற்றி அடிக்கடி உதயன் பத்திரிகையில் செய்திகள் வெளியாவதுண்டு. இவற்றினை விரும்பாத சிலர்தான் இதனை மேற்கொண்டுள்ளார்கள் என்ற சந்தேகம் வலுவடைந்துள்ளது. மேலும் அச்சு இயந்திரம் வைக்கப்பட்டுள்ள பகுதியை நோக்கித் தாக்குதல் நடத்தப்பட்டதானது பத்திரிகையை நிறுத்தும் ஒரு முயற்சியும் இதில் இருந்ததா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

இத் தாக்குதல் விடுதலைப்புலிகள் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று சிலர் கூறுகிறார்கள். அப்படி அப்பத்திரிகையை நிறுத்தும் நோக்கம் அவர்களுக்கு இருந்திருக்குமேயானால் அதற்காக அந் நிறுவனத்தின் மேல் குண்டுத்தாக்குதலை நடத்தவேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. ஒரு கடிதத்தின் மூலம் அதனை அவர்கள் செய்திருப்பார்கள் எனக் கருத்துக்கூறப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தப்பட்டவுடன் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போட்டிபோட்டுக்கொண்டு கண்டன அறிக்கைகள் தமிழ் அமைப்புக்களினால் வெளியிடப்பட்டன. தாக்குதலை நடத்திய அமைப்புக்கள் மக்களை ஏமாற்றுவதற்காக கண்டன அறிக்கைகளை வெளியிடுகின்றன என்பதை மக்கள் உணர்ந்துகொண்டுள்ளனர். இந்த தாக்குதலையடுத்து இராணுவத்தின் கவனம் ஜனநாயக வழிக்கு வந்துள்ள அமைப்புக்களின் பக்கம் திரும்பியுள்ளது. ஒருபுறம் விடுதலைப்புலிகளின் தாக்குதல்களையும், மறுபுறம் தமிழ் அமைப்புக்களின் இவ்வாறான தாக்குதல்களையும் எதிர்கொள்ளும் இராணுவம், மிகவும் 'சங்கடமான ஒரு நிலைமையில்' யாழ். குடாவில் உள்ளது.

இப்படியான பின்னடைவின் மத்தியில் தமிழ் அமைப்புக்களினால் தமிழர்கள் கடத்தப்படும் தகவல்களைத் தமக்கு அறியத் தருமாறு படைத்தலைமை காணாமல்போவோர் நலன்களைப் பாதுகாக்கும் அமைப்பினரிடம் கோரியுள்ளது. தமிழ் அமைப்புக்கள் தங்களுக்கு எதிரானவர்கள் எனக் கருதுவோரையும், புத்தி ஜீவிகளையும் கடத்திக் கொலை செய்வதானது தமிழின அழிப்பின் மற்றொரு வடிவம் என மக்கள் கருதுகிறார்கள்.

எப்படியிருந்தபோதிலும் வடக்கில் வெளியாகும் ஒரே பத்திரிகை உதயன் மட்டுமே. அங்குள்ள மக்கள் உலகைக் காண்பது அதனூடாகத்தான். அதன் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை அவர்களது கண்களைக் குத்தியது போன்றதாகும் எனக்கூறும் வடபகுதி பத்திரிகையாளர்கள், கடந்தவாரம் மறியல் போராட்டம் ஒன்றைக் கூட நடாத்தியிருந்தார்கள்.

ஜனநாயகம் நிலவுவதாகக் கூறப்படும் தெற்கில் பத்திரிகையாளர்கள் தாக்குதல்கள் முடுக்கிவிடப்படுகையில் யுத்தம் நடக்கும் வடக்கில் இத்தாக்குதலை புதுமையானது எனக் கூற முடியாதுதான். ஆனால் சமூகத்தின் ஒரு அங்கமான பத்திரிகைத்துறை எவ்வகையிலும் பாதுகாக்கப்படவேண்டியது. அவற்றின் மேல் நடத்தப்படும் தாக்குதல்களுக்கு எதிராக சமூகம் பலமாகக் குரல் கொடுக்கவேண்டும்.

*'லக்பிம'*

## சிங்களம் கூறும் சில...

*- மாந்தன் -*

# யுத்தத்தினால் நாட்டில் குற்றச் செயல்களும் அதிகரித்துள்ளன


வடக்குக் கிழக்கில் இன்று நடைபெறும் சிவில் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவரும் வரை நாட்டின் ஏனைய பகுதிகளில் நடக்கும் குற்றச் செயல்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது இயலாத காரியம் என பொலிஸ் தளபதி கொடகதெனிய கூறுகிறார்.

நாட்டின் இராணுவத்தினருக்கும், பொலிசாருக்கும் உள்ளேயே ஏராளமான குற்றவாளிகள் காணப்படுகின்றனர். பல கொள்ளைகளிலும் கொலைகளிலும் அவர்களது தொடர்புகள் இருந்துள்ளன. பல சம்பவங்களில் நேரடியாக அவர்கள் தலையிட்டுள்ளனர். இவர்கள் லீவில் ஊருக்கு வருவார்கள். இங்கு கொள்ளைக்குழுக்களுடன் இணைந்து குற்றங்களைச் செய்வார்கள். பின்னர் யாரும் அறியாதவாறு மீண்டும் செல்வார்கள். எவராவது முறையாக தகவல்களைத் தராது போனால் இந்த குற்றவாளிகளைப் பிடிப்பதென்பது இயலாத ஒரு காரியம்.

சிவில் யுத்தங்கள் நடக்கும் உலக நாடுகள் பலவற்றிலும் இவ்வாறான் சம்பவங்கள் சகஜம்தான். எமது நாட்டில் நடக்கும் இந்த யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவந்து விரைவாக சமாதானத்தை ஏற்படுத்தாவிடின், குற்றச் செயல்கள் அதிகரித்துக்கொண்டுதான்போகும். அதனைக் கட்டுப்படுத்துவது கடினமாகிவிடும். யுத்தத்தில் ஈடுபடும் இராணுவத்தினர் அங்கிருந்து தப்பிவந்து குற்றச் செயல்களில் ஈடுபடுவதும் அதிகரித்துள்ளது. யுத்தம் நிறுத்தப்படுமானால் அவர்கள் தப்பி வருவதும் குறைந்துபோகுமே எனப் பொலிஸ் அதிபர் கூறினார். இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் மாத்திரம் 19,758 குற்றச் செயல்கள் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளன என்றும் இவைகளில் பெரும்பான்மையானவையில் பாதுகாப்பு பிரிவினரின் தொடர்புகள் இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுவதாயும் அவர் கூறினார்.

*நாட்டின் இராணுவத்தினருக்கும், பொலிசாருக்கும் உள்ளேயே ஏராளமான குற்றவாளிகள் காணப்படுகின்றனர். பல கொள்ளைகளிலும் கொலைகளிலும் அவர்களது தொடர்புகள் இருந்துள்ளன.*

*'லக்பிம'*




நன்றி: லங்காதீப


## தமிழர் வித்தியாலயம்

**75, rue Philippe de Girard, 75018 Paris - Tel: 01 40 05 11 16**

Métro: Marx Dormoy அல்லது La Chapelle அல்லது Bus: 65

இந்த ஆசிரியரிடம் பிரெஞ்சு கற்றவர்கள் கல்விநிலையங்கள் நடாத்துகிறார்கள்.
பிரெஞ்சு படிப்பிக்கிறார்கள் மொழி பெயர்ப்பாளராகப் பணி புரிகிறார்கள்.
பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்கிறார்கள். உரியவர்களிடம் உசாவிப் பாருங்கள்.
இலைமறைகாய் உண்மை வெளிவரும்.

- ★ தகைமை + அனுபவம் உள்ள ஆசிரியர்கள். தரமான கல்வி. கூடிய நேரம். குறைவான கட்டணம்
- ★ சத்தியப்பிரமாணம் செய்த நீதிமன்ற மொழிபெயர்ப்பாளரின் மொழிபெயர்ப்புச் சேவை வாரநாட்களில் உண்டு

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 22.09.1999**

**பிரெஞ்சு மொழிப் பயிற்சி வகுப்பு Cours de français**

வேலை, மருத்துவம், கடிதம், குடியுரிமை போன்ற எதுவாக இருந்தாலும் உங்கள் காரியங்களை நீங்களாகவே செய்வதற்கு ஏற்ப கற்பிக்கப்படும் பிரெஞ்சு வகுப்புக்கள் ஆரம்பம் ஆகின்றன.

- ஆறு மாத கால சனி-ஞாயிறு வகுப்புக்கள்.
- திங்கள் -புதன்-வியாழன்-வெள்ளி இடம்பெறும் மூன்று மாத கால வகுப்புக்கள், காலை: 10.00 மணி–12.00 மணி அல்லது மாலை: 15.00 மணி –17.00 மணி

இதைவிட, கற்பவர்களின் நேரம்–தரம் என்பவற்றிற்கேற்ப குறுகிய காலத்தில் பேச – எழுத கற்றுக்கொள்வதற்கான தனி வகுப்புகளும் உண்டு.

**நல்ல ஆங்கிலம் Good English**

Toefl க்குத் தயார்செய்து பரீட்சைக்குத் தோற்ற ஒழுங்கு செய்யப்படும்.

**டியூசன் வகுப்புக்கள் Soutien Scolaire**

CP தொடக்கம் Terminal வரை

ஒரு பாடம் வாரத்தில் இரு தடவைகள். வகுப்பில் படித்த பாடங்களை மீட்டு, வீட்டு வேலைகளைச் செய்வதற்கு உதவி செய்வது முதல் பாடநேரத்திலும், அடுத்து படிக்க இருக்கும் பாடங்களை முன்கூட்டியே தயார் செய்வது இரண்டாம் பாடநேரத்திலும் இடம்பெறுகிறது.

சனி, புதன், பிற்பகல், மாலை, ஞாயிறு காலை வகுப்புகள்

ஆரம்பமாகும் புற வகுப்பு: ★ நல்ல தமிழ்

Pub

# தமிழ்நாட்டில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு முடிவடைந்தது!

(11-09-99)

இந்தியப் பாராளுமன்றத்திற்கான தேர்தல் ஐந்து கட்டங்களாக அறிவிக்கப்பட்டிருந்தது. கடந்த 5-ம் திகதி முதற்கட்டத் தேர்தல் நடந்தது. 145 தொகுதிகளுக்கு இந்தத் தேர்தல் நடைபெற்றது.

இந்தியா முழுவதும் நடந்த இந்த முதற்கட்டத் தேர்தலில் ஒரு சில தொகுதிகளைத் தவிர மற்ற தொகுதிகளில் வாக்குப் பதிவு விறுவிறுப்பாக இருந்தது. தமிழ்நாட்டில் 19 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு நடைபெற்றது. அப்போது 55 சதவீதத்தில் இருந்து 65 சதவீதம் வரை வாக்குகள் பதிவாகின. இன்று இரண்டாம் கட்டத் தேர்தல் இந்தியா முழுவதும் 124 தொகுதிகளில் நடைபெற்றது. தமிழ்நாட்டில் 20 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது. வாக்குப் பதிவு மந்தமாகவே இருந்தது. சராசரியாக 56 விழுக்காடு வாக்குகள் பதிவாகின. ஆனால் 19 வாக்குச் சாவடிகளில் மறுவாக்களிப்பு நடத்தப்பட உள்ளது. மறு வாக்குப் பதிவு நாளை மறுநாள் நடாத்தப்படும்.


மத்திய சென்னையில் திமுக. கூட்டணி வேட்பாளராக முன்னாள் மத்திய மந்திரி முரசொலி மாறன் போட்டியிடுகிறார். இவரது அரசியல் எதிர்காலம் இன்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள எல்லா பாராளுமன்றத் தொகுதிகளுக்குமான வாக்குப் பதிவுகளும் முடிவடைந்து விட்டன. வாக்கு எண்ணிக்கை வருகிற ஆறாம் திகதி நடைபெறும்.

## ஆந்திரத்தில் பரபரப்பை உருவாக்கிவரும் தாசரி நாராயணனின் கிண்டல் திரைப்படம்!

(11-09-99)

ஆந்திர மாநிலத்தின் முதல்வர் சந்திரபாபுவை கிண்டல் செய்யும் தெலுங்குப்படம் ஆந்திர அரசியலை கலக்கிவருகின்றது. பிரபல தயாரிப்பாளர் தாசரி நாராயளராவ் தயாரித்த இப்படத்திற்கு 'பீச்சவாடி செட்டிலோ ராயி' என்று பெயர். இதற்கு பைத்தியகாரன் கையில் கிடைத்த கல் என்று அர்த்தம்.

மூன்று மணிநேரம் ஓடும் இப் படத்தின் கதாநாயகன் சரண்ராஜ். இவர் தோற்றத்தில் சந்திரபாபு நாயுடுவைப் போல் இருப்பார். மாமனார் ராமராவிடம் இருந்து ஆட்சியை கைப்பற்றினார் சந்திரபாபு. ஆட்சியை எப்படித் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டார், ஆட்சியில் சுயலாபம் காண நாயுடு செயல்படும் விதம் ஆகியவை படுகிண்டலாக சித்தரிக்கப்பட்டுள்ளது. காங்கிரசுக்கு ஆதரவாக தீவிரப் பிரசாரம் செய்யும் தாசரி நாராயணராவ் 'எனக்கு மிரட்டல் வரும் அதைப்பற்றி கவலைப்படாமல் காங்கிரசுக்கு பாடுபடுவேன்' என்றார்.




# புதுவையில் இந்திய திரைப்பட விழா

புதுவை முருகா திரையரங்கில் இந்திய திரைப்பட விழா 1999 கொண்டாடப்படுகிறது. இன்று (10.09.99) முருகா திரையரங்கில் தொடங்கப்படும் இந்த விழாவை மாலை 6 மணிக்கு முதல்வர் ஜானகிராமன் தொடங்கி வைக்கிறார்.

இவ்விழா கடந்த 16 ஆண்டுகளாகத் தொடர்ந்து புதுவையில் நடைபெற்று வருகிறது. இதனை பொதுமக்கள் இலவசமாகப் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுவை மக்கள் மற்றும் இளைய சமுதாயத்தினரிடையே 'நல்ல சினிமா' வைப்பற்றி விழிப்புணர்வை இவ்விழாக்கள் ஏற்படுத்தி வருகின்றன. இவ்விழா அண்டை மாநிலங்களில் நடைபெறாத நிலையில், புதுவை மாநிலத்தில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இந்தியத் திரைப்பட விழாவில் படங்களைத் தேர்ந்தெடுப்பது, மத்திய அரசின் செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சகத்தைச் சார்ந்ததாகும். ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 10 முதல் 20-ம் திகதி வரை நமது நாட்டில் நடைபெறும் உலகத் திரைப்பட விழாவில் தேர்வு செய்யப்பெற்ற இந்திய திரைப்படங்கள், உள்ளூர் நிருபர்கள், வெளிநாடுகளிலிருந்தும் வரும் பத்திரிகையாளர்கள் மற்றும் படத்துறையைச் சார்ந்தவர்களுக்குக் காண்பிக்கப்படுகின்றன. அதன் பின் இந்த இந்தியத் திரைப்படங்கள் வெளிநாடுகளில் நடைபெறும் விழாக்களிலும், நம்நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும் திரையிடப்படுகின்றன. இதன் அடிப்படையிலேயே ஒவ்வொரு ஆண்டும் இப்படவிழா புதுவையில் ஏற்பாடு செய்யப்படுகிறது.

# வாஜ்பாய்க்கு மீண்டும் மகுடம் சூட்டுங்கள் -வைகோ

வாஜ்பாய்க்கு மீண்டும் மகுடம் சூட்டுங்கள் என்று மதி.மு.க பொதுச் செயலாளர் வைகோ கேட்டுக்கொண்டார்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ இறுதிக்கட்ட தேர்தல் பிரச்சாரத்தை நத்தத்தில் முடித்தார். நத்தம் சட்டமன்ற மதி.மு.க. வேட்பாளர் செல்லம், பழனி பாராளுமன்ற வேட்பாளர் கணேசமூர்த்தி ஆகியோரை ஆதரித்து வைகோ நத்தம் பகுதியில் பிரச்சாரம் செய்தார். நொச்சி ஓடைப்பட்டி என்ற கிராமத்தில் காலை பிரச்சாரத்தைத் துவக்கிய வைகோ லிங்கவாடி, சிறுகுடி, அரவங்குறிச்சி உட்பட 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் பிரச்சாரம் செய்தார். மாலை நத்தம் காந்திஜி கலையரங்கில் நடைபெற்ற இறுதி பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் வைகோ பேசும்போது,

இப்போது தி.மு.க., ம.தி.மு.க தொண்டர்கள் ஒரே மேடையில் சந்திப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தியாவை வல்லரசு நாடாக மாற்றிய வாஜ்பாய் மீண்டும் பிரதமராக மகுடம் சூட்ட நீங்கள் வாக்களிக்க வேண்டும். காங்கிரஸ் கட்சி தன்னைத் தவிர வேறு யாருமே மத்தியில் ஆட்சி அமைக்கக்கூடாது எனக் கருதுகிறது. இந்த காங்கிரஸ் கட்சியின் மமதைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள். நாடு முழுவதும் வாஜ்பாய் அலை வீசுகிறது. அவரது ஆட்சியைக் கவிழ்த்தவர்கள் மீது மக்கள் கோபம் கொண்டுள்ளனர். எங்கள் கூட்டணியை கலவைக் கூட்டணி என்று சோனியா கூறுகிறார். இந்தியாவே பல மொழி, பல மதம், பல இனத்தவர்கள் நிறைந்ததுதான். இந்தியாவை அணு ஆயுத வல்லரசு நாடாக மாற்றியதோடு மட்டுமில்லாமல், கார்கில் பிரச்சினைக்கு எல்லா முஸ்லிம் நாடுகளின் ஆதரவையும் பெற்றுத் தந்தவர் வாஜ்பாய்.

இந்த தேர்தலில் எங்கள் கூட்டணி 40 தொகுதிகளிலும் வெற்றிபெறும். அரசியல் வரலாற்றில் ம.தி.மு.க வின் முதல் சட்டமன்ற உறுப்பினராக பி.செல்லத்தைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என தனது பிரச்சாரக்கூட்டத்தில் வைகோ கூறினார்.

# எங்களுக்கு இருந்த ஒரே வழி அ.தி.மு.க. கூட்டணிதான் - சோனியா

'திமுக-வுடன் காங்கிரஸ் கூட்டணி வைத்துக்கொள்ள ஜெயின் கமிஷன் அறிக்கை தடையாக இருந்தது. எனவே, அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக்கொள்வதுதான் எங்களுக்கு இருந்த ஒரேவழி' என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கூறியுள்ளார். தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த செவ்வியின் போது 'ஊழலுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யும் காங்கிரஸ், அ.தி.மு.க.கவுடன் தேர்தல் உறவு வைத்துக்கொண்டது ஏன்?' என்ற கேள்விக்கு, அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்த தனது செவ்வியில் அதிமுக. ராஷ்ட்ரிய ஜனதாதளம், இந்தியக்குடியரசு கட்சி போன்ற கட்சிகளின் கூட்டணியை அமைத்திருப்பதை பாஜக. அமைத்துள்ள கூட்டணியோடு ஒப்பிடக்கூடாது. தேர்தலுக்கு முன்பே அதிகாரப் பகிர்வு குறித்து அவர்கள் உடன்பாட்டை ஏற்படுத்திக்கொண்டுள்ளனர். எங்களோடு அணி சேர்ந்திருப்பவர்கள் ஊழல்வாதி



கள் என்று கூறுவது சரியல்ல. பா.ஜ.க. வுடன் இருந்தவரை ஜெயலலிதா தூய்மையானவர் என்றும், எங்களோடு சேர்ந்தவுடன் அவர் ஊழல்வாதி ஆகிவிட்டார் என்றும் கூறுவதை எப்படி ஏற்க முடியும்? அ.தி.மு.க உறவில் எந்தப் பிரச்சினையும் இல்லை. வாஜ்பாய் ஆட்சிக்கான ஆதரவை வாபஸ் பெறும் ஜெயலலிதாவின் முடிவு அவரே எடுத்த தனிப்பட்ட முடிவு. சட்டபூர்வமாகக் குடியுரிமை பெறுவது வெறும் சடங்கு; ராஜீவ் காந்தியை மணந்த பின்னர் 18 ஆண்டுகளாக இந்தியக் குடியுரிமை பெறாமல் இருந்தது ஏன் என்று எழுப்பப்படும் கேள்விகள் அர்த்தமற்றவை. நுட்பங்களுக்குள் நுழைந்து இவ்விடயத்தைப் பிரச்சினையாக்குவோர் மக்கள் மீதோ ஜனநாயகத்தின் மீதோ நம்பிக்கையில்லாதவர்கள். ஒரு மருமகளாக இந்திரா குடும்பத்தில் நுழைந்த அன்றே நான் இந்தியப் பிரஜையாகிவிட்டேன். சட்டப்படி குடியுரிமை பெறுவது என்பது வெறும் சடங்குதான். வெளிநாட்டில் பிறந்தவர் உயர் பதவியை ஏற்கக்கூடாது என்று கூறுவோர் என்னை மனதில் கொண்டே பேசுகின்றனர். பிரஜைகள் விடயத்தில் எங்கு பிறந்தவர் என்ற பாகுபாடு அரசியல் சட்டத்தில் எங்கும் இல்லை.

எல்லோருக்கும் சமமான உரிமையைத்தான் அது வழங்குகிறது. இந்திய கலாச்சார வரலாற்றில் வேறு எந்த இந்திய மருமகளும் இதுபோன்ற கேள்விகளுக்குப் பதில் தர நேரிட்டதாக உதாரணம் இல்லை எனவும் தெரிவித்தார்.

# சோனியா மன்னிப்பு கேட்க வேண்டும் - பெர்னாண்டஸ்

பிரதமர் வாஜ்பாயை தேசத் துரோகி என்று அபாண்டமாக வருணித்துள்ள சோனியா அதை வாபஸ் பெற்று மன்னிப்புக் கோர வேண்டும் என்று மத்திய அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கோரியுள்ளார். 18 வருடகாலம் இந்தியாவின் பிரஜையாக ஆவதற்கு மறுத்த ஒருவர், இப்படிப் பேசுவதை சகித்துக்கொள்ள முடியாது என்றும் அவர் சொன்னார். திருவனந்தபுரத்தில் அவர் நிருபர்களிடம் பேசுகையில் இவ்வாறு கூறியுள்ளார்.

# போட்டியில் இருந்து விலகி பா.ஜ.க. வில் இணைவு

தேர்தலுக்கு 48 மணி நேரமே இருந்த சமயத்தில் வேட்பாளர் ஒருவர் போட்டியிலிருந்து விலகி பா.ஜ.க.வில் சேர்ந்துள்ளார். வட சென்னை தொகுதியின் சுயேச்சை வேட்பாளரான சிகந்தர் காசிம், தாம் போட்டியிலிருந்து விலகுவதாக இன்று அறிவித்தார். தமிழக பா.ஜ.க செயலர் எல்.கணேசன் முன்னிலையில் அவர் பா.ஜ.க. கட்சியில் சேர்ந்தார். இஸ்லாமிய சேம நல அமைப்பின் தலைவரான அவர் வட சென்னையில் தி.மு.க - பா.ஜ.க. கூட்டணியின் சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் குப்புசாமியின் வெற்றிக்குப் பாடுபடப் போவதாக அறிவித்தார். வட சென்னை தொகுதியில் 11-ம் திகதி வாக்குப்பதிவு நடக்க இருக்கிறது.

## ஸ்ரீ துர்க்கா திருமண சேவை

உங்கள் திருமணம், திருமண நாட்குறித்தல், பொருத்தம் பார்த்தல், ஜாதகம்பார்த்து பலன் சொல்ல, மற்றும் திருமணத்திற்குரிய குருக்கள், மணவறை, வீடியோ, சாப்பாடு, மேளம், ஹோல், வாகனம் சகல ஒழுங்குகளும் செய்து தரப்படும். மற்றும் ஏனைய விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளவும்.

சனி. ஞாயிறு ஆகிய நாட்களில் 14.01-2000 ஜனவரி மாதம் (தை மாதம்) மரணயோகம் கரிநாள் வருவதால் திருமணம் செய்யமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

K.Y.KURUKKAL
44, Rue Stephenson, 75018 Paris.
Tel: 01 42 51 43 43 - 06 12 31 33 41

Pub

# என்னையும் மூப்பனாரையும் பிரிக்க முடியாது -கருணாநிதி

கல்கி நூற்றாண்டு விழா சென்னை தேனாம்பேட்டை காமராஜர் அரங்கத்தில் நேற்று மாலை நடந்தது. இக் கூட்டத்திற்கு த.மா.கா. தலைவர் மூப்பனார் தலைமை தாங்கி



னார். வைத்தியநாதன் வரவேற்புரையாற்றினார். இவ்விழாவில் கல்கி தபால் தலையை அஞ்சல்துறை முதன்மை தலைவர் ஜெயராமன் வெளியிட முதல்வர் கருணாநிதி பெற்றுக் கொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது:

இங்கே பேசிய எழுத்தாளர் சாவி, நானும் மூப்பனாரும் 'காவிரியும் கொள்ளிடமும் போல' சேர்ந்திருப்பதாகக் குறிப்பிட்டார். காவிரியும் கொள்ளிடமும் ஒருநாளும் சேராது பிரிந்துதான் போகும். இந்த உவமையை அவர் ஏன் சொன்னார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் காவிரியிலும், கொள்ளிடத்திலும் ஒரே தண்ணீர்தான் ஓடுகிறது. அதே போல நாங்கள் இருவரும் பிரிந்தாலும் எங்கள் பண்பு மாறாது. எங்களுடைய ஒற்றுமையை யாராலும் பிரிக்க முடியாது எனத் தெரிவித்தார்.

இவ் விழாக்குழுத் தலைவர் ஜி.கே. மூப்பனார் பேசும்போது, இவ்விழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்று முதல்வரிடம் கேட்டுக்கொண்டபோது உடனே அவர் ஒப்புக்கொண்டார்.

தேர்தல் நேரம் என்பதால் மறுபடியும் நான் அவரிடம் தொடர்பு கொண்டு, கலந்து கொள்ள இயலுமா என்று கேட்டேன். நீங்கள் ஒரு மேடையில் பேசிவிட்டு வாருங்கள். நான் ஒரு மேடையில் பேசி விட்டு வருகிறேன். பிறகு, இருவரும் ஒரே மேடையில் பேசுவோம் என்றார். கருத்து வேறுபாடுகள் வரும், போகும். இப்போதும் எங்களுக்கிடையே கருத்து வேறுபாடு உள்ளது.

ஆனாலும் அது பழகுவதற்குத் தடையாக இருக்கக் கூடாது. இக் கலாச்சாரத்தை, பண்பாட்டினை கருணாநிதி காப்பாற்றி வருகிறார். நானும் காப்பாற்றுவேன். அரசியல்வாதிகள் அனைவரும் இதைப் பின்பற்ற வேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக இவ்விழா மேடை அமைந்ததில் மகிழ்ச்சி என்றார் மூப்பனார்.

# இந்தியத் தேர்தலில் காஷ்மீர் பெறும் முக்கியத்துவம்

(11-09-99)

இந்தியாவிடமிருந்து பிரிந்து செல்ல போராடி வருவது காஷ்மீர். இத்தேர்தலை புறக்கணிக்குமாறு காஷ்மீர் விடுதலைக்காக போராடும் அமைப்புகள் கோரிக்கை விடுத்திருந்தன என்றபோதிலும் இந்தியத் தேர்தலில் பதிவு செய்யத்தக்கதான சாதனையும் இங்குதான் நிகழந்துள்ளது. இந்திய பாராளுமன்றத்துக்கான முதற்கட்டத் தேர்தல் கடந்த 5-ம் திகதி 145 தொகுதிகளில் நடைபெற்றது. இதில் அதிக அளவு வாக்குப்பதிவு நடைபெற்ற தொகுதியையும், குறைந்த அளவு வாக்குப்பதிவு நடைபெற்ற தொகுதியையும் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. இதில் ஆச்சரியம் அளிக்கும் வகையில் இரண்டு விடயத்திலும் காஷ்மீர் மாநிலமே இடம்பிடித்துள்ளது.

அதிக அளவு வாக்குப் பதிவான தொகுதி காஷ்மீரில் உள்ள லடாக் தொகுதியாகும். இங்கு மொத்த வாக்காளர் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 719 ஆகும். இதில் ஒரு இலட்சத்து 16 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். இது வாக்களித்தோரில் 80.67 விழுக்காடாகும். குறைந்த அளவு வாக்குப் பதிவான் தொகுதி என்ற பெயரை காஷ்மீரில் உள்ள சிறீநகர் தொகுதி பெற்றுள்ளது. இங்கு மொத்த வாக்காளார் எண்ணிக்கை 8 இலட்சத்து 54 ஆயிரமாகும். இதில் ஒரு இலட்சத்து 2 ஆயிரம் பேர் மட்டுமே வாக்களித்துள்ளனர். இது வெறும் 11.96 விழுக்காடாகும்.

# வாஜ்பாயை எதிர்க்கும் காங்கிரஸ் வேட்பாளர் சரண்சிங்

(12-09-99)

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் உத்தரபிரதேசம் மாநிலம் லட்சுமணபுரி தொகுதியில் போட்டியிடுகிறார். இதற்கான மனுத்தாக்கலும் செய்யப்பட்டுவிட்டது. இந்தத் தொகுதியில் மனுத்தாக்கல் செய்யும் கடைசி நாள் வருகிற 14-ம் திகதியாகும். இந்நிலையில் லட்சமணபுரியில் பிரதமர் வாஜ்பாயை எதிர்த்து வலுவான வேட்பாளரை நிறுத்த காங்கிரஸ் கட்சி விரும்பியது. இதனால் காங்கிரஸ் கட்சியின் மத்திய தேர்தல் குழு அவசரமாகக் கூடியது. இதில் வாஜ்பாயை எதிர்த்து சரண்சிங்கை நிறுத்துவது என்று முடிவு செய்து வேட்பாளராக அறிவித்துள்ளது.

சரண்சிங் மன்னர் பரம்பரையைச் சோந்தவர். இந்திரா காந்தி அமைச்சரவையில் மந்திரியாக இருந்தவர். ஜம்மு காஷ்மீர் மாநில ஆளுநராகவும் இருந்துள்ளார். அமெரிக்காவுக்கான இந்தியத் தூதராகவும் பணியாற்றி இருக்கிறார். 18 ஆண்டு காலம் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி இருந்தார். வேறு எந்தக் கட்சியிலும் சேராமல் இருந்த அவர் சமீபத்தில்தான் காங்கிரசில் சேர்ந்தார். மிகுந்த உற்சாகத்தோடு இச் சவாலை ஏற்கிறேன் என்றார் சரண் சிங்.

# ஆந்திர மாநிலத்தில் களம்காணும் 159 பெண் வேட்பாளர்கள்

(11-09-99)

ஆந்திர மாநிலத்தில் மக்களவை மற்றும் மாநில சட்டமன்றத்திற்கான தேர்தலில் போட்டியிடும் மொத்த பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை 159. இதில் மக்களவைக்கு 18 பேரும் மாநில சட்டமன்றத்துக்கு போட்டியிடும் 141 பேரும் அடங்குவர். கடந்த 5-ம் திகதியன்று நடைபெற்ற முதற்கட்டத் தேர்தலில் 29 வேட்பாளர்கள் இடம் பெற்றிருந்தனர். இம்மாதம் 11, 18 ஆகிய இரு தினங்களில் நடைபெறவிருக்கும் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டத் தேர்தலில் 130 பெண் வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 11-ம் தேதி நடைபெறும் தேர்தலில் 15 மக்களவைத் தொகுதிகளுக்கும் 105 சட்டமன்ற தொகுதிகளுக்கும் வாக்குப்பதிவு நடைபெறவிருக்கின்றது. 18-ம் தேதி நடைபெறவிருக்கும் மூன்றாவது கட்டத் தேர்தலில் 14 மக்களவைத் தொகுதிகளுக்கும் 98 சட்டமன்ற தொகுதிகளுக்கும் வாக்குப்பதிவு நடைபெறவிருக்கின்றது.

# அடுத்த நூற்றாண்டின் முதல் சூரிய உதயம் இந்தியாவில்!

(11-09-99)

அடுத்த ஆண்டின் ஜனவரி முதல் நாள் புதிய நூற்றாண்டுக்கான ஆரம்ப நாளாகும். அன்று காலை 6 மணிக்கு (இந்திய நேரப்படி) முதல் சூரிய உதயம் இந்திய ஆளுகைக்கு உட்பட்டதான அந்தமான் நிக்கோபார் தீவுகளில் உள்ள காட்சால் என்ற தீவில் உதயமாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆதலால் இந்த நிகழ்ச்சியைக் காண்பதற்கு சுற்றுலா பயணிகள் ஏராளமான அளவில் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே அந்தமான் நிக்கோபார் தீவுகளின் அதிகாரிகள் அதற்கான ஆயத்த வேலைகளில் ஈடுபட்டு உள்ளனர்.


**A.S.C.E.S இன் புதிய வகுப்புக்கள்**

**14 ஆசிரியர்களின் கல்வி புகட்டலால் எமது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர்.**

பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புகள் நடைபெறும் ஒரே இடம் Bio,Chimie, Maths, Tamoul, English, Francais, Histoire, etc சனி பி.ப 1.30-ஞாயிறு காலை 10 மணி முதல்

பிரெஞ்சு
11.09.99 சனி மாலை 3.30 மணி
12.09.99 ஞாயிறு காலை 10 மணி
13.09.99 திங்கள் பி.ப. 3 மணி
14.09.99 செவ்வாய் 3 மணி, 4.30 மணி
15.09.99 புதன் பி.ப. 3 மணி, 4.30 மணி

ஆங்கிலம் 11.09.99 சனி காலை 10 மணி
12.09.99 ஞாயிறு காலை 10, பி.ப. 1.30 - 3.30 மணி

கம்பியூட்டர்
**Win 95/98, Win Nt, Word. Excel. Hardwane** பயிற்சி
11.09.99 சனி காலை 10 மணி
12.09.99 ஞாயிறு காலை 10, பி.ப. 1.30 - 3.30 மணி

சிறுவர்க்கான தமிழ், பிரெஞ்சு, கணித –ஆங்கில வகுப்புகள் பிரதி சனி.பி.ப 1.30 மணி முதல்

நடன வகுப்புகள்: ஞாயிறு பி.ப. 1.30 மணி

சனி, ஞாயிறு வகுப்புகள் நடைபெறும் இடம்:
*41, Rue Didot, 75014 Paris. - Tel: 01 42 57 23 56*
*Mo: Pernety (Dir N°:13)*
திங்கள், செவ்வாய், புதன் வகுப்புகள் நடைபெறுமிடம்
*2, Rue Esclagnon 75018 Paris - M°: Porte de Clignancourt*



வெளிவந்துவிட்டது

**இசைமுரசு 99**

தொடர்புகட்கு: **LUNE**

**International**
*12, Rue Perdonnet, 75010 Paris.*
**Tel:/Fax: 01 42 09 21 43**

ஈழமுரசு
*12, Rue Perdonnet, 75010 Paris.*
**Tel:01 40 37 63 63**








கவிஞர் திவ்வியநாதன் அழைக்கும்
உலகத் தமிழர் பேரவைத் தலைவர்
டாக்டர்.இரா.சனார்த்தனம்
**மணிவிழா !**
19.09.99 (ஞாயிறு) மாலை 4 மணி
இடம்: P.K.M. CINEMA.
7, rue Marx Dormoy, 75018 Paris. (Metro: La Chapelle)
தொடர்புகளுக்கு: 0661150906
அனைவரும் வருக !
Pub




# கிழக்கு தீமோருக்கு ஐ.நா சமாதானப்படை இந்தோனேசியா அழைப்பு



(12.09.99)

கிழக்குத் தீமோரில் இந்தோனேசிய ஆதரவாளர்களால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறைகளை இந்தோனேசிய இராணுவத்தால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியாத காரணத்தாலும் சர்வதேச அழுத்தங்கள் அந்நாட்டின்மேல் பலமாகப் பிரயோகிக்கப்பட்டதாலும் கிழக்குத் தீமோருக்கு சர்வதேச ஐநா. அமைதிப் படை அனுப்பிவைக்கப்படுவதை முதல் முறையாக இந்தோனேசிய அதிபர் பி.ஜே. ஹபீபி ஏற்றுக்கொண்டார்.

இந்தோனேசிய தொலைக் காட்சியில் அவர் பேசியபோது, அமைதியின்மை கிழக்குத் தீமோரில் ஏற்பட்டது முதல், ஏராளமான மக்கள் கொல்லப்பட்டுப் பல மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. நாம் இனிமேலும் இது தொடர்வதை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எப்படியாவது இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் எனக் கூறியவர் தனது படைகள் சர்வதேச படைகளுடன் கைகோர்த்து பணியாற்றும் என்றும் உறுதிகூறினார்.

இந்தோனேசிய இராணுவம் கடந்த ஞாயிறு வரையில் வெளிநாட்டுப் படைகள் இந்தோனேசியாவுக்குள் வருவதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும் ஆயுதப்படைகள் சார்பில் அதன் பேச்சாளர், 'நாம் அரசாங்கத்தின் முடிவுகளை ஏற்றுக்கொள்கிறோம். நாம் சர்வதேச படைகளுடன் இணைந்து செயலாற்றுவோம். இன்றைய நிலையில் நாட்டுக்கும், சர்வதேச சமூகத்துக்கும், கிழக்குத் தீமோருக்கும் இது தான் சிறந்தது' எனத் தெரிவித்தார்.



கிழக்குத் தீமோரில் அமைதி நிலை நாட்டுவதற்கும் அங்குள்ள மக்களுக்கான மீள் குடியேற்றத்தை உறுதி செய்வதற்கும் அனுப்பப்படவுள்ள சர்வதேச அமைதிப்படையில் எந்த நாடுகள் கலந்து கொள்ளவுள்ளன என்பதுவும், எவ்வளவு படையினர் இங்கு ஈடுபடுத்தப்படுவார்கள் என்பதுவும் இதுவரை அறியப்படாத போதிலும், சுமார் 7000 முதல் 10,000 வரையிலான படையினர் கிழக்குத் தீமோருக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று நம்பப்படுகிறது. இங்கு செல்லும் சர்வதேச படைகளில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற நாடுகள் இடம்பெறும் எனத் தெரியவருகிறது. வேறு எந்த நாடுகளின் படைகள் இதில் இணைந்து கொள்ளும் என்று இதுவரை அறியப்படவில்லை.

கடந்த மாதம் 30-ம் திகதி ஐநாவின் ஏற்பாட்டில் கிழக்குத் தீமோரின் எதிர்காலைம் பற்றிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டதில் 78.5 விகிதமானவர்கள் கிழக்குத் தீமோர் இந்தோனேசியாவில் இருந்து முற்றாகப் பிரிந்து சுதந்திரம் அடையவேண்டும் என்பதற்கு வாக்களித்தனர். 1975-ம் ஆண்டு, போர்த்துக்கேய குடியேற்ற நாடாக இருந்த கிழக்குத் தீமோர் இந்தோனேசியாவால் ஆக்கிரமிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# அடுத்த தசாப்தத்தில் அமெரிக்கா ஏவுகணை அச்சுறுத்தலுக்கு உள்ளாகுமாம்

(10.09.99)

அடுத்த பத்து வருடங்களுக்குள் அமெரிக்கா கடுமையான ஏவுகணை அச்சுறுத்தலை எதிர்நோக்கவேண்டிவரும் என இராணுவ ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். நவீன கண்டம் விட்டு கண்டம் தாவும் ஏவுகணைகள் தயாரிப்பதில் வட கொரியா ஈடுபட்டுள்ளது. இதனுடன் ஈரான், ஈராக் போன்ற நாடுகளும் இணைந்து கொள்ளும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

அடுத்த சில வருடங்களில் ஈரான் நவீன அணு ஆயுதமற்ற ஏவுகணைகளைத் தயாரித்துக் கொள்ளும். அதற்கான தொழில் நுட்பத்தினை ரஷ்யாவிடம் இருந்து அது பெற்றுக்கொண்டுள்ளது. அடுத்த தசாப்தத்தின் அரைவாசிக்குள் ஈரானின் ஏவுகணைகள் அமெரிக்காவின்பல பாகங்களிலும் வந்து வீழலாம். அதேபோல் ஈராக்கும் அடுத்த பத்து வருட காலத்திற்குள் வட கொரிய சாயலுடன் அதுபோன்ற தொழில் நுட்பத்துடன் ஏவுகணைகளைப் பரீட்சிக்கும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

வடகொரியா தனது மூன்று கட்ட ஏவுகணையான 'டாய் போடொங் - I' இனை மாற்றியமைத்துள்ளது. இதனை 'டாய்போடொங் - II' எனப் பெயரிட்டுள்ளது. இதன் மூலம் அமெரிக்க நகரங்கள் இலகுவாகத் தாக்கப்படலாம் எனக் கூறும் ஆய்வாளர்கள், வடகொரியாவால் எந்த வேளையிலும் ஏவுகணை பரீட்சார்த்தத்தை நடத்த இயலும் என்றும் ஆனால் அது அரசியல் காரணங்களுக்காக சிலகாலம் பிற்போடப்படலாம் என்றும் தெரிவித்தனர். இதே சமயம் சீனாவின் ஏவுகணைத் தயாரிப்பும் பரீட்சார்த்தங்களும்கூட அமெரிக்க பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகியுள்ளன எனக் கூறப்பட்டுள்ளது. சீனா அண்மையில் DF-31 எனும் நவீன நீண்ட தூர ஏவுகணையை பரீட்சித்தது. இந்த ஏவுகணைகள் 8000 கிலோ மீற்றர்வரை செல்லக்கூடியவை என்றும் மிக இலகுவாக அலாஸ்கா, ஹவாய் போன்றவைகள் தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. இதே வேளை சீனா தனது நகரும் ஏவுகணைகளை அபிவிருத்தி செய்து வருகிறது என்றும், நீண்டதூர இலக்குகளைக் குறிவைக்கக் கூடிய இவை வெகுவிரைவில் பரீட்சிக்கப்படவுள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் நீர் மூழ்கிகளில் இருந்து ஏவக் கூடிய ஏவுகணைகளான J.L-2 களை அடுத்த தசாப்தத்தின் ஆரம்பத்தில் சீனா பரீட்சிக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மலேசியச் சிறையில் கனடியப் பத்திரிகையாளர்

(12.09.99)

கனடிய பத்திரிகையாளர் ஒருவர் மலேசிய மேன்முறையீட்டு நீதி மன்றத்தினால் ஆறுவார சிறைத்தண்டனைத் தீர்ப்பைப் பெற்றுள்ளார். 'டோவ் ஜோன்ஸ்' நிறுவனத்தினால் நடத்தப்படும் 'பார் ஈஸ்ட்டர்ன் எக்கனமிக் ரிவீயு' எனும் சஞ்சிகையின் மலேசியக் கிளையின் அதிபரான மர்ரே ஹியுபர்ட் எனும் 50 வயதானவரே, தான் சஞ்சிகையில் எழுதிய ஒரு விடயம் சம்பந்தமாக தண்டனையை அனுபவித்து வருகிறார். ஒரு பத்திரிகையாளர் எழுதிய விடயமொன்றில் முரண்பாடுகள் காரணமாக அவர் சிறைக்குள் தள்ளப்படுவது மலேசியாவில் இதுதான் முதற்தடவை எனச் சொல்லப்படுகிறது.


திரு.ஹியுபர்ட் எழுதியதாகச் சொல்லப்படும் கட்டுரை, உயர் கல்லூரியொன்றின் மாணவன், தான் பங்குபற்றிய விளையாட்டு அணியில் இருந்து வெளியே தூக்கி எறியப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நீதிமன்றம் சென்ற விடயம் பற்றியதே. இவரது எழுத்தில் முறைகேடு இருந்ததாகக் கூறி 1997-ம் ஆண்டில் அவருக்கு மூன்று மாத சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் அதனை எதிர்த்து அவர் முறையீடு செய்ததில் சிறைத் தண்டனை ஆறு வாரங்களுக்குக் குறைக்கப்பட்டது. அவரது முறையீட்டு விசாரணை இரண்டு வருடங்களாக நடந்து வந்துள்ளது என்பதும் இறுதியாகக் கடந்த சனியன்று அவர் சிறைக்குள் அனுப்பி வைக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மொஸ்கோ குண்டுவெடிப்பில் 90 பேர் வரை மரணம்

(10.09.99)

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள குடியிருப்பு ஒன்றில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற குண்டுவெடிப்பு ஒன்றினால் குறைந்தது 90 பேராவது கொல்லப்பட்டுள்ளனர் என ரஷ்ய பொலிசார் தெரிவித்துள்ளனர். இச் சம்பவத்தில் மேலும் 250 பேர் வரை காயங்களுடன் மொஸ்கோ வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வியாழனன்று அதிகாலை பல கட்டடத் தொகுதிகளைக் கொண்ட குடியிருப்புப் பகுதியில் பாரிய வெடியோசை கேட்டதென்றும் இயற்கைவாயுக் கசிவினால் இவ் வெடிப்பு ஏற்பட்டிருக்கலாம் என்றும் முதலில் சந்தேகிக்கப்பட்டது. இதன் போது இரண்டு கட்டடங்களுக்கு நடுவில் ஒரு பகுதி முற்றாக தரைமட்டமாகியுள்ளது. மொஸ்கோ நகரின் விசேட பொலிஸ் குழுவினர் அவ்விடத்திற்கு விரைந்து விசாரணை நடத்தியதில் 200 கிலோ வரை



யிலான சக்திவாய்ந்த குண்டு வெடிக்க வைக்கப்பட்டிருக்கின்றது என்றும், இதன் பின்னணியில் இஸ்லாமிய போராளிகளின் கரம் உள்ளதென்றும் கூறியுள்ளனர்.

இதற்கிடையே ரஷ்ய செய்தி நிறுவனமான 'இன்டர் பாக்ஸ்' இற்கு பெயர் வெளியிட விரும்பாத ஒருவர், தொலைபேசியில் ரஷ்யப் படைகள் டகஸ்தானிலும் செச்சினிய கிராமங்கள் மேலும் நடத்தும் தாக்குதல்களுக்குப் பதிலாகவே இத்தாக்குதல்கள் அமைந்துள்ளன என்றும் இவைகள் இன்னும் தொடரும் என்றும் கூறியுள்ளார்.

# அமெரிக்க-சீன அதிபர்கள் நியூசிலாந்தில் சந்திப்பு

(13.09.99)

அமெரிக்க அதிபர் பில்கிளின்டனும் சீன அதிபர் ஜியாங் செமினும் தங்களது நாடுகளுக்கிடையே கடந்த சில மாதங்களாக நீடித்து வந்த முறுகல் நிலையை நீக்கி மீண்டும் கூட்டு நல்லுறவுகளை வளர்த்துக்கொள்வதாக அறிவித்தனர். பெல்கிரேட்டில் அமைந்திருந்த சீன தூதரகத்தின்மேல் அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து இரு தரப்பு உறவுகளும் முறிவடைந்தன. சீனா விமானத் தாக்குதல்களுக்கு அமெரிக்கா பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கவேண்டும் என வற்புறுத்தி வந்தது. இதற்கிடையே அமெரிக்க அதிபர் சீன அதிபருடன் தொடர்புகொள்ளப் பல தடவைகள் முயன்றபோதிலும் சீனத் தரப்பு அதற்கு இணங்கவில்லை. இந்நிலையில் நியூசிலாந்தில் ஆரம்பமாகியுள்ள ஆசிய-பசுபிக் பொருளாதார அமைப்பின் வருடாந்த மாநாட்டில் இவ் இரு அதிபர்களும் கலந்து கொண்டனர். இதன்போது இருவரும் சந்தித்துக்கொண்டதில் இதுவரை காலமும் இருந்துவந்த சிக்கல்களை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

அமெரிக்க-சீன வர்த்தக அமைச்சர்கள் கடந்த ஞாயிறன்று சந்தித்துக்கொண்டனர். இதன் போது சீனாவை இவ்வருடத்திற்குள் உலக வர்த்தக அமைப்பிற்குள் இணைத்துக்கொள்வது பற்றி பேசினார்கள். கடந்த ஏப்ரல் மாதம் இதுபற்றிய பேச்சுக்கள் இடம் பெற்றதென்றாலும் பேச்சின் இடையே அமெரிக்க அதிபர் சீனப் பிரதமர் சூரொன் ஜியின் பேச்சிற்கு மறுப்புத் தெரிவிக்குமுகமாக அதிலிருந்து வெளியேறினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கிரேக்க நில நடுக்கத்தில் 65 பேர் வரை பலி

கிரேக்க தலைநகர் ஏதென்ஸில் கடந்த செவ்வாயன்று பிற்பகல் இடம்பெற்ற நில நடுக்கத்தில் குறைந்தது 65 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் மேலும் பலர் இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டிருக்கலாம் என்றும் கிரேக்க அரசு அறிவித்துள்ளது. இந் நில நடுக்கத்தில் சுமார் 2000 இற்கும் அதிகமானோர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். நகரின் 'மெனிடி' பகுதியே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. மற்றும் நூற்றுக்கும் அதிகமான கட்டடங்கள் இடிந்து போயுள்ளன. அத்துடன் 2500 இற்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன.

கிரேக்கத்தில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது என்ற செய்தி அறிவிக்கப்பட்டவுடன் துருக்கி தனது மீட்புக்குழு ஒன்றினை கிரேக்கத்துக்கு அனுப்பிவைத்தது. கடந்த ஒகஸ்ட் 17-ல் துருக்கியில் நடந்த நில நடுக்கத்தின் போது கிரேக்கமும் ஒரு மீட்புக்குழுவினரை அனுப்பியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. நீண்ட நாட்களாக பரஸ்பரம் பகைமை காட்டி வந்த இரு நாடுகளும் 'நில நடுக்கங்கள் மூலமாக' தமது உறவுகளை சரிசெய்துகொள்ள முனைந்துள்ளன என அரசியல் அனுமானிகள் கூறுகின்றனர்.



# ருமேனியா-யூகோஸ்லாவியா இடையே முறுகல் நிலை!

09.09.99

ருமேனியா கடந்த வியாழனன்று முதல் யூகோஸ்லாவிய கப்பல்களைத் தனது நீர்ப் பிராந்தியத்திற்குள் வருவதைத் தடைசெய்துள்ளது. யூகோஸ்லாவிய அரசு ருமேனிய கப்பல்கள் டனூப் ஆற்றினூடே பயணிப்பதைத் தடைசெய்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொசோவோ பிரச்சினைகளில் ருமேனியா நேட்டோ விமானத்தாக்குதல்களை ஆதரித்திருந்ததன் காரணமாக யூகோஸ்லாவியா கடும் எதிர்ப்பினை அந்நாட்டின்மேல் தெரிவித்துள்ளது.

அத்துடன் அதனது கப்பல்கள் டனூப் ஆற்றின் ஊடாக பயணம் மேற்கொள்ளவும் தடைவிதித்துள்ளது. இதன் காரணமாக ருமேனிய கப்பல் நிறுவனங்களில் வேலை செய்யும் 3,000 பேர் வரை வேலை இழந்துள்ளனர் என்றும் 90 மில்லியன் அமெரிக்க டொலர் வரை தமக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் ருமேனியா கூறியுள்ளது. நேட்டோவின் 78 நாள் தாக்குதல்களால் டனூப் ஆற்றின் பல பாகங்கள் தகர்க்கப்பட்டன. இதனால் அதனூடான பயணமும் பல இடங்களில் தடைக்குள்ளாக்கின. யூகோஸ்லாவியா இத்தடைப் பகுதிகளுக்கு மாற்று வழிகளைப் பாவித்து வருவதானாலும் அதனூடே ருமேனிய கப்பல்கள் செல்வதைத் தடை செய்துள்ளது. அதேவேளை விமானத்தாக்குதல்களை எதிர்த்த ரஷ்ய, உக்ரேனிய கப்பல்கள் தொடர்ந்தும் பயணம் செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்றும் ருமேனியா தரப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொசோவோவில் அமைதிப்படை சேர்பியர் – அல்பேனியர் மோதல்

11.09.99

கொசோவோவின் வடபகுதியில் அமைந்துள்ள மிட்ரோவிட்சா நகரப்பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக பூர்வீக அல்பேனியர்களும் சேர்பியர்களும் மோதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களது பிராந்தியத்தைப் பாதுகாக்கும் அமைதிப் படைப்பிரிவினரும் இதில் தலையிட்டுள்ளனர். இதுவரை இங்கு நடந்துவரும் மோதல்களில் 250 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனரெனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

'மிட்ரோவிட்சா' 25 ஆயிரம் சேர்பியர்களையும் 15,000 வரையிலான பூர்வீக அல்பேனியர்களையும் தற்போது கொண்டுள்ளது. இப்பகுதியில் ஒகிச்சு இன் பிரெஞ்சுப் படைப்பிரிவு பாதுகாப்புக் கடமைகளை மேற்கொண்டுவருகிறது. இந்நகரின் பிரதான இபோர் பாலத்தின் இருபுறமும் இச் சமுகத்தினர் வாழ்கின்றனர். இப்பாலத்தின் இரு பகுதிகளிலும் பிரெஞ்சுப் படைப் பிரிவு மற்றய சமுகத்தினர் ஊடுருவாதபடி பாதுகாக்கின்றனர். கடந்த சில வாரங்களுக்கு முன்னரும் இப்பகுதியில் இரு தரப்பினரும் மோதிக் கொண்டனர். புதிய அசம்பாவிதம் இரண்டு நாட்களுக்கு முன் ஆரம்பித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. 200 இற்கும் மேற்பட்ட அல்பேனிய சமுகத்தவர் பாலத்தினூடே சேர்பியரின் குடியிருப்பு பகுதிக்குள் ஊடுருவ முயன்றுள்ளனர். அதனிடையே பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த அமைதிப் படையினர் அவர்களைத் தடைசெய்தபோது மோதல்கள் வெடித்துள்ளன. இதன்போது சேர்பியரும் போத்தல்கள், கற்கள் போன்றவற்றால் தாக்கியுள்ளனர். மோதல்களைத் தடுக்க அமைதிப்படையினர் கண்ணீர் புகை போன்றவற்றைப் பாவிக்கவேண்டியேற்பட்டது எனத் தெரிவித்துள்ளனர்.

# தொலைக்காட்சி நிலையத்துக்குள் புகுந்தவர் கைதுசெய்யப்பட்டார்

இங்கிலாந்தின் பி.பி.சி. தொலைக்காட்சி நிலையத்துக்குள் அத்துமீறிப் புகுந்து அங்கிருந்த பொருட்களை நாசம் செய்த ஒருவரை பிரித்தானிய பொலிசார் கைது செய்தனர்.

கடந்த செவ்வாயன்று காலை பெயர் குறிப்பிடப்படாத நபர் ஒருவர் பலமான பாதுகாப்பு வலையத்தையும் தாண்டி, பிரதான வாசல் வழியாக பாய்ந்து பி.பி.சியின் பிரதான தொலைக்காட்சி தலைமையகத்தினுள் நுழைந்துள்ளார். அங்கிருந்த பாரிய கண்ணாடியை நொருக்கி, பின்னர் தளபாடங்களை நாசம் செய்தார். செய்தி வாசிப்பில் இருந்த அறிவிப்பாளர்கள் பயத்தினால் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர். இவர் பின்னர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டாலும் என்ன விதமான குற்றத்தை இவர் மீது சுமத்துவது என ஆலோசிக்கப்படுகிறது என பொலிசார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தின்போது யாரும் காயங்களுக்கு உள்ளாகவில்லை என்ற போதிலும் பல மில்லியன் பெறுமதியான தளபாடங்கள் நாசமாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தகவல் வலையினூடாக குழந்தை விற்பனை நிறுத்தப்பட்டது

தகவல் வலையினூடாக பிறக்காத மூன்று குழந்தைகளின் விற்பனைக்காக நடந்த பேரத்தை தகவல் வலை ஏலவிற்பனை நிறுவனத்தினர் இரத்துச் செய்தனர். கடந்த திங்களன்று இந்த தகவல் வலையில் அமெரிக்க பல்கலைக் கழக மாணவர்கள் இருவருக்கு அடுத்தமாதம் பிறக்கவிருக்கும் ஒரு ஆண் குழந்தையின் விற்பனைக்கான விலைக்கோரல்கள் பதிவாகின. அதேபோல் மேலும் இரண்டு குழந்தைகளுக்குமான விலையும் கோரப்பட்டிருந்தன. ஒரு சில நாட்களுக்குள்ளாகவே இவர்களின் விலை, பல மில்லியன் டொலர்களைத் தொட்டன. ஆனால் மனித உறுப்புக்களையோ அல்லது மனிதர்களையோ விற்பனை செய்வது சட்டவிரோதமானது என்பதால் இதில் ஈடுபட்ட நிறுவனத்தினர் உடனடியாக அந்த விளம்பரத்தை வலைத்தொடர்பில் இருந்து அகற்றிவிட்டனர். குழந்தைகளின் விலை கடந்தவாரம் 5.7 மில்லியனாக இருந்ததென்று கூறும் நிறுவனத்தினர், ஒருவார காலத்தில் அது 109,000 அதிகமான விலைக்குக் கோரப்பட்டிருந்தது. இது போன்றுதான் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சிறுநீரகம் ஒன்றும் பல மில்லியன்களுக்குக் கோரப்பட்டிருந்தது என்றும் பின்னர் அது விற்பனையில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டது என்றும் குறிப்பிட்டனர்.

# ஒப்பியம் தயாரிப்பில் ஆப்கானிஸ்தான் முதலிடம்

ஹெரோயின் எனப்படும் போதைப் பொருளுக்கான மூலமான ஒப்பிய செடிகளை ஆப்கானிஸ்தான் அதிகமாக வளர்த்துள்ளது என ஐநா சபை குற்றம் சாட்டியுள்ளது. மற்றைய நாடுகளின் செய்கையுடன் ஒப்பிடும் போது ஆப்கானிஸ்தான் மூன்று மடங்கு அதிகமான செடிகளை பயிரிட்டுள்ளது என அவ்வறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவ்வருடம் ஆப்கானிஸ்தான் சுமார் 5,000 தொன் ஒப்பிய செடிகளை அறுவடை செய்துள்ளது. மற்றைய நாடுகளின் 1,500 தொன்களுடன் இதனை ஒப்பிடமுடியாது எனக் கூறும் ஐநா சபை, இது ஆபத்தான ஒரு வெளிப்பாடாகும் என எச்சரித்துள்ளது.

# இஸ்தான் பூலில் இரண்டு குண்டுவெடிப்புக்கள் 20 பேருக்குமேல் காயம்

துருக்கியில் கடந்த வெள்ளியன்று இரண்டு குண்டுவெடிப்புக்களால் 20க்கும் அதிகமானோர் காயமடைந்தனர் என்று 'அனத்தோலியா' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இஸ்தான் பூல் நகரின் இரண்டு அரச கட்டடங்களுக்குள் இக்குண்டு வெடிப்புக்கள் நிகழ்ந்துள்ளன. ஆறுமாடிகளைக் கொண்ட தொழிலாளர் மற்றும் தொழிலாளர் நலன் போன்றவைகளுக்கான அமைச்சின் கட்டடத்தின் வாசலில் ஒரு குண்டு வெடித்ததாகவும் இரண்டாவது குண்டு நகரின் மற்றுமொரு கட்டடத்தின் வாசலில் வெடித்ததாயும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக் குண்டுத்தாக்குதல்களுக்கு இதுவரை யாரும் உரிமைகோராத நிலையிலும் குர்திஷ்தான் போராளிகளே இதற்கு காரணமாய் இருக்கலாம் என பாதுகாப்பு வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# பரந்த ஆபிரிக்க ஒருமைப்பாட்டுக்கு லிபியத் தலைவர் அழைப்பு

ஆபிரிக்காவிற்கான அரசியல், பொருளாதார கூட்டமைப்பு அதாவது ஆபிரிக்க கூட்டமைப்பு 2001ம் ஆண்டு நிறுவப்படும் என லிபியத் தலைவர் மொகமட் கடாபி தெரிவித்தார்.

அவரது அரசு பதவியேற்று முப்பது வருட நிறைவை முன்னிட்டு தனது நாட்டின்மேல் விதிக்கப்பட்டிருந்த பொருளாதார தடையை ஐநா நீக்கியதை முன்னிட்டு, ஆபிரிக்க நாடுகளின் அமைப்பின் உச்சி மாநாடொன்றை லிபியத் தலைவர் கடாபி கூட்டினார். லிபியப் பாலைவனத்தில் அமைந்துள்ள அவரது சொந்த நகரான சூர்த்தில் சுமார் 43 ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் கூடினார்கள். கடந்த புதன்று ஆரம்பமான இம்மாநாட்டின்போது விசேட படையணிகளின் அணிவகுப்பும் இடம் பெற்றது.

இதில் பேசிய லிபிய அதிபர், அடுத்த எட்டு வருடங்களுக்குத் தனது அரசு 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஆபிரிக்க இளைஞர்களின் உயர்கல்விக்காக செலவிடும் என்றார்.

நெல்சன் மண்டேலா அதிபர் பதவியில் இருந்து வெளியேறியதும் ஏற்பட்ட வெற்றிடத்தினை கடாபி அவர்கள் தனது பலத்தின் மூலம் ஈடுசெய்ய முனைந்துள்ளார் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய $20M^3$ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லோர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.



நித்தி:
0148050214
0613342518
0607348051 / 0148385825

Pub Fr 23032

## கீபோட் வகுப்புகள்

குறுகிய காலத்தில் சர்வதேச முறையில்
*(Intenrnational Method)*
கீபோட் கற்பிற்கப்படும்.
சனி, ஞாயிறு, புதன், வியாழன்
ஆசிரியர் S.S. தில்லைச்சிவம்
56, Rue Riquet, 75019 Paris (M°: Riquet)
Tel: 01-40 37 56 69

## ரவி வாகன சேவை

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது
தொலைபேசி: 0148765190
0607622689



Pub Fr 23034

உத்தியோகபூர்வ
## மொழிபெயர்பு சேவை

கிருஷ்ணபிள்ளை மாயவன்
15 ஆண்டுகளாக அரச அங்கிகாரம் பெற்று சட்ட ஆலோசனைகள் மொழிபெயர்ப்புகள் சேவையாற்றிவருகிறோம்
39, bd de la Chapelle
75010 Pari s
M°: LA CHAPELLE OU GARE DU NORD
TEL/FAX: 0140345341
எம்.ஜி.ஆர் வீடியோ & ரெக்ரைல்ஸ் நிறுவனத்தின் உள்ளே
Pub Fr 23035

## P.S வாகன சேவை

உங்கள் தேவைகளுக்கு
24 மணி நேர சேவை
தொடர்புகட்கு:
ஜேர்மன் - T.P: 01717489297
பிரான்ஸ் - T.P: 0164721143
கொர்னலியூஸ்
(Cornelius)
குமார்



Pub Fr 23037

## தென்றல் இல்லம்

உங்கள் இல்லங்களில் நடைபெறும் வைபவங்களுக்கு வேண்டிய அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்வதுடன், சுவை மணம் குன்றாத உடன் கோப்பித்தூளும் பெற்றுக்கொள்ள
60, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle
Tel: 01 42 09 36 09
Pub Gra.

## Lune

LUNE
ELECTRONIQUE INFORMATIQUE
05, Rue Perdonnet, 75010 Paris
Tel. & Fax: 01 53 26 76 70



3490F TTC

**Processeur AMD K6 11 350 Mhz**
Carte Mère PC 100
- Carte Video 8 Mo AGP
- Carte Son PCI Sound Pro
Disque Dur 4,3 Go Ultra DMA
SDRAM 32 Mo PC 100
Lecteur CD ROM 40x
Lecteur Disquette 3,5"
Ecran 15' MPR II
HP PMPO 160 W
Clavier 105 Touches PS/2
Souris PS/2
Botier Alim Moyan Tour AT

GARANTIE 2 ANS

உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களில் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் காத்திருக்கின்றார்கள்.

## 'VICTOR SARL'

கட்டட, மின்சார, தண்ணீர், கழிப்பறை திருத்த வேலைகளை மிகக் குறைந்த கட்டணத்துடன் திறமையான தொழிலாளர்களைக்கொண்டு அமைத்துக்கொள்ள
VICTOR SARL
43, Rue de la Reunion, 75020 Paris
Tel: 01 44 93 90 30

## சிவாசினி வாகன சேவை
*Chivashini Transport*

வாகன தேவைகளுக்கு
24 மணி சேவை
தொடர்புகட்கு:சிவாஜினி வீடியோ
06 14 61 69 84
01 42 09 23 59
01 49 37 26 03
01 42 05 44 04



Pub Fr 23036





Réseau
## WWA
உலகம் உங்கள் கைகளில்





### மீண்டும் அதிகரித்த நிமிடங்களுடன் உங்கள் சேவையில்!

**Maghrab 80Mn** **Afrique 50Mn**

**Asie 50Mn**

Surcharge : 3F à chaque connexion.

**KING Telecom**
92, Rue de Bellville,
75020 Paris.
(M°: Pyrénées)
Tél.: 01 44 62 93 96
Fax: 01 44 62 94 96

**WWA**
86, Rue de Bellville,
75020 Paris.
(M°: Pyrénées)

**KING Telecom**
33, Place de Général de Gaulle
60100 Creil.
(Place de la Gare)
Tél:03 44 55 41 59
Fax: 03 44 55 42 51

வர்த்தகர்களுக்கு விசேட கழிவுண்டு

அனைத்துத் தொடர்புகளுக்கும்: 01 43 15 17 17 - விற்பனையின் பின்னான சேவைகளுக்கு: 01 43 15 17 18

Pub.

ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# சந்திரிகாவின் 'போலி'யோ

போலியோ நோய் தடுப்பு திட்டத்தை முன்னிட்டு போர் நிறுத்தத்தில் ஈடுபடுமாறு ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யுனிசெப்) வருடா வருடம் சிறீலங்கா அரசிடமும், விடுதலைப் புலிகளிடமும் கோரிக்கை விடுத்து வந்துள்ளது. யுனிசெப்பின் இக் கோரிக்கையை விடுதலைப்புலிகள் ஒவ்வொரு வருடமும் ஏற்றுக்கொண்டு அக் காலப்பகுதிகளில் யுத்த நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர். இவ்வாண்டும் யுனிசெப் நிதியத்தினால் இரு தரப்பிடமும் செப்டெம்பர் 10ம், 11ம் திகதிகளிலும், அக்டோபர் 15ம், 16ம் திகதிகளிலும் யுத்த நிறுத்தத்தில் ஈடுபடுமாறு கோரிக்கை விடப்பட்டிருந்தது.

ஆனால் இம்முறை கோரிக்கைவிடப்படுவதற்கு முன்பே, போலியோ தடுப்புத் திட்டக்காலத்தில் யுத்த நிறுத்தத்தில் ஈடுபடவேண்டும், புலிகளும் இதற்கு உடன்பட வேண்டும் என சந்திரிகாவே பல சர்வதேச ஊடகங்களுக்கு செய்தி வழங்கியதுடன், யுனிசெப்பின் வேண்டுகோளுக்கு இணங்க விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு சம்மதம் தெரிவித்திருந்தமையை அடுத்து பிரபாகரனின் இவ் அறிவிப்பை தான் வரவேற்பதாகவும் கூறி சர்வதேசத்தில் தன்னை 'நல்லவர்' போன்றும் காட்டிக்கொண்டார்.

ஆனால் யுத்தநிறுத்தம் முடிவடைந்த மறுநாள் காலை விடிவதற்கு முன்னரே, தமிழ் மக்கள் குடியிருப்புக்கள் மீது பாரிய தாக்குதலை நடாத்தியபடி சந்திரிகாவின் இராணுவப்படை தனது இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துவிட்டது. ரணகோஷா–5 என்று பெயருடன் விமானங்களும் டாங்கிளும் தாக்குதல் நடாத்தி தமிழ் மக்களை அழித்து, மண்ணை ஆக்கிரமிக்க முனைந்தது. யுத்தநிறுத்தத்தில் இருந்து புலிகள் மீண்டு தாக்குதலை தடுத்து நிறுத்துவதற்கிடையில் தமிழ் மண்ணை ஆக்கிரமித்து விடவேண்டும் என்பதே சந்திரிகாவின் எதிர்பார்ப்பு. ஆனால் அவர்களின் திட்டங்களை தவிடுபொடியாக்கி முன்னேறிய படையினர் பெரும் இழப்புக்களுடன் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேசத்தில் தமிழ் மக்களின்அபிமானி போன்று தன்னை காட்டிக்கொண்டு, தமிழர்களை அழிக்க முனையும் சந்திரிக்காவின் போலி முகத்திற்கு தலைவர் கொடுத்த பதிலடியே ரணகோஷா மீதான தாக்குதலாகும்.




நன்றி: 'தினக்குரல்'

# உங்களது சமாதான நகரமல்ல எமது தலைநகரம்!

## பார்வை

திருமலையை ஐக்கியநாடுகள் சபையின் பொருளாதார சமூக மேம்பாட்டு நிறுவனம் (UNESCO) சமாதானத்திற்கான நகராக அறிவிக்குமாறு சிங்களத்தைக் கேட்டதாகவும் தமது அரசு அதனை ஏற்றுக்கொண்டுவிட்டதாகவும் அறிவிக்கப்படுகின்றது. எமது தலைநகரான திருமலையைச் சமாதான நகராக ஏன் சிங்கள நாடு ஏற்றுக் கொண்டது? அது போன்று எதற்காக UNESCO திருமலையை சமாதான நகராக கருதுகின்றது?

இதற்குச் சிங்களத் தரப்பு, இங்கு மூவின மக்களும் வாழ்வதால் இதனைத் தேர்வு செய்ததாகக் காரணம் கூறுகின்றனர். கொழும்பிலும், கண்டியிலும் கூட மூவினமும் வாழ்வதால் ஏன் அவற்றைச் சமாதான நகராகக் கருதாமல் எமது திருமலையை சமாதான நகராக கூறுகின்றனர்.

திருமலை இன்று போரினால் சிதைக்கப்படும் தமிழர் தலைநகரமாகும். முப்படைகளும் முகாமிட்டு சிங்கள குடியேற்றங்களால் எம்மிடமிருந்து பறிக்கப்பட்ட நகரை எப்படி சமாதானத்திற்கான நகராகச் சிங்களம் கருதலாம்.

1. திருமலை மூவின மக்களின் நகரல்ல. அது தமிழ் மக்களின் நகர். சிங்களக் குடியேற்றங்கள் மூலம் இது எம்மிடமிருந்து பறிக்கப்பட்டது. இன்றும் சிங்கள அரசு தமிழர்களை வதிவிடங்களில் இருந்து விரட்டுவதை 'லிங்கநகர் விடயங்க' உறுதிப்படுத்துகின்றன.
2. சமாதானம் திருமலையில் உருவாக வேண்டுமாயின் சிங்கள முப்படைகளும் வெளியேறி தமிழர்கள் தமது வதிவிடங்களில் குடியமர வேண்டும். இதனைச் சிங்களம் 'ஏற்றுக்கொள்ளாத வரை' திருமலையில் அமைதி ஏற்படாது.
3. இதற்கு மாறாகத் திருமலையைச் சமாதான நகராக அறிவிப்பது, 'உள்நோக்கம் கொண்ட' நடவடிக்கையாகும். திருமலைக்குச் சிங்களக் குடியேற்றவாசிகளையும் 'பங்காளிகளாக' உலகை ஏற்க வைப்பதற்கான திட்டமே இதுவாகும்.

திருமலை எமது தலைநகர். தேவைப்பட்டால் அனுராதபுரத்தை அல்லது கண்டியை அல்லது கொழும்பைச் சமாதான நகராகப் பிரகடனப்படுத்தட்டும்.

* * *

வலிகாமம் வடக்கைச் சுவீகரித்து மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலையும் கீரிமலையையும் பறித்து இராணுவ வலயமாக்கிய சந்திரிகா அரசு, அதே பகுதியில் மகாஜனாக் கல்லூரியை இயங்க வைக்கப்போவதாகவும் அதற்காக நிலங்களைக் கையளிக்கப் போவதாகவும் (?) கூறுகின்றது. இது வேடிக்கையானது என்றாலும் சந்திரிகா அரசின் விண்ணர்கள், 'தமிழர்களை எடைபோடும் முறை' அவதானிக்கத்தக்கது.

மகாஜனாக் கல்லூரி பாரம்பரியமான பிணைப்பைப் பழைய மாணவர்களுடன் கொண்டது. இப் பழைய மாணவர்கள் உலகம் பூராவும் பரவியுள்ளனர். இவர்களிடம் தமது கல்லூரியின் வளர்ச்சி பற்றி தீவிர அக்கறையுண்டு. இதனைக் குறிவைத்தே சந்திரிகாவின் அரசு மகாஜனாவை இயங்க வைக்கப் போவதாகக் 'கதை' விட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு வாழ் மக்கள் இன்று பெரும்பாலும் இடம்பெயர்ந்தவர்களே. இவர்கள் தமது வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதேவேளை சிங்கள குடியேற்றங்களையே இராணுவம் திட்டமிடுகின்றது என்பதற்கு தகுந்த ஆதாரங்கள் உண்டு. இந் நிலையில் மகாஜனாக் கல்லூரியினை இயங்க வைக்கப் போவதாகக் கூறுவது சதித் திட்டமேயாகும்.

* * *

மன்னார் அரச அதிபர் குரூஸ் மகைதும், கிளிநொச்சி-முல்லை அரச அதிபர்களுக்கான இடமாற்ற உத்தரவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய விடயங்கள் ஆகும். தமிழ் அரச அதிபர்கள் சிங்கள அரசுகளுடனான தமது சமரசங்களையும் மீறி வெளியிடும் அறிக்கைகள் சிங்கள அரசின் பரப்புரைகளை பாதிக்கின்றன. தமிழர்களின் அறிக்கைகளை தனது உத்தியோகபூர்வ 'பரப்புரை வித்தைகளினால்' முடிவரும் அரசுக்கு, இவ் அரச அதிபர்களின் அறிக்கைகள் இடையூறாக, அமைந்தன. சந்திரிகாவின் சொந்தத் திட்டத்திலேயே தமிழரைத் திருப்பி அடிப்பது போன்ற நிலையிது. மேலும் நீண்ட கால நோக்கில் சிங்களத்தின் போர் இயந்திரத்திற்கு இது இடையூறானது. இதனாலேயே, வடக்குகிழக்கு சிவிலியன் ஆளுநராக 'ஒரு சிங்கள இராணுவத் தளபதியை நியமித்தமை'. இந் நீண்டகால நோக்கிற்கான திட்டமாகும். ஒரு சிங்கள அதிகாரியே அல்லது இராணுவ அதிகாரியே சிங்கள அரசின் போர்த்திட்டத்தையும் பரப்புரைத்திட்டத்தையும் விசுவாசமாக இணைத்துச் செல்வார் என நம்பப்படுகின்றது. ஆயினும் தமிழ் அதிகாரிக்கு சிங்கள அரசுடன் என்ன வேலை?

* * *

சிங்களத்தின் உள்முரண்பாடுகள் எப்போதும் தவிர்க்கமுடியாதவை. போருக்கும் பேச்சுவார்த்தைக்கும் இடையில் முரண்பாடுகள் உண்டு. சர்வோதயம் ஆரியரட்னா பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கோருகின்றார். ஆனால் சோபித தேரர், போர் மட்டுமே தீர்வு என்கிறார். ஆனால் இருவரும் சிங்களத்தின் இரு தூண்கள். இருவருமே எமது மணலாற்றைப் பறித்து வெலிஓயா என மாற்ற உழைத்தவர்கள். ஆரியரட்னா பேச்சுக்களை கேட்பது, சந்திரிகாவின் அரசியல் தேவை 'பேச்சுக்களே' என்ற ஊகத்தினால் ஆகும். ஆரியரட்னா போரை விரும்புவார்; அது உடனடி வெற்றியை தருமெனில் என்றால் மட்டுமே. மாறாக சோபித தேரர் போரை நேசிப்பது, தமிழர்களை அழிக்க 'போர் மட்டுமே வழி' எனக் கருதுவதாலாகும். சந்திரிகாவுக்கும் அவருக்கும் இடையேயுள்ள அணுகுமுறை முரண்பாடு மட்டுமே இது.

இராணுவத் தலைமை போரை மட்டுமே வலியுறுத்துகின்றது. ஏனெனில் அதுவே இராணுவத்திற்கு அதிகாரத்தைத் தருகின்றது. அவர்கள் சந்திரிகாவின் இரட்டை வேடப் பேச்சுக்களை இரசித்தனர். அதன் சர்வதேச பலனை அனுபவித்தனர். ஆனால் இன்று போர் தீவிரம் பெற்றுள்ளதால், அரசியல் இலாபங்களுக்கான சமரசம் இராணுவத்திற்கு சோர்வைத்தருகின்றது. அவர்கள் இப்போது சமாதானப் பேச்சுக்கள் பற்றிப் பேசுபவர்களைத் தமது இராணுவ ஆட்சேர்ப் புத்திட்டத்தின் எதிரிகளாகப் பார்க்கின்றனர்.

இவ் உள்முரண்பாடுகளே சிங்களத்தின் மீது நாம் தொடுக்கும் தொடர்ச்சியான போரின் விளைவுகளாகும்.

– ராஜா

# தமிழகத் தேர்தல்

*மீண்டுமொருமுறை உலகின் பெரிய ஜனநாயக நாடு தனது பொதுத் தேர்தலைச் சந்திக்கிறது. 1952-ம் ஆண்டில் இந்திய தேசம் தனது முதலாவது பொதுத் தேர்தலைச் சந்திக்க ஆரம்பித்து 1999 இல் மீண்டும் வந்து நிற்கிறது. இக் காலப்பகுதிகளுக்கிடையே இந்திய அரசியலில் எத்தனையோ மாற்றங்கள் வந்தும்போயுமுள்ளன. கடந்த 50 வருடங்களில் இந்தியா சந்தித்த பொதுத் தேர்தல்களையும் தமிழகத்தின் அப்போதைய நிலைமினையும் இக்கட்டுரை கோடிட்டுக் காட்டுகிறது. இந்திய தேர்தல் காலத்தில் 'தேர்தல் களத்தின்' இக்கட்டுரை பொருத்தமானதெனவே தோன்றுகிறது. சில வாரங்கள் இது தொடராக வரும். — ஆர்.*

# கடந்த 50 ஆண்டுகளின் ஒரு நோக்கு

4

1980 நாடாளுமன்றத்திற்கான தேர்தல் நடந்தது. மீண்டும் இந்திரா காங்கிரசு ஆட்சியைக் கைப்பற்றியது. இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. இரண்டு இடங்களில் மட்டுமே வெற்றிபெற முடிந்தது. இ.காங்கிரசு 20 இடங்களிலும், தி.மு.க. 18 இடங்களிலும் வெற்றி பெற்றன.

1977-ல் மத்தியில் ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்ததும், உ.பி.பீகார், இராஜஸ்தான், பஞ்சாப், அரியானா, மேற்கு வங்கம், ஒரிசா, இமாசலப் பிரதேசம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஆட்சியில் இருந்த காங்கிரசு அரசாங்கங்கள் கலைக்கப்பட்டன. மீண்டும் இ. காங்கிரசு மத்தியில் ஆட்சிக்கு வந்ததும் ஜனதா கட்சிக் ஆட்சியில் இருந்த மாநில அரசுகள் கலைக்கப்பட்டன.

1980-ல் எம்ஜிஆர். மேல் ஊழல் புகார்ப்பட்டியலை தி.மு.க. தயாரித்து ஆளுநரிடம் கொடுத்திருந்தது. இந்த ஊழல் பட்டியலின் பேரில் எம்ஜிஆர். ஆட்சி கலைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் இ.காங்கிரசும் தி.மு.கவும் கூட்டு அமைத்தன. ஆனால் மீண்டும் எம்ஜிஆர். ஆட்சியைக் கைப்பற்றினார். இந்தத் தேர்தலுக்குப்பின்னர் இகாங்கிரசு-தி.மு.க. உறவு நீடிக்கவில்லை. அ.தி.மு.க. தான் வலிமையுள்ளது என்பதால் இ.காங்கிரசு அதன் பின்னால் ஓடியது. பரிதாபம் என்னவென்றால் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் ம.தி.மு.க. அல்லது அ.தி.மு.க. பின்னால் ஓடிக்கொண்டிருந்தன. அதே மாதிரி இந்திரா காங்கிரசும் ஏதா



ஜெயலலிதா

வது ஒரு திராவிடக் கட்சியுடன் ஒட்டிக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

1980, ஜூன் மாதம் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. 234 இடங்களில் போட்டியிட்டு 130 இடங்களில் வெற்றிவாகை சூடியது. எம்ஜிஆர். மீண்டும் தமிழக முதலமைச்சரானார்.

'கருணாநிதியே அடுத்த முதல்வர் என்று அவரை முன்னிலைப் படுத்தியதால்தான் இந்தப் படுதோல்வி ஏற்பட்டது' என்று அவரோடு இணைந்திருந்த கூட்டணிக் கட்சித் தலைவர்களே குறைப்பட்டுக்கொண்டனர்.

1982-ம் ஆண்டு பெப்ரவரியில் தமிழக அரசியலில் ஒரு புதிய வரவாக செல்வி ஜெயலலிதா அதி.மு. கவின் உறுப்பினரானார். அதே ஆண்டு ஜூன்மாதம் கடலூரில் நடைபெற்ற அ.தி.மு.க. மாநாட்டில் அவர் சிறப்புரையாற்றினார்.

இன்றைக்குத் தமிழக அரசியலில் புதுமைப் புயலாய் வீசிக் கொண்டிருக்கிறவர் மையம் கொண்டது, இந்தக் கடலூர் மாநாட்டில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

1983-ம் ஆண்டு சென்னைக்குக் கிருஷ்ணா நதி நீர் கொண்டுவரும் தெலுங்கு கங்கைத் திட்டதிற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. பிரதமர் இந்திராகாந்தி முன்னிலையில் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். இந்தத் திட்டத்திற்கான முதல் தவணையை ஆந்திர முதல்வர் என்.டி இராமராவிடம் வழங்கினார்.

1984-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் திடீரென்று எம்ஜி. ஆரின் உடல்நிலை குன்றியது. சிகிச்சை பெற எம்.ஜி.ஆர் அமெரிக்கா சென்றிருந்தபோது, 1984 ஒக்டோபர் 31-ம் நாள் இந்திராகாந்தி சுட்டுக் கொல்லப்பட்டார். பின் இராஜீவ் காந்தி பிரதமராக்கப்

## எம்.ஜி.ஆரின் ஆட்சிக் கலைப்பும் தி.மு.க. - காங்கிரஸ் உறவும்

பட்டார். உடனே இராஜீவ் காந்தி நாடாளுமன்றத்திற்குப் பொதுத்தேர்தல் நடத்த முடிவு எடுத்தார். அத்துடன் தமிழக சட்ட மன்றத்திற்கும் தேர்தல் நடந்தது. எட்டாவது பொதுத் தேர்தலான இதில் இ.காங்கிரசு 415 இடங்களைப் பிடித்து வரலாறு படைத்தது. மூன்றாம் முறையாக எம்.ஜி.ஆர். முதல்வர் பொறுப்பேற்றார்.

'சாவுக்கும் (இந்திரா) நோவுக்கும் (எம்.ஜி.ஆர்)கிடைத்த ஓட்டு இது' என்று பொறாமைக்காரர்கள் புறம் பேசினாலும் வெற்றி வெற்றிதானே?

### ஜெயலலிதா-ஜானகி

அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்த எம்.ஜி.ஆர். 1987 டிசெம்பர் 24-ல் மரணமடைந்தார். பதவிப் போட்டியில் அ.தி.மு.க. ஜானகி அணி, ஜெயலலிதா அணி என்று இரண்டாக உடைந்தது. 1989-ல் நடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றது. பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் கருணாநிதி முதலமைச்சரானார். அதன் பின் ஜானகிக்கும் ஜெயலலிதாவுக்கும் சமரசம் ஏற்பட்டது. ஜானகியம்மாள் அரசியலிலிருந்து விடைபெற்றுக் கொண்டார்.

ஜெர்மன் நீர்மூழ்கிக்கப்பல், பிரிட்டிஷ் ஹெலிகாப்டர், போர்பர்ஸ் பீரங்கி என்று போர்க் கருவிகள் வாங்கியதில் பெரும் ஊழல், பெருமளவில் பணம் கைமாறின என்ற குற்றச்சாட்டிற்கு இராஜீவ் காந்தி ஆளானார். இராஜீவ்காந்தி திருவாளர் பரிசுத்தம் என்ற பெயருக்குக் களங்கம் ஏற்பட்டது.

இலங்கையில் தமிழ் இனம் அழிக்கப்படுவதும், இந்திய அரசுக்குப் பெரிய சவாலாக உருவெடுத்தது. அமைதி காக்க இந்தியப் படையை இலங்கைக்கு இராஜீவ் காந்தி அனுப்பினார். விளைவோ இந்தியாவிற்குச் சாதகமாக அமையவில்லை.



இந்திரா

ஜனதா தளம் என்ற புதிய கட்சியை வி.பி.சிங் உருவாக்கினார். அக்கட்சியுடன் தி.மு.க. தெலுங்கு தேசம், இரு கம்யூனிஸ்ட்டு கட்சிகள், காங்கிரசு (எஸ்), அசாம் கனபரிஷத் ஆகிய கட்சிகள் எல்லாம் சேர்ந்து தேசிய முன்னணி உருவானது. பாரதிய ஜனதா கட்சியுடன், தேசிய முன்னணி தொகுதிப்பங்கீட்டைச் செய்துகொண்டது.

செல்வி ஜெயலலிதாவுக்குப் பெருகிவரும் செல்வாக்கைக் கண்டு உடனடியாகத் தேர்தல் நடத்தினால் தங்களுக்குச் சாதகமாக இருக்காது என்று குடியரசுத் தலைவர் ஆட்சியை மூப்பனார் ஆலோசனையின்பேரில் ஓராண்டுக்குமேல் நீடிக்கச்செய்தனர்.

1989, ஜனவரியில் தமிழக சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் தி.மு.க. அணி வெற்றிபெற்றது.

'அ.தி.மு.கவைச் சேர்ந்த ஜானகி அணியும் இணைந்து நின்று இந்தத் தேர்தலில் போட்டியிட்டிருந்தால் அவர்கள்தான் பெரும் வெற்றி பெற்றிருப்பார்கள்' என்று மிகச் சிறந்த அரசியல் நோக்கரான பிரணாப் ராய் தெரிவித்திருந்தார்.

'ஒன்றுபட்ட அ.தி.முகவுக்குத் தான் எங்களது ஆதரவு' என்று அறிவித்து அப்போது காங்கிரஸ் ஒரு புதிய நிலையை மேற் கொண்டதன் விளைவு அதி.முக அணி தோற்றுப்போனது.

1989-ம் ஆண்டு தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில், பிளவு பட்டிருந்த அ.தி.மு.க ஒன்று சேர்ந்தது 'இரட்டை இலை'ச் சின்னம் மீட்கப்பட்டது.

கட்சி ஒன்றுபட்டு-இரட்டை இலைச் சின்னமும் கிடைக்கப் பெற்ற பிறகு நடைபெற்ற மதுரை கிழக்கு-மருங்காபுரி இடைத்தேர்தல்களில் வெற்றிபெற்ற அ.தி.மு.க-அதே ஆண்டு டிசெம்பரில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.-காங்கிரஸ் 40 இடங்களில் போட்டியிட்டு 39 இடங்களைக் கைப்பற்றியது. எம்.ஜி.ஆர். கட்சித் தலைவராக இருந்தபோது நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி சார்பில் 36 பேர் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றிருந்தனர். தி.முக சார்பில் 3 பேர் மட்டுமே இடம்பெற்றிருந்தனர். ஆனால், கட்சியின் தலைமைப் பொறுப்பைச் செல்வி ஜெயலலிதா ஏற்றபிறகு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அதாவது 89-91 அ.தி.மு.க மற்றும் காங்கிரஸ் சார்பில் 39 பேராக உயர்ந்ததோடு தி-மு.க. சார்பில் ஒருவர் கூட இல்லை என்ற நிலை உருவானது.

1989-ல் நடந்த நாடாளுமன்றத்திற்கான பொதுத்தேர்தலில் இந்திரா காங்கிரசு பெருந் தோல்வியை அடைந்தது. எனினும், எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் தேசிய முன்னணி ஆட்சி அமைக்க பாரதிய ஜனதாவும் இடது சாரிக் கட்சிகளும் அரசில் பங்கேற்காமல் ஆதரவு தர முன்வந்ததால், வி.பி.சிங் பிரதமரானார்.

மண்டல் கமிஷன் பரிந்துரையை நடைமுறைப்படுத்த விபி. சிங் அரசு முனைந்தபோது பாரதிய ஜனதா, தான் கொடுத்து வந்த ஆதரவை திருப்பிப்பெற்றது. அதோடு தேசிய முன்னணியின் உட்பூசல் காரணமாக வி.பி.சிங் ஆட்சி கவிழ்ந்தது. பிறகு, சந்திரசேகர் காங்கிரசின் ஆதரவுடன் பிரதமர் ஆனார். அப்போது சந்திரசேகருக்கு அ.தி.மு.க.வின் பதினொரு நாடாளுமன்ற உறுப்பினரின் ஆதரவு தேவையிருந்தது. ஆட்சியைக் கலைத்தார்.

அ.தி.மு.க. பா.ஜ.க. ஆட்சிக்குக்கொடுத்துவந்த ஆதரவை வாபஸ் பெற்றதால் ஜனநாயகம் ஒழிந்துவிட்டது என்று கூறும் பா.ஜ.க. 1990 கழுத்தறுக்கவில்லையா?

இதற்கிடையில் தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகள் ஊடுருவல்-அதற்கு தி.முக. அரசு உடந்தையாக இருத்தல்- ஊக்குவித்துக் கொண்டிருத்தல் போன்ற புகார்களின் அடிப்படையில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது.

1991-ல் நாடாளுமன்ற- சட்டமன்றத் தேர்தல்களுக்கான பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில் காங்கிரஸ் தலைவர் இராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டார்.

அதற்குப் பிறகு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அதி.முக வெற்றிபெற்றது. செல்வி ஜெயலலிதா 24.06.1991 அன்று தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழகத்தின் முதல் பெண் முதலமைச்சர் என்ற பெயருடன் ஐந்தாண்டுகள் அவர் ஆட்சியை நடத்தினார்.

பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் நிகழாத ஒன்றினை செல்வி ஜெயலலிதா நிகழ்த்திக்காட்டினார்.

திராவிட இயக்க மூலாதாரக் கொள்கையான சமூக நீதிக்காகப் போராடி -69 சதவிகித இட ஒதுக்கீட்டை அரசியல் சட்டத்தின் 9-வது பிரிவில் இடம் பெறச்செய்தார். இதனால் பெரியாரின் திராவிடர் கழகம் சார்பில் அவருக்கு 'சமூகநீதி காத்த வீராங்கனை' என்ற விருதை திக. பொதுச் செயலாளர் வீரமணி வழங்கினார்.

அதுமட்டுமல்ல-மத்திய அரசையும், பிரதமரையும், மாநில ஆளுநரையும் எதிர்த்துக்குரல் கொடுத்து-உரிமைகளுக்காக வாதாடி திராவிட இயக்க உணர்வுகளுக்கு செல்வி ஜெயலலிதா உயிரூட்டம் கொடுத்தார்.

ஒரு பெண் முதலமைச்சர் என்ற முறையில் பெண்கள் முன்னேற்றத்திற்கான பல்வேறு திட்டங்களை நிறைவேற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் கூடங்குளத்தில் அரிஜன மக்கள் தாக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றது. அ.தி.மு.க. ஆட்சியில் அரிஜன மக்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களுக்காக திராவிடக்கட்சிகள் எதுவுமே செய்யவில்லை என்ற முழக்கத்தை முன்வைத்து டாக்டர் கிருஷ்ணசாமி ஒரு கட்சியைத் தொடங்கினார். அந்த நேரத்தில் அந்த மக்களிடம் அவரது குரல் எடுபட்டது.




இராஜீவ்

ஒரு குறிப்பிட்ட சாதிக்கட்சியின் தலைவராகி-சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பெரிய கட்சிகளோடு கூட்டணி சேரும் அளவிற்கு அவர் உயர்ந்துள்ளார்.

சாதியக் கட்சித் தலைவராகவே தோற்றமெடுத்த டாக்டர் ராமதாஸ், டாக்டர் கிருஷ்ணசாமி, டாக்டர் சேதுராமன், ஆகிய மருத்துவர்கள் சாதியம் என்ற நோய்க்குச் சரியான மருத்துவம் கொடுத்து நல்ல சிகிச்சை செய்தல் நமக்கு மகிழ்ச்சியே! டாக்டர் ராமதாஸ் கட்சி அரசியலுக்கு வந்து-கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வென்றபிறகுதான் தேர்தல் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்டது.

(தொடரும்)

# தீர்வுப்பொதி இந்திய எதிர்ப்புச் சதி ?



இந்தியாவின் வெளிவிவகார அமைச்சு – சந்தேகம்?

சந்திரிகா அரசு தமிழர்களுக்கு தரும் தீர்வுப் பொதி அடிப்படையில் ஒன்றுமேயில்லாத ஒரு அரசியல் கண்கட்டு வித்தையாகும். இது தமிழ்- சிங்கள மக்களுக்கு இடையேயான தனித்துவமான அரசியல், பொருளாதார விடயங்களை ஒதுக்கிவிட்டு வெறும் பிராந்திய ரீதியிலான அதிகாரப் பரவலாக்கலைத் தருகின்றது. ஆனால் இதனை மேற்கு நாடுகள் பகிரங்கமாக ஆதரித்து கருத்து வெளியிடுகின்றனர். அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர், 'இன்டர்போர்த்' இனச் சிக்கலைத் தீர்ப்பதற்கான அடித்தளமாக இதனைப் பாவிக்கலாம் என கருத்துக் கூறுகின்றார்.

ஏன் இவ் ஆதரவு? எதற்காக சந்திரிகா அரசின் 'ஏமாற்று வித்தைக்கு ஆதரவு' கொடுக்கப்படுகின்றது?

தீர்வுப் பொதியின் உள்ளடக்கத்தை மேற்கு நாடுகள் தெளிவாக அறியும். இதனைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதையும் மேற்கு நாடுகள் உணரும். சிங்கள அரசின் தயவில் வாழும் கூட்டணி போன்ற குழுக்கள் 'கூட' தீர்வுப் பொதியின் போலித்தனத்தை 'உணரும் அளவிற்கு' மோசமான நோக்கம் கொண்டது இப் பொதி.

ஆனால் சந்திரிகா அரசு, தீர்வுப் பொதியை ஒரு சக்திமிக்க விடயமாக மேற்கின் ஆதரவுடன் பாவனை செய்கின்றது.

இச் சூழ்நிலையை ஆராய முற்படின், தீர்வுப் பொதி தன் பிரதான இலக்காக சொல்லும் இனச் சிக்கலை தீர்க்க முடியாதுவிடின், 'வேறொரு தேவையை நோக்கி நகர்த்தப்படும்' அரசியல் ஆயுதம் என்பது புலப்படும். இனச் சிக்கலுக்கு உபயோகமற்றது. ஆனால் 'வேறொரு' தேவையைத் தீர்க்கும்.

## அத் தேவை என்ன ?

புலிகளுக்கு எதிரான பரப்புரைக் கருவியாக இதனைச் சிங்கள அரசு பயன்படுத்த முயல்வது தகுந்த காரணம் போன்றுள்ளது. ஆனால் இது எவ்வாறு சர்வதேச கவனத்தையும் ஆதரவையும் சிங்கள நாட்டிற்கு ஈட்டிக் கொடுக்கும்?

மேற்கு நாடுகளின் ஆதரவை பெறுவதற்கான சூட்சுமத்தை தீர்வுப்பொதி கொண்டமைக்கு வெறும் புலிகளுக்கு எதிரான பரப்புரைக் காரணங்கள் மட்டும் போதியதல்ல. புலிகளின் செயற்பாடுகள் மேற்குலகு நலன்களுக்கு பாதகமானது என எத்தரப்பாலும் கருதப்படவில்லை. புலிகள் தமது பொருளாதார அரசியல் கோட்பாடுகளில் இதற்கான காரணத்தைக் கொடுக்கவில்லை. எனவே புலிகளை ஒதுக்கும் நலன்களை மட்டும் கொண்ட திட்டமொன்றிற்கு மேற்கு ஆதரவு தர முற்பட மாட்டாது.

இதற்கு அப்பால், தீர்வுப் பொதி அல்லது அது போன்ற புதிய பொதி ஒன்றை மேற்குலகு நாடுவதற்கு, 'இராணுவ அரசியல் நலன்கள் சார்ந்த விடயம் ஒன்று' காரணமாக அமைய வேண்டும். இவ்வாறு தமது நலன்கள் சார்ந்த ஒன்றிற்கே மேற்கு ஆதரவளிக்கின்றது. இவ் விடயத்தை அணுகி ஆராயின் இந்தியா இப் புதிய தீர்வு முயற்சிகளுக்கு உற்சாகமான ஆதரவு எதனையும் தராமையை அவதானிக்கலாம். தீர்வுப்பொதிக்கு இந்தியா பகிரங்கமான தீவிர ஆதரவு தரவில்லை. மாறாக இராஜதந்திர மொழிகளில் கருத்துக்கள் கூறப்பட்டன. இம் மௌனம் தீர்வுப் பொதியின் நோக்கம் தொடர்பாக ஆராய்வதற்கு வழிதருகின்றது.

இந்தியா இத் தீர்வுப் பொதியிலும் மேலானதாக இந்தோ-லங்கா உடன்பாட்டின் மூலம் 1987ல் எட்டப்பட்ட தீர்வுத்திட்டத்தை நோக்குகின்றது. இவ் இந்திய திட்டத்தின் அடிப்படையில் சிறீலங்காவின் அரசமைப்பு திருத்தப்பட்டு 13வது சட்டதிருத்தத்தின் கீழ் வடக்குகிழக்கு இணைந்த மாகாணசபை உருவானது. தீர்வுப் பொதி இதனிலும் சிறப்பான தீர்வைத் தரவில்லை, மாறாக வார்த்தை சோடனைகளே உள்ளன என்பதை இந்தியா அறியும். மேலும் 13வது சட்டத்திருத்தத்தையே ஏற்காத புலிகள், இத் தீர்வுப் பொதியை ஏற்கமாட்டார்கள் என்பதை இந்தியா அறியும். இந்நிலையில் 13வது சட்ட பிரிவை இரத்துச் செய்து, ஏன் புதிதான பொதியைக் கொண்டு வர சந்திரிகா முயல்கின்றார்?

புதிய தீர்வுப் பொதி, 1987ம் ஆண்டு உடன்பாட்டை மறைமுகமாக நிராகரிப்பதற்கு அல்லது செல்லுபடியற்றதாக்க சந்திரிகா எடுக்கும் முயற்சியாகும் என்ற சந்தேகம் இந்தியாவின் வெளிவிவகார நிபுணர்களுக்கு உண்டு. அதாவது தீர்வை மையப்படுத்தி எழுதப்பட்ட உடன்பாட்டைச் செல்லுபடியற்றதாக்குவதன் மூலம், இந்தியாவின் செல்வாக்கை 'நிராகரிக்க' சந்திரிகா முயல்கிறார் என இந்தியா கருதுவதாக ஒரு ஆய்வாளர் கூறினார். இவ்வாறு 13வது சட்டத் திருத்தம் இல்லாது போய்விடின் இந்திய நலன்களுக்காக இவ் உடன்பாட்டில் இணைக்கப்பட்ட விடயங்களை சிறீலங்கா நிராகரித்து விட முயலும் என இந்திய நிபுணர்கள் சிலர் கருதுகின்றனர். திருமலை துறைமுகம், அமெரிக்க ஒலிபரப்பு போன்ற விடயங்களில் இந்தியாவுக்கு ஜெயவர்த்தனா கொடுத்த அதிகாரத்தைச் சாதுரியமாக நீக்கிவிட சந்திரிகா முயல்கின்றார் எனக் கருதப்படுகின்றது.

இதுவே மேற்குலக நாடுகளிடம் தனது தீர்வுப் பொதியை விற்பதற்காக சந்திரிகா-கதிர்காமர் கூட்டம் பயன்படுத்திய ஆயுதம் என நம்பப்படுகின்றது.

மேற்கு நாடுகள் குறிப்பாக அமெரிக்கா, 1987ல் இடம் பெற்ற உடன்பாட்டில் தனது நலன்கள் மீறப்பட்டதைப் பற்றிய கசப்பைக் கொண்டிருக்கும். மாற்றம் கண்டுவரும் உலக அமைப்பில் தனது நலன்களிற்கு விரோதமான உடன்பாடுகளைச் செல்லுபடியற்றதாக்க அமெரிக்கா விரும்புவது சாத்தியமானது. எனவே இந்தோ-லங்கா உடன்பாட்டைச் செல்லுபடியற்றதாக்க அல்லது மீள் வரைவு செய்து தனது நலன்களைத் தக்க வைத்துக்கொள்ள அமெரிக்கா முயலும் என இந்தியா கருதலாம்.

இந்தியாவினதும் பாக்கிஸ்தானினதும் அணுக் குண்டு வெடிப்புக்களும், இந்தியாவில் புதிதாக எழுந்து வரும் பலமான பா.ஜ.க அரசின் செயற்பாடுகளும், தென்னாசியா பற்றிய சிந்தனையை மேற்குலகில் தூண்டிவிட்டுள்ளது. இதனால் சிறீலங்கா போன்ற நீண்டகால நண்பர்களைத் தனது செல்வாக்கு வலைக்குள் வைத்திருக்க அமெரிக்கா முயலலாம். இதற்கு எதிரான ஆயுதமாக இந்தியா 1987 உடன்பாட்டை பாவிக்கும். எனவே 1987 உடன்பாட்டை மீள் விவாதத்திற்கு உட்படுத்தத் தீர்வுப்பொதியே 'நாகரிகமான ஆயுதம்' என மேற்கு கருதியே தீர்வுப்பொதியை ஆதரிக்கின்றது என்ற கருத்து பரவலாகி வருகின்றது.

நீலன் சாவதற்கு முன்னர் தீர்வுப் பொதி பற்றிய விவாதத்தை சந்திரிகா ஆரம்பித்து வைத்தார். அவரை இரகசியமாக ஆதரிக்கும் சக்திகளான சமாதானப் பேரவைகளும், பௌத்த அமைப்புக்களும் தீர்வுப் பொதி பற்றி பேசினர். மேற்கு நாட்டுத் தூதரகங்கள் தீர்வுப் பொதிக்கு ஆதரவான தரப்பினரைச் சந்தித்ததாக கொழும்பு ஏடுகளில் எழுதப்பட்டது. கதிர்காமர் இது பற்றி பேசினார். நீலனின் சாவு, தீர்வுப் பொதியைப் புனிதமான பொதியாக கொழும்பில் பேச வைத்தது. ஆனால் திடீரென அது கிடப்பில் போடப்பட்டது. கதிர்காமர் செய்தியாளர்களைக் கூட்டிப் பேசியபோது மெதுவாகக் குத்துக்கரணம் அடித்ததுடன் இந்தியா, தமிழீழம் உருவாக விடாது என பேசினார். இது தமிழீழம் உருவாகி விடுமோ என்ற பயத்தில் பேசப்பட்டதாகவே தெரிகின்றது. இத் திடீர் குத்துக்கரணத்திற்குக் காரணம் டில்லியிலிருந்து அனுப்பப்பட்ட எச்சரிக்கையா என்பதே இன்று எழும்பும் கேள்வியாகும்.

**- வரதன், கொழும்பு**

### பிரேமதாசாவால் 1989ல் வெளியிடப்பட்ட மாற்று உடன்பாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்.



1. இரு நாடுகளின் துறைமுகங்களையும் ஒரு விதிக்குள் கொண்டுவரல்.
2. இரு நாடுகளும் கலந்து பேசியே முடிவுகள் எடுக்கப்படவேண்டும்
3. இரு நாட்டு இராணுவங்களும் ஒரே சமநிலையில் வைத்தே சர்வதேச உறவுகளை மேற்கொள்ள வேண்டும்.
4. உடன்பாடுகளைத் திருத்துவதற்கு அதிகாரம் உண்டு.

இவ் உடன்பாடு இந்தியாவால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

### 1987 உடன்பாட்டில் இணைக்கப்பட்ட இந்திய நலன்களுக்கான விடயங்கள்:



1. வெளிநாட்டு இராணுவ- உளவு நிபுணர்களின் தலையீட்டை நிராகரிக்கும் உரிமை (annexure # >1.1)
2. திருமலை அல்லது பிற துறைமுகங்களை இந்திய நலன்களுக்கு முரணாக பயன்படுத்தக் கூடாது (1.2)
3. திருமலை எண்ணைக் குதத்தை இந்தியா கட்டுப்படுத்துவது தொடர்பானது.(1.3)
4. சிறீலங்காவில் பிற நாட்டு ஒலிபரப்புத் தளங்களைக் கட்டுப்படுத்துவது.(1.4)

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்
**தமிழ் அச்சகம்**
(மக்கள் கடை அருகில்)
அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.
திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணி வரை
59, Rue Louis Blanc, 75010 Paris - Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42
அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு! திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்






இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் **செல்வி யோன்மரி யோன்மத்தியூசை** பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## கண்டுபிடியுங்கள்

*இங்குள்ள நான்கு பெட்டிகளும் பார்ப்பதற்கு ஒன்று போல இருந்தாலும், இவற்றில் ஒன்று மட்டும், மற்ற மூன்று பெட்டிகளில் இருந்தும் மாறுபட்டுள்ளது. அந்தப் பெட்டி எது? எப்படி?*

*அடுத்தவாரம் விடையை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.*




### கடந்தவார விடை

5—வது சீல்

மீன் என்பதே சரியான விடை. இது கடிகாரத்தின் எதிர்ச்சுற்றுப்படி வலமிருந்து இடமாகத் திரும்பியுள்ளது. மற்றவை கடிகாரச் சுற்றுப்படி இடமிருந்து வலமாகத் திரும்பி இருக்கின்றன.

## அறிவியல் முற்றம்

### சொற்சிதறல் எண் - 47

பிள்ளைகளே! சொற்களைக் கண்டுபிடிக்க முயன்று பாருங்கள். முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | ✕ 3 | 4 | 5 |
| ✕ 6 | 7 | 8 | ✕ 9 | ✕ 10 |
| 11 | 12 | ✕ 13 | 14 | 15 |
| 16 | ✕ 17 | 18 | 19 | 20 |
| 21 | ✕ 22 | 23 | 24 | ✕ 25 |

**இடமிருந்து வலம்**

1. 1–2 நோய் என்று பொருள்படும்.
2. 7–8 அழகான மலர். பல வர்ணங்களில் உண்டு.
3. 4–5 வெள்ளைப்புள்ளிச் சட்டை போர்த்திய அழகிய மிருகம்.
4. 11–12 நியாயம், நேர்மை என்று பொருள் படும். இங்கு வலமிருந்து இடமாக உள்ளது.
5. 14–15 மிகப் பெரிது என்று பொருள்படும்.
6. 18–20 இரவில் பார்க்கும் சக்தி வாய்ந்த பறவை.

**மேலிருந்து கீழ்**

7. 11–21 உறுதி என்றும் சொல்லலாம்.
8. 2–12 சிற்றருவி, சிறுநதி என்றும் சொல்லலாம். இங்கு தலைகீழாக உள்ளது.
9. 14–24 ஆடு–மாடு கூட்டங்களை இப்படி அழைக்கலாம்.
10. 18–23 தொழிற்சாலையை இப்படியும் அழைக்கலாம்.
11. 15–20 காவியம் அல்லது கதை என்று பொருள்படும்.

**சொற்சிதறல் எண் நாற்பத்தி ஆறின் விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| மா | ர் | க் | கோ | ணி |
| ந் | ■ | ■ | பு | ளி |
| தோ | ல் | ■ | ர | ■ |
| ப் | அ | ப | ம் | மா |
| பு | ணி | ■ | வி | லை |

## குட்டிக்கதை படிப்போம்

# கெட்டிக்காரப் பவானி

பவானி எட்டு வயதுச் சிறுமி. கெட்டிக்காரி! அவள் அண்ணன் பெயர் ரவி. அவனும் பவானியும் ஒற்றுமையாக விளையாடுவார்கள். படிப்பார்கள்!

ஒருநாள் அவர்கள் அப்பா, பவானி விளையாடுவதற்காக ஓர் எலிப்பொம்மை வாங்கிக்கொண்டு வந்திருந்தார். பொம்மை எலியாயிருந்தாலும் அதற்கும் உண்மை எலியைப் போலவே மீசையும் மெல்லிய வாலும், காதுகளும், கண்களும் அழகாக அளவாக இருந்தன. அதன் உடற்பகுதி இரும்புத் தகடுகளால் செய்யப்பட்டு சாம்பல் வண்ணம் பூசப்பட்டிருந்தது. உண்மை எலியைப்போலவே இந்த எலியும் ஓடும். ஆமாம்! பொம்மையின் ஒருபகுதியில் சாவி கொடுத்து சுழற்றிக் கீழே வைத்துவிட்டால் போதும், எலி 'குடு குடு' வென ஓட ஆரம்பித்துவிடும். கழுத்தையும் திருப்பும். நடுநடுவே வாயையும் திறக்கும். இந்த எலியைப் பார்த்ததும் பவானிக்கு மிகவும் மகிழ்ச்சி!

'அப்பா! பவானிக்கு எலி. எனக்கு?-' ரவி கேட்டான்.

'ம்! உனக்கும் ஒரு சுவையான பொருள் வாங்கி வந்திருக்கிறேன். இந்தா!' என்றபடி அவன் அப்பா ஒரு பெரிய வளைந்த தடித்த இரும்புத் துண்டையும், சில இரும்புக் கோலி உருண்டைகளையும் எடுத்து அவனிடம் கொடுத்தார்.

'இது என்னப்பா?'- ரவி கேட்டான்.

'இதற்குப் பெயர்தான் லாடக்காந்தம். மிகவும் சக்தி வாய்ந்த காந்தம். இந்த இரும்புக் கோலிகளைத் தூரத்தில் வைத்து இதை இப்படிக் காண்பித்தால் கோலிகள் 'கிடு கிடு' வென்று உருண்டு வந்து காந்தத்தில் ஒட்டிக்கொள்ளும். இதைப்பார்!' என்று அவரே அப்படிச் செய்து காண்பித்தார். காந்தத்தைக் காண்பித்ததும் இரும்புக் குண்டுகள் ஓடி வந்து ஒட்டிக்கொள்வது வேடிக்கையாக இருந்தது.

அப்பா போனதும் பவானியும் ரவியும் எலியையும், லாடக்காந்தத்தையும் வைத்துக்கொண்டு ஒரு சுவையான விளையாட்டு விளையாட ஆரம்பித்துவிட்டார்கள்.

எப்படித் தெரியுமா?

ரவி இரும்புக் கோலிகளை ஓர் இடத்தில் ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாக வைத்துவிட்டு, கொஞ்சத் தூரத்திலிருந்து லாடக்காந்தத்தைத் தரையிலேயே நகர்த்திக்கொண்டே வருவான். அதே சமயத்தில் பவானி குறும்புத்தனமாக ஒருவேலை செய்வாள். தனது எலிப் பொம்மைக்குச் சாவி கொடுத்து இரும்புக்கோலிகளைப் பார்த்து ஓடும்படி வைத்துவிடுவாள். அவ்வளவுதான். எலி ஓடிவரும் வேகத்தில், இரும்புக் குண்டுகளைக் கலைத்து உருட்டிவிடும். காந்தத்திற்குக் குண்டுகள் வந்து சேராமல் ரவி ஏமாந்துவிடுவான்; பலமுறை இப்படி நடக்கும். ஆனால் ரவி இதற்காகப் பவானியைக் கோபிக்கவில்லை. பதிலாக, 'ம்!, இந்த முறைபார்! உன் எலியை ஏமாற்றி விடும் என் காந்தம்' என்றபடி, எலி குறுக்கே ஓடி வருவதற்குள் லாடக் காந்தத்தை வேகமாக நகர்த்தி, இரும்புக் குண்டுகளை இழுத்துவிடுவான்.

*(மிகுதி அடுத்தவாரம்)*

## அறிந்துகொள்ளுங்கள்

### பூவின் பகுதிகள்

★ ஏந்தி–பூவின் பகுதிகளை தாங்கிக் கொள்ளும் பகுதி.

★ புல்லி–அரும்பு நிலையில் பூவின் பகுதிகளைப் பாதுகாக்கும் பகுதி. சில இனங்களில் மகரந்தச் சேர்க்கைக்கு ஏற்ற முறையில் பிரகாசமான நிறமும் வாசனையும் கொண்டிருக்கும்.

★ கேசரம்–மகரந்தச் சேர்க்கைக்கு வேண்டிய மகரந்த மணிகளை வழங்கும்.

★ குறி– மகரந்த மணி வழங்குவதிலும் மகரந்த மணி முளைத்தலிலும் பங்கெடுத்தல்.

★ தம்பம்–மகரந்தக் குழாயின் வளர்ச்சியில் பங்கெடுக்கும்.

★ சூலகம்–சூல் வித்துக்களைப் பாதுகாக்கும்.

## தகவல் முற்றம்

### *விடுமுறையைப் பற்றி...*

- 1988-ம் ஆண்டு 32 இலட்சம் பிரெஞ்சு மக்கள் விடுமுறைக்குச் சென்றனர்.
- கிட்டத்தட்ட 28,6 நாட்களே விடுமுறைக்குச் செல்வர்
- 82% காரில் செல்வார்கள்
- 10% தொடருந்திலும், 3% விமானத்திலும், 2% பேருந்திலும்
- 80% பிரெஞ்சு மக்கள் தங்கள் நாட்டிலேயே தங்கி இருப்பர். அதனால் 40% கடலுக்கும், 20% கிராமத்திற்கும், 10% மலைக்கும் செல்வர்.
- அசூர் என்ற இடத்தில் உள்ள கடற்கரையில், வெய்யில் காலத்தில் 120 000 பேர் 1 KM தூரத்தினுள் இருப்பர்.

## அறிந்துகொள்ளுங்கள்

* முதலாவது பயணிகள் புகையிரதம் 1825 இல் இங்கிலாந்தில் செயல்படுத்தப்பட்டது.
* உலகில் மிக நீளமான பாலம் ஜப்பானில் கொன்சு-சிக்கொறாகா என்ற இடத்தில் கட்டப்படுகின்றது. இதன் நீளம் 1,780 M ஆகும்.
* நிலத்திற்கு கீழாக ஓடும் புகைவண்டி (Metro) முதன்முதலாக 1863-ம் ஆண்டு இங்கிலாந்தில் ஓடப்பட்டது.
* உலகத்திலே மிக நீண்ட புகையிரதப் பாதை எங்குள்ளது?
  - ரஷ்யா

★★★

*விடுமுறை பற்றி விளக்கம் கூறிய Collection Cascade இற்கு நன்றி.*

பெயர்: டயானா
போ, பிரான்ஸ்

# ஒபரேசன் செவென்பவர்

## (Operation Seven Power)

## மணலாறு ஒரு வீர வரலாறு 34



மட்டக்களப்பில் நெடிய வெட்டை என்றோரு கிராமம். பின்தங்கிய நிலையிலிருந்த அந்த வறிய கிராமத்தின் அருகிலேதான் சிங்களக் குடியேற்றம் ஒன்று உருவாகியது. தமிழ் மக்களின் நிலத்தை அபகரித்து அப்பகுதிக்கு 'சின்னவத்த' என சிங்களப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர் இராணுவத்தினர். அக் குடியேற்ற சிங்கள மக்களை பாதுகாப்பதற்காக இராணுவ முகாம் அமைக்கப்பட்டதுடன், அச் சிங்கள மக்களுக்கு பாதுகாப்பளிப்பதற்காக கொண்டு வரப்பட்டவனே ரத்தன் என்ற சிங்களக் காடையன். குடியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்கு பாதுகாப்பளிப்பது மட்டுமல்ல, அருகில் உள்ள கிராமங்களில் இருந்து தமிழ் மக்களை விரட்டியடித்து அதனையும் சிங்கள பிரதேசமாக்கும் சிறீலங்கா அரசின் திட்டங்களை செயற்படுத்துவதும் இவனது பணியாக இருந்தது. அதற்காக அடிக்கடி அருகில் உள்ள கிராமங்கள் இவனது அணிகளால் சுற்றிவளைக்கப்பட்டு மக்கள் துன்புறுத்தப்பட்டனர். இவர்களால் பெரும் இன்னல்களை சந்தித்த கிராமம் தான் நெடியவெட்டை. கிராமத்தினுள் நுழையும் இவனும் இவனது அணிகளும் தமிழ் மக்கள் மீது அடாவடித்தனங்களை கட்டவிழ்த்து விடுவார்கள். தட்டிக் கேட்பதற்கு யாருமே இல்லாததால், மக்கள் இவர்களது ஆய்க்கினைகளை எல்லாம் பொறுத்துக் கொண்டிருந்தார்கள். அதனையும் மீறி யாராவது வாய் திறந்துவிட்டால், படைமுகாமிற்கு கொண்டுசென்று சித்திரவதைக்கு உள்ளாக்கியதுடன், பலர் படுகொலையும் செய்யப்பட்டனர். இவனால் விசாரணையென்று கொண்டு செல்லப்பட்ட பலர் 'தலை துண்டிக்கப்பட்ட நிலையில்' வீதிகளில் பிணமாக வீசியெறிப்பட்டும் கிடந்தனர்.

இவன் அழிக்கப்பட வேண்டும். இவனை அழித்தால் தான் கிராம மக்கள் நிம்மதியாக வாழ முடியும். அம் மக்களுக்கு நிம்மதியை வழங்கக்கூடிய இச்செயலை எப்படி சாதிப்பது என்பதே ஜெகநாதனின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஏனெனில் அவன் போராட்டத்தில் இணையாத காலமது. எனினும் முயற்சி செய்யத் தொடங்கினான். விடுதலைப் புலி போராளி ஒருவனின் உதவியை நாடினான். அப் போராளியின் உதவியுடன் ரத்தனுக்கு இலக்கு வைக்கப்பட்டது. நீண்ட நாட்களாக பெரும் முயற்சிகள் தொடர்ந்தன. ஒரு நாள் அவர்களது முயற்சி பலனளித்தது. தமிழ் மக்களை நீண்ட நாட்களாக துன்புறுத்திவந்த சிங்களக் காடையன் போராளிகளின் பாய்ச்சலில் பலியெடுக்கப்பட்டான். அதன் பின்னர் ஜெகநாதன் என அழைக்கப்பட்ட அவ் இளைஞன் அக் கிராம மக்களால் ரத்தன் என அழைக்கப்பட்டான். சிலகாலங்களில், இந்தியப் படை தமிழீழத்தில் நுழைந்திருந்தது. புலிகளின் உதவியணியாக செயற்பட்டுக்கொண்டிருந்த ரத்தனைத் தேடி இந்தியப்படையினரும் வலைவிரித்தனர். அவர்களின் தேடுதல்களின் மத்தியில் நின்றுகொண்டு, போராளிகளுக்கு தேவையான உணவுகளை காட்டுப்பகுதிகளுக்கு அனுப்பிக்கொண்டிருந்ததுடன், தேசத்துரோகிகளின் நடவடிக்களை கண்காணித்து வேவுத்தகவல்களையும் வழங்கிக்கொண்டிருந்தான். அதனால் தேசத்துரோகிகளும் இவனை அழிப்பதற்கு தேடத்தொடங்கினர். அதனால் 89ம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து தன்னை முழுநேர போராளியாக புலிகளுடன் இணைத்துக்கொண்டு 'வேங்கையன்' ஆனான். பயிற்சியை முடித்துக்கொண்டு லெப்.கேணல் நீகனின் அணியில் செயற்பட்டு, அதன் பின்னர் ஆர்.பி.ஜி. அணியாக ஆனையிறவுவரை பல்வேறு களங்களில் சாதனைபடைத்த அப்போராளி, மணலாற்றில் தன் வீர வரிகளை பதிந்துகொண்டு கொக்குத்தொடுவாயில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டான்.

> யாராவது வாய் திறந்துவிட்டால், படைமுகாமிற்கு கொண்டுசென்று சித்திரவதைக்கு உள்ளாக்கியதுடன், பலர் படுகொலையும் செய்யப்பட்டனர். இவனால் விசாரணையென்று கொண்டு செல்லப்பட்ட பலர் 'தலை துண்டிக்கப்பட்ட நிலையில்' வீதிகளில் பிணமாக வீசியெறிப்பட்டும் கிடந்தனர்.

* * *

### ஏழுசக்திகள்

கொக்குத்தொடுவாயில் இருந்து 'சிக்சர்' என்ற நடவடிக்கையின் மூலம் நாயாறு, அலம்பில் பகுதிகளை கைப்பற்றும் நடவடிக்கை பெரும் இழப்புக்களுடன் படுதோல்வி அடைந்ததால், முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து முன்னேறி அப்பகுதிகளை கைப்பற்றி மணலாற்றை வெற்றிகொள்ளும் முயற்சி சிங்களப்படைகளால் ஆரம்பிக்கப்பட்டது. 'ஒபரேசன் செவென்பவர்' என்ற குறியீட்டுப் பெயருடன், 1992 வைகாசி 28ம் திகதி முல்லைத்தீவு முகாமில் இருந்து நான்காயிரத்துக்கு மேற்பட்ட படையினர் டாங்கிகள், ஆர்சிஎல். பீரங்கிகள், கவசவாகனங்கள் சகிதம், முல்லைத்தீவு - கொக்கிளாய் பிரதான வீதிவழியாக சிலாவத்தையினூடாகவும், கடற்கரையோர வழியாகவும் முன்னேறத் தொடங்கினார்கள். விமானங்கள் குண்டுகளைவீசி படை முன்னேற்றத்திற்கு வழியமைத்து கொடுக்க, பின்னணியில் இருந்து புலிகளுக்கு வரப் போகும் உதவிகளை தடுப்பதற்கு, கடலில் இருந்து கடற்படையும் பீரங்கிகள் குண்டுகளை பொழிந்து தள்ளியது.

ஆனால் இத்தனை தாக்குதல்களுக்கும் மத்தியில் நின்று கொண்டு புலிகள் எதிர்த் தாக்குதலைத் தொடுத்தனர். கொக்கிளாய் வீதிவழியாக முன்னேறிய படையினரை நாலாவது மைல்கல்லில் வைத்து வழிமறித்த புலிகளின் அணிகள், கடும் முறியடிப்பு தாக்குதலை தொடுத்தன. மூன்று நாட்கள் நடைபெற்ற கடும் சண்டையின் பின்னர் பலத்த இழப்புக்களுடன் 01.06.92 அன்று அலம்பில் பகுதியை சென்றடைந்தது சிங்களப் படை. மூன்று நாட்களாக படையினரை முன்னேறவிடாது போராடிய 2ம் லெப். பாணன்-ரவிச்சந்திரன் (நடேசலிங்கம் உதயமோகன்-காங்கேசன்துறை யாழ்.), லெப்.மணாளன்-ராஜன் (அன்னலிங்கம் மதியழகன்-உடுவில் தெற்கு யாழ்.), கப்டன் குட்டி- அன்பு (ஐயம்பிள்ளை சிவகுமார்- சண்டிலிப்பாய் யாழ்), லெப். சுலோஜன் (பாக்கியதுரை தயாளசீலன் கட்டைப்பறிச்சான் மட்டு) உட்பட சில போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.



2ம் லெப். பாணன்



கப். ரத்தன்



கப். குட்டி




லெப். மணாளன்



லெப். சுலோஜன்

முல்லைத்தீவில் இருந்து அலம்பில் வரையான தரைப் பாதையை கட்டுப்பாட்டிற்குள் தொடர்ந்து வைத்திருக்கலாம் என நினைத்த படையினருக்கு, புலிகள் கொடுத்த தாக்குதல்கள் அப்பாதையை நிரந்தரமாக கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியாமல் போய்விட்டது. அதனால் அலம்பில் பகுதியில் முகாம் அமைத்த படையினர், அப்பகுதிகளை சுற்றியிருந்த நான்கு சதுரமைல் பிரதேசத்தில் இருந்த வீடுகள், ஆலயங்கள் உட்பட கட்டடங்கள் அனைத்தையும் புல்டோசர்கள் மூலம் இடித்துத் தரைமட்டமாக்கியதுடன், பயன் தரும் மரங்கள் அனைத்தையும் வெட்டிவீழ்த்தி தமது முகாமை பலப்படுத்திக் கொண்டனர். முகாமை பலப்படுத்திக்கொண்ட ஓரிரு நாட்களிலேயே அங்கிருந்து குமிழமுனை நோக்கி முன்னேறத் தொடங்கினார்கள். தங்கபுரம் கிராமம் வரை படையினரை முன்னேறவிட்ட புலிகள். முன்னேறிய படையினரை சுற்றி வளைத்து அதிரடித் தாக்குதல் ஒன்றை தொடுத்தனர். புலிகளின், இத் தாக்குதலால் நிலைகுலைந்த படையினர் பலத்த இழப்புக்களுடன் தமது முன்னேறும் நடவடிக்கையை கைவிட்டு அலம்பில் முகாமிற்கு பின்வாங்கிக்கொண்டனர்.




முல்லைத்தீவு இராணுவ முகாமுடனான தரைத்தொடர்பை இழந்திருந்த நிலையில், தமது அடுத்த முன்னேற்ற நடவடிக்கைகளுக்காக ஆர்.சி.எல். பீரங்கிகள் உட்பட பெறுமதிவாய்ந்த ஏராளமான ஆயுதங்களைக் குவித்து வைத்திருந்த இவ் அலம்பில் முகாமை உடனடியாக தாக்கியழித்து, அவ் ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்கான திட்டங்கள் புலிகளால் வகுக்கப்படத் தொடங்கின.

*(தொடரும்)*

எஸ்.தீரன்




# கேர்லி ஃபியோறினா முதன்மை இயக்குநர்

இன்று உலக மக்கள் வாழ்க்கையில் இரண்டறக் கலந்துவரும் ஓர் விடயம் கணினிகளின் பாவனைதான். இப்படியான இந்தக் கணினிகளை உற்பத்தி செய்வதில் அமெரிக்க நிறுவனமான Hewlett Packard மிகவும் புகழ்பெற்றதென்பதும் அந் நிறுவனமே இன்று அமெரிக்காவிலேயே



கணினிகள் நிறுவனத்தில் இரண்டாம் இடத்தில் இருக்கின்றதென்பதையும் பலரும் அறிவோம். ஆனால் வெகு விரைவில் அதை முதலிடத்தில் நிறுத்த, தற்போது செயலில் இறங்கியுள்ளார் கேர்லி ஃபியோறினா என்ற பெண்மணி. ஆம் இந்தப் புகழ்பெற்ற நிறுவனம் முதல் முறையாக தன் நிறுவனத்தின் மொத்தத் தலைமைப் பொறுப்பையும் இந்த 44 வயதான கேர்லி பியோறினா என்ற பெண்வசம் ஒப்படைத்துள்ளது. தற்போது 1,23,000 எண்ணிக்கையிலான தொழிலாளரைக் கொண்ட இந்நிறுவனம், எவ்வளவோ திறமையான தொழில் நுட்பம் தெரிந்த ஆண் அதிகாரிகளை வைத்திருந்தபோதும் இம் மாபெரும் பொறுப்பை ஒரு பெண்ணின் கையில் ஒப்படைத்தது, அங்குள்ள பெண்கள் அனைவருக்கும் பெரிய மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. இந்தப் பொறு-ப்பை ஏற்றிருக்கும் கேர்லி ஃபியோறினாவும், தான் இந் நிறுவனத்தை முதன்மையான இடத்தில் கொண்டுவருவேன் என்று கூறியுள்ளார்.

இவ்வாறு துணிச்சலும் திறமையும் மிக்க கேர்லி ஃபியோறினா, தன் 25 ஆவது வயதிலேயே தகவல் தொடர்புத் துறையில் பிரபலம் வாய்ந்த A.T. & T. நிறுவனத்தில் படித்தவர் என்பதும் பின் அந்நிறுவனத்திற்கே தலைமை அதிகாரியாக இருந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே இவரின் நாளைய வெற்றியில் பலருக்கு இன்றே நம்பிக்கை வந்துவிட்டது.

# உண்மையே கண்கண்ட தெய்வம்

மிகுந்த கடுமையான சட்டங்கள் நிறைந்த மலேசியா நாட்டில் சிறுமிகள் இருவரை குரூரமாக பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியிருக்கிறான் 35 வயதான இஸ்லேப் ஹெறப். அதாவது தன் வீட்டிற்கு வேலை செய்யவென இரு சிறுமிகளை அழைத்துச்சென்றான். அச் சிறுமிகளின் வயதோ பன்னிரண்டும், பதினைந்தும். இவ்வாறு தன் வீட்டிற்கு அழைத்துச்சென்ற அச் சிறுமிகளை கொடூரமாக பாலியல் வன்முறைக்கு உட்படுத்திவிட்டு அவர்கள்மேல் தான் நடாத்திய வன்முறையை வீடியோவிலும் பதிவுசெய்து வைத்துவிட்டான்.

இதன்பின் இச் சிறுமிகள் இவனால் துரத்தியடிக்கப்பட்டுவிட்டனர். ஒருமுறை இவன் மறைத்து வைத்திருந்த வீடியோ நாடாவை அவனுடைய மனைவி பார்த்துவிட்டார். அச்சிறுமிகள் மேல் இவன்கொண்ட இந்த அநாகரிகச் செயலைத் தாளாது அப்பெண் உடனேயே காவல் துறையிடம் தன் கணவனை ஒப்படைத்துவிட்டார். தற்போது இவனுக்கு 33 வருட ஜெயில் தண்டனையும், 23 கசை அடியும் தண்டனையாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு இவனுக்கு வழங்கப்பட்டுள்ள இத் தண்டனை இவனைப்போல் இன்னும் ஏராளமான குற்றவாளிகளைக் குறைக்கும் என்று நாம் எண்ணினாலும், தன் கணவன் என்றும் பாராது அவன் புரிந்த குற்றத்தை வெளியுலகிற்கு எடுத்துக்காட்டிய அவன் மனைவியை நாம் பாராட்டியேயாக வேண்டும்.

# அருவமும்-உருவமும்-அருஉருவமும்!

கண்களின் பார்வைக்கே விருந்தாகும் பிரபல மாடல் அழகி வாரிஸ் டய்ரி இன்று பலரதும் இதயத்திலும் அனுதாபத்துடன் நுழைந்துவிட்டார். அது மட்டுமல்ல, எல்லோர் வசமும் ஆழமான கருத்தொன்றையும் விதைத்துவிட்டார். எப்படி? அண்மையில் அவர் பிரபல பத்திரிகை ஒன்றிற்குக் கொடுத்திருந்த பேட்டியே இவ்வாறான நிலையை அவருக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.



அன்றைய அப் பேட்டியில் தன் ஆழ் மனதைத் திறந்து அழுதபடி அவர் கொடுத்த இப்பேட்டி, இன்று இவரை மட்டுமல்ல இவர் சார்ந்த கறுப்பின பெண்கள் சமூகத்தையே உலகில் உள்ள மனிதாபிமானம் மிக்க இதயங்களால் நேசிக்க வழிகோலிவிட்டது. அப்படி அவர் சொன்னதுதான் என்ன? ஒருமுறை தன்னை வழமைபோல் மாடல் கலைபற்றி செய்தி கேட்டு வந்த பத்திரிகைத்துறைப் பெண்ணிடம் தன் மாடல் தொழிலைப் பற்றிச் சொல்லாது தன் சொந்த வாழ்வின் நடந்துமுடிந்த நிகழ்வுகளைச் சொன்னார். தனக்கு நிகழ்ந்த அச்சோகத்தைப்போல இன்னும் தன் இனப் பெண்கள் எதிர்கொள்ளும் சோகங்களையும் விரிவாக வெளியுலகிற்கு எடுத்துக்கூறியுள்ளார். அவர் கூறிய விடயம் எமக்கு முன்பே தெரிந்ததுதான். அதாவது ஆபிரிக்கப் பெண்கள் மத்தியில் பிறப்புறுப்பில் சிதைவை ஏற்படுத்தும் மூடநம்பிக்கை என்பதே அது. ஆனாலும் வாரிஸ் டய்ரி தன் அனுபவத்தை அப்படியே வெளியே தெரிவித்ததன் மூலம் அதை வாசித்த பலரும் கலங்கிவிட்டார்கள். வாரிஸ் டய்ரி தனக்கு நிகழ்ந்ததை கீழ் வருமாறு விபரிக்கிறார்.

நான் சோமாலியா நாட்டைச் சேர்ந்த ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். ஒருநாள் நான் ஆடு மேய்த்துவிட்டுத் திரும்பி வரும்போது வழமைக்கு மாறாக அதிக உணவு சாப்பிடக்கிடைத்தது. அது மட்டுமல்ல, என்னுடைய தாயாரால் அதிகளவு நீர் குடிக்கவும் தடை விதிக்கப்பட்டது. அப்போது எனக்கொன்றும் விளங்கவில்லை. ஏனெனில் எனக்கு அப்போது 5 வயது. அடுத்தநாள் அதிகாலையில் என் வீட்டிற்கு ஒரு வயதான மருத்துவிச்சி வந்தார். அப்போது என் அம்மா என்னை அழைத்துச்சென்று ஒரு பாறாங்கல்லின் மேல் படுக்கவைத்து தன் கால்களுக்கிடையே என் உடலை அழுத்தியவண்ணம் என் முகத்தை தன் மார்புடன் அழுத்திப் பிடித்தார். இப்போது அந்த வயதான மருத்துவிச்சி என் இரு கால்களையும் விரித்து தன் கையிலுள்ள கூரிய ஆயுதத்தால் என் பிறப்புறுப்பை வெட்டத்தொடங்கினார். அப்போது எனக்கு நேர்ந்த அந்த வேதனையை விபரிக்கமுடியாது. இதன் பின் நான் மயக்கமாகிவிட்டேன்.


மீண்டும் கண் திறந்தபோது என் முன்னே இருந்த மருத்துவிச்சி தன் கைகளில் இருந்த முள் மூலம் என் பிறப்புறுப்பின் இரு பகுதியிலும் துவாரம் இடப்போவதைக் கண்டுகொண்டேன். மீண்டும் என்னால் வேதனை தாங்க முடியவில்லை. ஏனெனில் அவர் என் பிறப்புறுப்பில் போட்ட துவாரங்களினூடாக மெல்லிய நூல்போன்ற ஒன்றால் இரு பகுதிகளையும் இணைத்துத் தைக்கத் தொடங்கினார். இதனால் நான் மீண்டும் முற்றாக சுயநினைவை இழந்துவிட்டேன். மீண்டும் கண் விழித்துப் பார்க்கின்றேன், என் கால்கள் இரண்டும் பிரித்துக்கொள்ள முடியாதபடி கயிற்றால் இணைத்துக் கட்டப்பட்டுள்ளது. ஏன் இவ்வாறு கட்டப்பட்டதெனில் நான் எங்கே வேதனை தாளாது அவர் போட்ட தையலை அவிழ்த்துவிடுவேனோ என்று. இதன் பின் எனது சகோதரியும், என் தாயாரும் இணைந்து என்னை இழுத்தபடி சென்று எம் வீட்டிற்கருகே ஒரு சிறிய குடிசையைப் போட்டு படுக்கவைத்துவிட்டார்கள். ஏனெனில் இக் காயம் ஆறும்வரை நான் வெளியே இருக்கவேண்டும் என்பதுதானாம் பண்பாடு.

இப்போது எனக்கு இயற்கைக் கடனைக் கழிக்கவேண்டும்போல் உள்ளது. அதற்காக எனது சகோதரியை அழைத்தேன். என்னிடம் வந்த என் சகோதரி என்னை ஒரு புறமாகத் திருப்பிப் போட்டு மண்ணுக்கிடையே சிறு குழிதோண்டிவிட்டார். நான் சிறுநீர் கழிக்க முற்பட்டேன். அப்போது என்னிடமிருந்து வெளியேறிய முதல்துளி சிறுநீர் அக் காயத்தின்மேல் பட்டதும் அமிலம் பட்டதுபோல் எரிவதை உணர்ந்தேன். ஏனெனில் என் பிறப்புறுப்பு முழுவதும் மூடித் தைக்கப்பட்டு சிறுநீர் கழிப்பதற்காக மட்டுமே ஒரு சிறு துவாரம் விடப்பட்டிருந்தது. இந்தவிடயத்தில் நான் கொஞ்சம் பாக்கியசாலி. ஏனெனில் என் காயம் விரைவில் ஆறிவிட்டது. என்னைப்போல இன்னும் ஏராளமான சிறுமிகள் இத்தகைய காயத்தால் அதிகரித்த இரத்தப்போக்கால் மரணமடைவதுமுண்டு.

இன்று எனக்கு போதியளவு பணம், புகழ், வசதிகள் உண்டு. ஆனாலும் ஏன் நான் இவையெல்லாவற்றையும் இப்படிப் பகிரங்கமாகக் கூறுகிறேன். எனக்கு அன்று நேர்ந்த அந்த வேதனை இன்று மட்டும் தொடர்கின்ற வலியின் ஆரம்பம்தான். ஏனெனில் இன்றும் எனக்கு ஒவ்வொரு முறையும் சிறுநீர் கழிக்கும்போதும், ஒவ்வொரு முறை நிகழும் மாதவிலக்கின்போதும் சொல்ல முடியாத துன்பத்தை அனுபவிக்கிறேன். இன்று வரை எனக்கு பாலுணர்வு என்றால் என்னவென்று தெரியாது. ஊனமுற்றவள் போலேயே எனக்குள் உணர்கின்றேன். அதாவது நான் முழுமையாகப் பிறந்தும் ஒரு முழுமையல்லாதவளாகவே வாழ்க்கையைத் தொடர்கின்றேன். இதை நினைக்கும்போது அட! இந்த ஒரு நிமிடமும் எங்கோ ஒரு இடத்தில் என்னைப்போல ஒரு சிறுமிக்கு இந்த நிகழ்வு நடந்தவண்ணம்தான் இருக்கும் என்பதை நினைக்கிறேன். இதை நினைக்கும்போது கோபமும் வேதனையும் வருகிறது. இந்த நிலை எப்போது மாறும். அந்த மாற்றம் வரும் வரை நான் ஒவ்வொரு இடங்களிலும் இந்த மூட நம்பிக்கையைப் பற்றி கோபக்குரல் எழுப்பியபடியேதான் இருப்பேன். அதுதான் என் இலட்சியமும் என்கிறார் வாரிஸ் டய்ரி.

இவ்வாறு வாரிஸ் டய்ரியின் கதையொருபுறமெனில் இவரைப்போன்ற இன்னுமொரு திருமணமான பெண்மணி இதைப்பற்றி விபரிக்கும்போது மேலும் சில விபரங்களைச் சொன்னார். அதாவது தமக்குத் திருமணம் ஆகும்போது கணவனுடன் உடலுறவு கொள்வதற்காக தம்முடைய மூடித் தைக்கப்பட்டுள்ள பிறப்புறுப்பில் சிறு இடத்தை மீள வெட்டிவிடுவதாகவும் அதன்பின் குழந்தைகள் பிறக்கும்போது அதைவிட சற்றுக் கூடுதலாக வெட்டிவிட்டு பின் மீண்டும் தைத்துவிடுவதாகவும் தெரிவித்தார். இவருக்குத் தெரிந்த ஒரு பெண்மணி 17 குழந்தைகளைப் பெறும்வரை இவ்வாறான நிலையில்தான் இருந்தார் என்றும் வேதனையுடன் குறிப்பிடுகின்றார். அதாவது தம் பிறப்புறுப்பை ஒரு சடப்பொருளாகவேதான் அவர்கள் உணர்கிறார்களென்றும் இப் பெண்மணி மேலும் கூறினார்.

இது இவ்வாறிருக்க இன்றும் 28 ஆபிரிக்க நாடுகளில் இவ்வாறான நிலை தொடர்ந்தவண்ணம்தான் இருக்கிறது. இதன்மூலம் 13 கோடி பெண்கள் இந்த வேதனைக்கு ஆளாகிறார்கள். ஒரு நாளிற்கு மட்டும் 6000 பெண்கள் இச்சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய ஒன்று.



## சிறுகதை

# படைவீரனின் மனைவி



கூரையில் வேயப்பட்டிருந்த சிங்கள ஓடுகளின் வழியாக பெய்துகொண்டிருந்த மழை கீழே விழுந்துகொண்டிருந்தது. வீட்டின் வாசற்பகுதியில் இருவேறு பகுதிகளை வெறித்துப் பார்த்தபடி இரண்டு வயதான பெண்கள் அமர்ந்திருந்தனர். அவர்களில் ஒருவரது பார்வையில் கோபமும் ஆத்திரமும் தென்பட, மற்றவரோ மிகவும் சோகத்துடன் காணப்பட்டார். அந்த வேளையில் வீட்டு வாசலில் ஒரு 'வான்' வந்து நின்றது.

அறையின் ஜன்னலை இறுக்க மூடிய ராஜித, அறையின் மத்தியில் அமைந்திருந்த கட்டிலில் அமர்ந்திருந்த தனது மனைவியின் அருகில் சென்றவன் அவளது கைகளில் இருந்த உடைகளைத் தன் கைகளில் எடுத்துக்கொண்டான். சாமா கண்களில் இருந்து வழிந்து கொண்டிருந்த கண்ணீருடன் கணவனைப் பார்த்தாள். பயந்தவளாக இருந்த அவள் பக்கத்தில் அமர்ந்திருந்த கணவனின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு அவனை தனது அருகில் அமர்த்திக்கொண்டாள்.

'என்னை அங்கே கொண்டு செல்ல வேண்டாம் ராஜீ'

'இந்த உடைகளை அணிந்து கொள்ளுங்கள் முதலில்' மிகவும் இளகிய குரலில் மனைவியிடம் கூறினான் அந்த இளைஞன்.

அவள் மீண்டும் நிலத்தைப் பார்த்துக்கொண்டாள். கண்களின் கண்ணீரைத் துடைக்க முயற்சிக்காத அவள் அவனது கைகளில் இருந்த உடைகளை அணிந்துகொண்டு மீண்டும் கட்டிலில் அமர்ந்துகொண்டாள்.

'நீங்கள் எப்போ திரும்பிப் போகப் போகிறீர்கள்?'

அவன் மௌனமாக இருந்தான்.

'ஐயோ ராஜீ இந்தமுறை உங்கள் லீவை நீடிக்க முடியாதா?' அவன் மீண்டும் அமைதியாக தலையைத் தூக்கி மனைவியைப் பார்த்தான். உங்கள் அம்மாவும் எனது அம்மாவும் வெளியில் இருக்கிறார்கள். அவர்கள் இருக்கும் இடத்திற்கு நான் போகமாட்டேன். வானில் ஏறமாட்டேன். என்னால் டாக்டரிடம் போக இயலாது!

ஏன்? இப்போது அவனது குரல் சற்று உயர்ந்தது. 'என்னைத் தனிமைப் படுத்திவிட்டு சென்றுவிடாதீர்கள் ராஜீ!!'

அவன் அவளை எழுந்திருக்கச் செய்தான். பின்னர் அவளை அணைத்துக்கொண்டு வாசலுக்குவந்தான்.

வாசலுக்கு வந்தவள் அங்கே நின்றிருந்த வானைக் கண்டவள் அப்படியே நின்றுவிட்டாள். பெய்துகொண்டிருந்த மழையின் மத்தியில் நின்றிருந்த வானைக் கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தவள் ஒரேயடியாகக் கதறிக்கொண்டு மீண்டும் அறையை நோக்கி ஓடினாள். எதுவுமே செய்ய முடியாமல் ராஜீ நிலையாய் நின்றான்.

சாமாவின் தாயார் வேகமாக உள்ளே சென்றாள். அறையில் நின்றிருந்த மகளை அணுகி அவளை அணைத்துக் கொண்டபோது அவள் தாயாரைப்பார்த்து,

'பார்த்தாயா அம்மா? ராஜீ இறந்துவிட்டதாய்ச் சொல்ல இராணுவ வாகனம் வந்துவிட்டது. அப்படியான ஒன்றை எப்படி அம்மா கேட்பது? எனது துரதிர்ஷ்டம்தான் என்று சொல்வார்கள். ஆனால் என்ன சொன்னாலும் அவர் எனக்கு மீண்டும் கிடைக்கமாட்டார்தானே?'

'அப்படி ஒன்றுமில்லை மகளே! நல்லபிள்ளை மாதிரி ராஜீ சொல்வதைக்கேட்டு டாக்டரிடம் போவோம்.

ராஜீ அறைக்குள் பிரவேசித்தான்.

அவனைக் கண்டவள் சடுதியாக எழுந்து அணிவகுத்து நிற்பதைப்போல் எழுந்து நின்றாள்.

'போவோம்' அவன் உரத்த குரலில் கூறினான்.

'சரி சேர்' இராணுவ பாணியில் எழுந்து நின்றவள், கட்டில் மெத்தையின் கீழ் ஒளித்து வைத்திருந்த பைல் ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டாள். பின்னர் கணவனின் அருகில் சென்றவள் 'நான் டாக்டரிடம் செல்ல வருகிறேன். ஆனால் அங்கு எனக்கு அருகிலேயே நீங்கள் இருக்கவேண்டும். என்னைவிட்டு எங்கும் செல்லக்கூடாது!

'சரி போவோம்' அவளை அழைத்துக் கொண்டு வானை நோக்கிச் சென்றான்.

டாக்டர் இருவரையும் உள்ளே அழைத்தவர் பின் ராஜிதவை வெளியே காத்திருக்குமாறு கூறினார். இதைக் கேட்ட சாமா கோபத்துடன் தலைகுனிந்து கொண்டாள்.

'சரி சாமா, என்னுடன் பேச விருப்பம் தானே.' அவள் தலையைத் தூக்காது, இல்லை என்ற கோணத்தில் பதிலளித்தாள்.

'ஏன்?'

நீங்கள் ஏன் எனது ராஜிதவை வெளியே அனுப்பினீர்கள்?

'நான் அப்படிச் செய்யவில்லை. நீர் வரும் வரை அவர் வெளியே காத்திருக்கிறாரே!' 'அப்படியானால் நான் அவர் இருக்குமிடத்திற்குப் போகிறேன்' அவள் எழுந்தாள். 'கொஞ்சம் பொறுங்கள் அது என்ன பைல்?'

அது பிரத்தியேகமானது என்றபடி வாசலுக்குச் சென்றவள் திரும்பிப் பார்த்தாள்.

'ராஜித உங்களை விட்டுச் செல்லமாட்டார். அப்படியிருக்க ஏன் அவசரப்படுகிறீர்கள்.' மீண்டும் வந்து அமர்ந்து கொண்டவள் கையில் இருந்த பைலை அணைத்துக்கொண்டு அழத் தொடங்கினாள்.

டாக்டர் அவளது கையைப் பற்றி ஆறுதலாக வருடிவிட்டார்.

'மகளே! ராஜித உங்களை விட்டுவிட்டுச் செல்லமாட்டார். அவர் லீவு முடிந்தவுடன் சென்றுவிடுவார்; இங்கே நான் தனியே படும் வேதனை யாரும் அறியமாட்டார்கள். அவரைப் போகவிட வேண்டாம் டாக்டர்.'

'வீட்டில் நீங்கள் தனியாகத்தான் இருக்கிறீர்களா?'

'மற்றவர்கள் இருந்தாலும் எனக்குத் தெரிவதில்லை. இரவு விடியும்வரை கண்களைத் திறந்து கொண்டுதானிருப்பேன். என்னிடம் இருக்கும் விளையாட்டு துவக்கினால் டீவியையும் ரேடியோவையும் சுடுவேன். வீடே எனக்கு யுத்த களம்போன்றுதான் தோன்றுகிறது. ஏனெனில் நாள்முழுதும் அதைப் பற்றித்தானே காட்டுகிறார்கள். கூறுகிறார்கள்.'

'ராஜித மகளின் மேல் அன்புதானே?'

'ஆம்'

'அப்படியானால் ஏன் வீணானவற்றை எல்லாம் கற்பனை செய்துகொள்கிறீர்கள்.'

'ஏன் என்னை விட்டுவிட்டு யுத்தத்துக்குப் போகிறார்?'

'அது அவரது அரச காரியம்'

'என்ன அரச காரியம்?'

நாட்டை-இனத்தை காப்பாற்றத்தானே அவர் இணைந்துகொண்டுள்ளார்.

அவள் படுகோபத்துடன் வைத்தியரை நோக்கி கையைக் காட்டியபடி, 'நாடு, இனம்? இப்படியான ஒரு இனத்தைக் காப்பாற்ற யுத்தம் செய்ய வேண்டுமா?'

'அப்படிச் சொல்லக்கூடாது மகளே. சனங்கள் அவரவர்களது வேலைகளைச் செய்துகொண்டிருக்கின்றார்கள். ஆனால் அவர்களது மனசுக்குள்ளே அவர்களுக்குத் தெரியும் தங்களை யார் பாதுகாக்கின்றார்கள் என்பது. அவர்கள் ராஜித போன்றோர்களுக்கு மரியாதை செய்வார்கள்'

சாமா பலமாக வாய்விட்டுச் சிரித்தாள்! இந்த விளையாட்டுக் கதையை எங்கே கற்றுக்கொண்டீர்கள் டாக்டர்'

'அதுதான் உண்மை' என்று 'டாக்டர் நம்பிக்கையுடன் முணுமுணுத்தார்.' எந்த மக்கள் உதவுவார்கள். யார் தமக்காக ஒரு பிரிவினர் யுத்தம் செய்து கொண்டிருக்கின்றார்கள் என நினைப்பது' எனக் கூறிக்கொண்ட அவள் மீண்டும் அழத்தொடங்கினாள்.

நான் ஏன் ராஜிதவை நினைத்துப் பயப்படுகிறேன். தெரியுமா? இதோ பாருங்கள் என்று கூறிக்கொண்டு தன்னிடம் இருந்த பைலை மடியில் வைத்துத் திறந்தாள். அதற்குள் பல பத்திரிகைகளிலும் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட பல படங்கள் இருந்தன. அவற்றை டாக்டரிடம் எடுத்துக்காட்டத் தொடங்கினாள். 'இது ஐந்து நட்சத்திர ஓட்டலில் டிசெம்பர் 31-ம் திகதி இரவு நடந்த களியாட்டம்'

டாக்டர் மௌனமாக படங்களை பார்க்கத் தொடங்கினார். அவள் மேலும் படங்களையும் விடயங்களையும் எடுக்கத் தொடங்கினாள். 'இது வீதிச் சோதனையொன்றின் போது அதில் நின்ற இராணுவ வீரன் ஒருவனை ஒரு அரசியல்வாதி கேவலமான வசனங்களால் திட்டிய விடயம்.'

'இதைப் பாருங்கள்! யுத்தத்தை நிறுத்த அரசியல் தலைவர்கள் கோயில்கட்டப் போகிறார்களாம் அதைப்பற்றியது.'

'இதோ பிரபல கிரிக்கெட் வீரர் ஒருவருக்குப் புதிய கார் பரிசாக வழங்கப்பட்ட படம். இது புதிய சினிமாப் படங்கள் பற்றிய விமர்சனங்கள், இவை நடிகைகளின் ஆசைகள் விருப்பங்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய பத்திரிகைகள்.'

இடையே அவளது வார்த்தைகள் தடைப்பட்டன.

'இவர்களில் யாராவது படைவீரர்கள் பற்றி நினைத்தார்களா? ஏன் எனக்கு மூளை சரியில்லை என மாமியார் கூறுகிறார்கள். அவர்களது இளைய மகளின் கலியாணத்தை ஆடம்பரமாக நடத்த நான் வேண்டாம் என்றேனே, அதற்காகவா? இல்லை ராஜிதவிடம்தான் மட்டும் அதிக அன்பாக இருக்கிறேனே அதற்காகவா? ஏன் என்னை இங்கே கொண்டுவந்தார்கள். எனக்கு உண்மையில் வருத்தமா? அப்படி வருத்தம் இருக்குமென்றால் அதற்கு மருந்து இந்தத் தரித்திரநாட்டில் கிடைக்குமா? நான் எனது தலையில் உள்ளதை யாரிடம் கடவுளே கூறுவேன்.' என தலையில் கையை வைத்துக்கொண்டு அழத்தொடங்கினாள்.

டாக்டர் கொஞ்சநேரம் அவளை அழவிட்டு மௌனமாக இருந்தார்.

சாமா 'மகளே நான் உன்னிடம் பிழை என்று கூறவில்லை.' அவள் தலையை நிமிர்த்திப் பார்த்தாள்.

'மகளுக்கு இப்ப என்ன வேணும்.'

'எனக்கு என் ராஜீதவின் பக்கத்தில்தான் இருக்கவேண்டும். என்ன நடந்தாலும் சரி, எனக்கு வேறு எதுவுமே வேண்டாம்.'

'சரி இந்தமுறை மாத்திரம் அவனைப் போகவிடு வந்ததும் திரும்பி அவன் போகமாட்டான்.'

சாமா தெளிவுடன் டாக்டரை நோக்கிப் பார்த்தபடி எழுந்தாள். 'இன்னுமொருமுறை சாவின் விளிம்பிற்குச் சென்றுவர? சரி! நான் அனுப்புகிறேன். நான் எனது வயிற்றில் அவரது குழந்தையை மூன்று மாதமாகச் சுமக்கிறேன் இது அவருக்கே இன்னும் நான் சொல்லவில்லை.'

டாக்டர் திரும்பிப் பார்த்தார்:

'இந்தமுறை அவர் சென்று வரவேண்டும். வந்தபின் மீண்டும் அவர் அங்கே போகக்கூடாது. இந்த இரண்டில் ஒன்று நடக்காவிடில் என் வயிற்றில் இருக்கும் பிள்ளையை நிச்சயம் அழித்து விடுவேன்.

இப்படியான ஒரு நாட்டிற்காக ஒரு பிள்ளையைப் பெற்று பலிகொடுக்கும் அளவுக்கு நான் விசரியல்ல!' எனக் கூறியபடி டாக்டரின் அறையைவிட்டு சாமா வெளியே நடக்கத்தொடங்கினாள்.

(சிங்களத்தில் ஞானேந்திர டம்மிக ஹெட்டி ஆராய்ச்சி எழுதிய சிறுகதையின் தமிழ் வடிவம்)

# பல சிங்கள ஜனாதிபதிகளை பார்த்தவர் பிரபாகரன்’

## கனடாவில் பெ. மணியரசன் முழக்கம்!

‘தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் தலைமையில் நடைபெறும் ஈழ விடுதலைப் போராட்டத்தை நீண்ட காலப் போரின் மூலம் களைப்படையச் செய்து நசுக்கி விடலாம் என்று சந்திரிகா கனவு காணுகிறார். பிரபாகரன் பல சிறீலங்கா ஜனாதிபதிகளைப் பார்த்திருக்கிறார். ஆனால் சிறீலங்கா ஜனாதிபதிகள் ஒரே ஒரு பிரபாகரனைத்தான் பார்த்திருக்கிறார்கள்’ என பெ.மணியரசன் கூறினார். மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது,

வருகின்ற பொதுத் தேர்தலில் சந்திரிகா தோற்றுவிட்டால் அவர் அமெரிக்காவுக்கோ, பிரான்சுக்கோ சென்று விடலாம். ஆனால் பிரபாகரன் நிலை அதுவல்ல. அவர் ஈழத் தமிழர்களின் சுவாசக்காற்றாக விளங்குகிறார்.

‘சந்திரிகா அரசு விதித்த பொருளாதாரத் தடையால் வன்னிப் பெருநிலத்தில் வசிக்கும் தமிழர்களும் பட்டினிக் கொடுஞ்சிறையில் உழல்கிறார்கள். ‘ நோய்களால் தாக்கப்பட்டுத் துடிக்கிறார்கள். அவர்கள் நடத்தும் ஆக்கிரமிப்புப் போரினால் சிங்கள நாடு திவாலாகி விட்டது. தொலைத் தொடர்பு துறையை அந்நியர்களுக்கு விற்று அந்தப் பணத்தைக் கொண்டு ஆயுதம் வாங்குகிறார்கள். ஏர் லங்காவில் 40 சதவிகிதப் பங்கை 420 கோடி ரூபாய்க்கு விற்று யுத்தம் நடத்த வேண்டிய நிலைக்கு அந்த நாடு திவாலாகி விட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் சிங்களர்களின் ஆட்சியைத் தின்னும் பூதமாக வளர்ந்துவிட்டது.

கண்டங்களைக் கடந்து கனடாவில் வாழும் தமிழர்கள் ஈழ விடுதலைப் போரின் பின்னரங்கத்தில் இருக்கிறீர்கள் என்று பொருள். ஒரு போருக்கு முன்னரங்கம் எப்படி முக்கியமோ அதேபோல் பின்னரங்கமும் முக்கியம். பின்னரங்கம் சரியாக இருந்தால்தான் முன்னரங்கத்தில் வெற்றியை ஈட்ட முடியும். ஈழ விடுதலைப் போருக்கு எல்லா வகையிலும் உதவ வேண்டும். நீங்கள் இப்போது உதவுகிறீர்கள். இதில் தொய்வில்லாமலும் இன்னும் தீவிரமாகவும் உதவ வேண்டும்.

தமிழ்நாட்டில் பழ. நெடுமாறன் அவர்கள் தலைமையில் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவில் பல்வேறு தமிழ் அமைப்புகள் பல நெருக்கடிகளுக்கும் தடைகளுக்கும் இடையே ஈழ விடுதலைப் போருக்காதரவாக மக்கள் ஆதரவைத் திரட்டி வருகிறோம். ‘அண்மையில் மரண தண்டனை ஒழிப்பு - மனித உரிமைக் காப்புப் பிரச்சார இயக்கம் 15 நாட்கள் தமிழகம் தழுவிய அளவில் நடத்தினோம். குறிப்பாக ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய நால்வர் மீதான தூக்குத் தண்டனையை ரத்துச் செய்யுமாறு கோரினோம். ராஜீவ் வழக்கில் விடுதலையானவர்களையும் அழைத்துச் சென்றோம். பாசறைப் பாணர் தேனிசை செல்லப்பா குழுவினர் இப்பிரச்சாரத்தில் எல்லா நாட்களிலும் எழுச்சி இசை வழங்கினார்கள். எல்லா இடங்களிலும் மக்கள் ஏராளமாக வந்து கலந்து கொண்டனர்.

> **‘கனடாவில் வாழும் 2 இலட்சம் ஈழத் தமிழர்கள் தங்கள் தாய் மொழியையும் பண்பாடுகளையும் விட்டுவிடக்கூடாது. தமிழ் கற்றுக் கொடுக்கும் பள்ளிக்கூடங்களை நிறையத் திறக்க வேண்டும். தமிழக அரசு இலவசமாகத் தமிழ்ப் பாடப் புத்தகங்கள் அனுப்பி வைக்க வேண்டுமென்று தமிழக அரசைத் தமிழ் நாட்டில் கோருவோம்.**

‘கனடாவில் வாழும் 2 இலட்சம் ஈழத் தமிழர்கள் தங்கள் தாய் மொழியையும் பண்பாடுகளையும் விட்டுவிடக்கூடாது. தமிழ் கற்றுக் கொடுக்கும் பள்ளிக்கூடங்களை நிறையத் திறக்க வேண்டும். தமிழக அரசு இலவசமாகத் தமிழ்ப் பாடப் புத்தகங்கள் அனுப்பி வைக்க வேண்டுமென்று தமிழக அரசைத் தமிழ் நாட்டில் கோருவோம்.

மேற்கண்டவாறு பெ. மணியரசன் பேசினார்.

கனடாவின் மான்றியல் நகரத்தில் டெக்காரி சதுக்கத்தில் தமிழர் எழுச்சி விழா நடைபெற்றது. திரு. மரியதாஸ் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

தமிழீழத் தேசியக் கொடியைத் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சிப் பொதுச் செயலாளர் பெ. மணியரசன் ஏற்றி வைத்தார். அதன்பின்னர் சிங்கள இன வெறிக்குப் பலியான தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

திரு.மரியதாசின் வரவேற்புரைக்குப் பின்னர் போர் துயரங்களை மையமாக வைத்தும் கரும்புலிகளின் வீரசாகசங்களை மையமாக வைத்தும் செல்வி ராதிகா சிற்சபேசன், செல்வி நளினி சிற்சபேசன் ஆகியோரின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. இறுதியாக புஷ்பவனம் குப்புசாமி எழுச்சி இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

**டொரண்டோ**

டொரண்டோ மாநகரில் தமிழீழச் சங்கக் கலை மண்டபத்தில் கலைவிழா நடந்தது. இந்நிகழ்வுக்கு கனேடியத் தமிழர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சிற்றம்பலம் தலைமை தாங்கினார். பெ. மணியரசன் சிறப்புரையாற்றினார். புஷ்பவனம் குப்புசாமி குழுவினரின் தமிழிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

*நன்றி: தென்செய்தி*

---

### 31ம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம்: 20 - 02 - 1945

மறைவு: 18 - 08 - 1999

## திரு. வேலுப்பிள்ளை சிவானந்தம்

எங்கள் இதயத்தின் அன்புத் தெய்வம் அண்ணாவே!

அன்பிற்கும், பண்பிற்கும் உறைவிடமாய் வாழ்ந்து எம்மைப் பாசத்துடன் அரவணைத்து வளர்த்த எங்கள் அண்ணாவே, மாதம் ஒன்று மறைந்தாலும் உங்கள் அன்பு நினைவுகள் எம்மைவிட்டு என்றும் மாறாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீருடன் இறைவனைப் பிரார்த்திக்கும்...

சகோதரர்கள்

*தகவல்:*
*மயில்வாகனம் (பாரிஸ்)*
*குமாரசுவாமி (பாரிஸ்)*
*01 40 40 05 29*

Pub

---

### 90ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 23 - 10 - 1960

உதிர்வு: 16 - 06 - 1999

## திருமதி விஜயகுமாரி (விஜி)


எங்கள் அன்புச் சகோதரியே!
என்ன நடந்தது என்று நினைப்பதற்குள்
நாட்கள் 90 கடந்து விட்டன.
90 நாட்கள் என்ன
90 வருடங்கள் ஆனாலும்
உன் ஆசை முகத்தையும், அன்பு
உள்ளத்தையும்
எங்களால் மறக்க முடியுமா?
நாங்கள் எதை கொடுத்தாலும்
திரும்ப பெற முடியாத சகோதரியை
இழந்து விட்டு கலங்கி நிற்கின்றோம்.
இந்த வேளையில் நேரிலும், தொலைபேசி,
தபால் மூலமும்
எங்கள் துயரத்தைப் பகிர்ந்து கொண்டதுடன்,
எங்கள் பெற்றோருக்கும் ஆறுதல் கூறிய
உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களுக்கு
எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்
கொள்கிறோம்.

*தகவல்:*
சகோதரி திருமதி வசந்தகுமாரி திருச்செல்வம் (Denmark)
Tel: 62612486
சகோதரன் திரு.குணசேகரம் (Switzerland)
சகோதரி செல்வி. ஜெயக்குமாரி அன்னலிங்கம் (Denmark)

Pub

---

### 31ம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்: 14 - 05 - 1924

ஆண்டவன் அணைப்பில்: 09 - 07 - 1999

## திருமதி சிவபாக்கியம் முத்தையா

*(கொட்டடி யாழ்ப்பாணம்)*

*எங்கள் அன்புத்தாயே!*
*அன்பு பண்பு பாசத்துடன் எம்மை சீராட்டி வளர்த்த*
*எம் அன்புத் தெய்வமே*
*துக்கமின்றி காத்தீர்கள் துயரமின்றி வளர்த்தீர்கள்*
*இது தான் வாழ்க்கை என்று இன் சொல்லால் வழி*
*காட்டி வளர்த்த பண்புத் தெய்வமே!*
*எங்கள் அன்புகண்டு, நல்வாழ்வுகண்டு மகிழ*
*முன்பு*
*இனியும் உங்களைக் கண்போல் என எதிர்பார்த்த*
*வேளையில்....*
*வெற்றியாட்டான் இடியால் வந்து உங்களைக்*
*கவர்ந்து சென்றானே!!*
*அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனை வேண்டுகிறோம்.*

*தகவல்: குணம் குடும்பத்தினர்*
*பேர்லின். (ஜேர்மனி)*
*தொலைபேசி: 0173/ 2392160*

Pub

# உங்கள் எண்ணம்போல் தேர்வுகளிற்கு 10 விதங்களில் வெளிவந்துள்ளது!

காதலர்தினம்

BHASKY

*Marketed & Distributed by*

**Ayngaran Limited**

172. Woodmansterne Road,
London SW 16 5 TZ, United Kingdom

**Tel: 0181 9428262**
**Fax: 0181 9428263**
E-mail: bhasky@aol.com




Pub EN



ஜேர்மனி நொய்ஸ் வாழ் மக்களுக்கும் அதன் அண்மித்த நகர மக்களுக்கும்

## ஓர் நற்செய்தி

நொயிஸ் நகரில்
வெகுவிரைவில்

Leema

# லீமா மக்கள் கடை

திறக்கப்படவுள்ளதை அனைத்து மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

இடம்:

நொய்ஸ் பிரதான புகையிரத நிலையத்திற்கு முன்பாக

**Marienkirch Platz-5**

**41460 Neuss, Germaney.**

# கலைந்த சொற்கள் எண்: 39

கீழ் உள்ளவற்றில் 138 சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர்கோட்டிலும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் என இருக்கும். இச் சொற்களை கண்டு பிடித்து கோடிடவும். இச் சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம் | ம் | ண | கு | ற் | ச | ல் | ம் | ள | ப | ம் | ச் | ம் | ப | ப் | வெ |
| த | ப | ம் | ல் | ம் | ற | ல | ர் | ல் | ல் | து | ச | ப | த | ம் | இ |
| னை | ப | ப் | ம | ல | ப | யி | ம் | ய | தி | த் | ப | ட் | மை | லா | வெ |
| ல் | வி | த | அ | ன | னு | ம் | அ | பு | து | ழு | டு | ட | ப | ல | ம் |
| த | ம் | ன் | ம் | ன் | வ | ண | க | ண | ல் | லெ | ல் | ம் | வு | ர | பு |
| ஈ | ப | கு | த | த | வ | ர | வு | அ | த | த | ம் | ர | நே | ல | பா |
| ன் | ல | ன | வ | ந் | த | ன | ம் | த | த் | மு | ல் | லை | இ | ற | கு |
| ம் | ல் | மா | த | ர் | வ | க | ன் | ர் | தி | தி | மா | க | வு | ல | நி |
| ழை | ம | ன | க | ள் | ல | ன | மி | ம | ப | ய | னு | ரை | அ | க | கா |
| ல் | ம் | க | ட | க | ட | நி | த | ம் | ப | வ | க | தி | ர் | வு | வு |
| ப | வ | ர | ல் | க் | கு | ந | ப | ர் | ரு | ர் | கா | ற | த் | ம் | த |
| ம் | த | ர | க | ம | ண | ர | க | ழ | வ | ர | ர் | ன் | ள | ற | ல் |
| ப | த | ம் | ப | அ | ம் | த் | ல் | ன | ம் | ர | மே | வ | த | த | கு |
| ர | மா | லை | ப் | பொ | ழு | து | கா | ல் | கா | தி | க | க் | ர் | நி | மு |
| ம் | த | த் | ரு | வி | ழு | வ | ப | ம் | ன | ம் | ம் | க | பொ | ண | த |
| வி | ம | ள் | வெ | ல் | ல | ம் | ன | ம் | ம | இ | ப | த | க் | க | ம் |
| ம | ரு | த | த | ர் | வெ | ச | ப | ல் | யி | வெ | ளி | ந | ரோ | க | ல |
| வி | ந் | த் | த் | ணி | போ | ம் | ப | லா | ல் | ச | ங் | த | ம | வி | ல் |
| தி | ரு | ப் | தி | உ | த | ய | ம் | ழ | உ | கூ | கு | த | டி | றை | இ |
| ப | ரு | த் | தி | ரு | டை | கா | தூ | ய | ர | தை | லை | ப | ப் | ப் | த |
| ய | ம் | ன | த | வ | ய | ப் | ர் | ம் | த | வா | ப் | இ | பு | பு | பு |
| ன் | வி | ல் | வ | ம் | ம் | பு | பு | இ | ழை | இ | பு | பு | ப் | று | ம |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிமிர்த்தல் | அகல்தல் | முதலெழுத்து | பதித்தல் | முத்தம் | இலாபம் | சத்துணவு | பத்தியம் | அதர்மம் | மாலைநேரம் | பட்டம் |
| தனவந்தன் | தன்வினை | மன்னவன் | தன்னுயிர் | வந்தனம் | பாரபட்சம் | பம்பரம் | பரம்பொருள் | நரத்துவம் | தும்மல் | மக்கள் |
| கடகம் | தன்னடக்கம் | கனமான | கனமழை | அன்பன் | முதியவர் | பயனுரை | கரைதிறன் | அதிகாரம் | கார்மேகம் | மேதினம் |
| நிர்க்கதி | கம்பளி | பளிங்கு | பதக்கம் | வர்ணம் | நங்கூரம் | மகரதம் | பகர்தல் | தன்னலம் | அகவும் | கணவன் |
| கதிகால் | கானமயில் | காவலர் | காவுதல் | பருவம் | கும்பம் | சம்மதம் | சற்குணம் | கும்பல் | அப்பம் | விருத்தம் |
| அலறல் | பரவல் | சம்பளம் | சபதம் | குமுதம் | வெப்பம் | படவுலகு | கலகம் | கவளம் | குறத்தி | அகரம் |
| விரோதம் | வெம்பல் | வெல்லம் | வம்சம் | சல்லாபம் | உத்தமம் | பருத்தல் | விருத்தம் | பருத்தி | திருப்தி | விருத்தி |
| தம்பம் | போசனம் | உடைப்பு | உதயம் | உருவம் | வதனம் | தருதல் | வில்வம் | விறைப்பு | தடையம் | இதயம் |
| கம்மல் | உதைப்பு | இப்படி | குலைப்பு | இல்லம் | மறுப்பு | தடிப்பு | மடிப்பு | கக்கல்* | கானவர்* | உயர்பு* |
| கரவர்* | முல்லை | புதிது | புயல் | வரவு | மாதர் | கடல் | கமம் | அமல் | பதம் | குலம் |
| ஈதல் | தனல் | அயல் | வெம்மை | புலமை | நேரம் | தட்டு | இறகு | அலகு | நிலவு | நிகர் |
| பகல் | குணம் | கதிர் | தந்தி | காப்பு | பயன் | பலம் | வெயில் | சூழல் | காதணி | பழம் |
| தவம் | அகம் | வரம் | தனம் | தலைவாழை | | மாலைப்பொழுது | | | | |

பெயர்:..........................................

முகவரி:..........................................

..........................................

..........................................

பிறந்த நாள்:..........................................

சந்தாதாரராயின் சந்தா எண்:..........................................


கலைந்த சொற்கள் எண்-39 இற்கான விடைகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள்: **24.09.1999**

(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

கலைந்த சொற்கள்
**Eelamurasu**
**22, Rue Perdonnet, 75010 Paris, France.**

## கலைந்த சொற்கள் எண்–38 விடைகள்



ஈழமுரசின் சென்ற எண் கலைந்தசொற்கள் பகுதிக்கு 185 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள்.

அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர்களின் விபரங்கள் வருமாறு.

1) ரூபா சோதிலிங்கம்
6230 Rødekro,
Denmark.

2) P. லிஸ்ரொன்
4635 BB Huybergen,
Nederland.

3) A. ஷெரனி
East-Ham,
London - E6-2Dx.

4) தனுஷன் தயாளன்
5134 Flaktveit,
Norway.

5) ரேவதி சிறீகாந்தன்
75011 Paris,
France.

**இவர்களுக்கு *Lune International* நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.**

இந்த கலைந்த சொற்கள் எண்-39 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்- 40ம், 30 செப்டெம்பர் - 06 ஒக்டோபர் 99 ஈழமுரசில் வெளிவரும்.

* இவ்வடையாளம் இடப்பட்ட சொற்களுக்கான விளக்கம். இச்சொற்கள் தமிழ் மொழியகராதியிலிருந்து எடுக்கப்பட்டவை.

கானவர் - குறிஞ்சி நிலமக்கள், வேடர்
கரவர் - திருடர், வஞ்சகர்
உயர்பு - உயரம், மேன்மை
கக்கல் - இருமல், கக்குதல், சத்திபண்ணல்.

தயாரிப்பு: சவேயூ சவுந்தரராஜா


# NÆRKØB -DKS Video

Danmark பதறேஸ்சியா மாநகரில் (Nærkøb) நியர்குய்ப் DKSVideo ஸ்தாபனத்தாரின் மற்றும் இரு சேவைகள்

இடமாற்றம் 01.09.99 முதல் NÆRKØB ரவல்ஸ் கு Mony Exchence

**புதிய முகவரி**

NÆRKØB ரவல்ஸ் 5
**Vestcenter, Venvsvej-10, 7000 Freclericia, Danmark.**
தொலைபேசி: 75915840 -75915841 / Fax: 75915842

## *Nærkøb Travels*⑤

*Nærkøb* Tvavels புதிய நவீன படுக்கை வசதிகள் கொண்ட பஸ்சேவை - வாரம் 3 நாட்கள்

| | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark - London- | **540Kr** | **890Kr** |
| Danmark - Paris | **358Kr** | **574Kr** |
| Danmark - Hambvrg | **205Kr** | **327Kr** |

இலையுதிர்கால மலிவு பயணச்சீட்டுகள் October கடைசிவரை பாரிஸ் சென்று அதே பஸ்சில் திரும்பிவர 398 Kr மட்டுமே
பிரான்ஸ் நாட்டில் இருக்கும் டிஸ்னிலான்ட் (Disny Land Paris) சென்று திரும்பிவர 6.78 Kr மட்டுமே
2 வயதிற்குமேல் 12 வயதுக்குட்பட்டவருக்கு 598 Kr மட்டுமே
உடன் தொடர்புகொண்டு ஆசனங்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள்: 75915840 - 75915004
Fax 75915842 Fax 75915806

## *Nærkøb Money Transfer*

15 நிமிடங்களுக்குள் உங்கள் பணத்தை அன்றைய வங்கி மதிப்பின்படி உலகில் எந்த இடத்துக்கும் கொடுக்கவோ/ பெற்றுக்கொள்ளவோ முடியும்.
இந்த Money Exchange அரச அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள்.

**இவ்வாரம் முதல் Okotober 30ª திகதி வரை**
மலிவான விமானப் பயணச்சீட்டுக்கள்.
Copenhagen - Colombo - **3,200 Kr** மட்டும் **(Tax 165 Kr)**
Copenhagen - Colombo - India (திருவனந்தபுரத்திற்கு) -
**3800 Kr + Tax 185 kr**

# பலதும் பத்தும்

## மலசலகூடத்தைத் திருடியவர்

பிரான்சின் கிரனோய் பகுதியில் அமைந்துள்ள கிராமமான லா பிரெட்டில் பொது இடத்தில் அமைக்கப்பட்டிருந்த மலசலகூடத் தொகுதியில் இரண்டு மலசல கூடங்களைக் காணவில்லை. ஏப்ரல் மாதம் 1–ந் திகதி இதற்குள் போனவர்கள் இரண்டு மலசலகூடங்களில் கழிக்கும் பகுதிகளைக் காணாது திகைத்தனர். ஆனால் ஊரில் உள்ளவர்களிடம் இதைப் பற்றிக் கூறியபோது அவர்கள் அதனை முதலில் நம்பவில்லை. ஆனால் பின்னர் சம்பவம் உண்மைதான் என்று அறிந்தபோது அவர்களால் சிரிப்பை அடக்க முடியவில்லை. ஆனால் இச் சம்பவத்தை அறிந்த பொலிசார் மாத்திரம் சிரிக்கவில்லை. விசாரணைகளை முடுக்கி விட்டனர். ஒரு மாதகால விசாரணையின் பின் மே மாதம் 8–ம் திகதி மலசல கூடத்தை திருடிய கள்வன் பிடிபட்டார். அவர் ஒரு இரவு களியாட்ட விடுதியின் சொந்தக்காரர் (Discotheque). தனது களியாட்ட நிலையத்திற்கு இரண்டு மலசலகூடங்கள் தேவையாக இருந்தது. ஆனால் சிறிது பணத்திற்குத் தட்டுப்பாடு. வீதியில் அமைந்திருந்த மலசல கூடங்கள் பொதுச் சொத்துத்தானே என்று எண்ணி அவற்றில் இரண்டைப் பெயர்த்தெடுத்து வந்து தனது சூதாட்ட நிலையத்தில் பொருத்தி விட்டார். மக்கள் சொத்துத்தானே, தானும் அந்த மக்களில் ஒருவன் தானே என எண்ணிவிட்டார் போல் இருக்கிறது. ஆனால் பாவம் பாதுகாப்புத்துறை அப்படி நினைக்கவில்லையே!

## உலகை இணைக்கும் சில தகவல் வலைத் தொடர்புகள்

### தமிழ்ப் பக்கங்கள் சில

**'நிக்குமோ... நிக்காதோ'**

★ இது ஒரு கவிதைப்பக்கம். ஆனால் உள்ளே ஏராளமான விடயங்கள். செய்தித் தொடர்புகள், பாடல்கள் என ஏராளம், ஏராளம்.
**www.anglefire.com/va/doublen.**

**சுசியின் பாடல் பக்கம்**

★ இதற்குள் புகுந்தால் தமிழ் ஹிந்தி மட்டுமா ஆங்கிலத்தின் புத்தம் புதிய பாடல்களைக் கேட்டு மகிழலாம்.
**http://members.xoom.com/newmusic/**

★ இதுவும் ஒரு தமிழ்பாடல் பக்கம்
**http://tamil.luxmi.com/tamil/audio**

★ இது கனடாவில் இருந்து வெளியாகியுள்ள ஒரு தமிழ் இணையம்.
இதனுள் தமிழ் செய்திகள், தமிழ் இணையங்கள் என ஏராளம்.
**www.tamil.net**

★ இது தமிழ், தமிழ்நாடு, தமிழ்க் கவிகள் என ஏகப்பட்ட தொடர்புகளைக்கொண்டுள்ள ஒரு பக்கம்.
**www.geocities.com/athens/5180/links.html.**

★ ஈழத் தமிழர் வரலாறு முதல் புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் வரை எல்லாம் இங்கே பார்க்கலாம்.
**http:/maxpages.com,/eezamnation**

## தாவரங்களை உண்டு சேற்றுநீரைப் பருகி உயிர் வாழ்ந்த மனிதர்

அவுஸ்திரேலியாவில் போர்த் என்னும் இடத்திலுள்ள காய்ந்த நதிப்படுக்கையில் ஆதரவு ஏதுமின்றி தன்னந்தனியனாய்த் தவித்து நின்ற அமெரிக்க நாட்டவரான 33 வயது றொபேர்ட் பொபுகி என்பவர் 40 நாட்களாக தாவர இலைகளையும் சேற்றுநீரையும் மட்டுமே உணவாக உண்டு உயிர்வாழ்ந்துள்ளார்.

அலாஸ்கா நாட்டின் தீயணைப்புப்படை உத்தியோகத்தவராகிய இவர் தனது காதலியாகிய ஜனித் நோத் இடம்தான் அவுஸ்திரேலியாவின் முடிவற்ற தரிசுநிலங்கள் பற்றி ஆராய்வதற்குச் செல்வதாகக் கூறிச் சென்றார்.



பேர் என்னுமிடத்தில், இருந்து இவர் தனது குறிக்கோள் பயணத்திற்காக எடுத்துச் சென்ற மிதிவண்டியையும், தங்கும் கூடாரத்திற்கான உபகரணங்களையும் கடந்த ஆடிமாதம் 26–ம் திகதி இவரைத் தேடிச் சென்றவர்கள் கண்டெடுத்துள்ளனர். பொலிஸ்காரர்களும் சாதாரண உதவி புரியும் மக்களும் சேர்ந்து இவரைக் கண்டுபிடிப்பதற்காக ஒரு பெரிய தேடுதல் வேட்டையையே நடத்தினார்கள். ஒகஸ்ட் மாதத் தொடக்கத்தில் நன்கு தேர்ச்சிபெற்ற 8 பேர்கொண்ட அமெரிக்க தேடுதல் குழுவும் இவர்களுடன் கலந்துகொண்டது.

இவ் அமெரிக்கரை 180Km இற்கு அப்பாலுள்ள Edgar-Hugeln என்னுமிடத்தில் உள்ள காய்ந்த நதிப்படுக்கையில் கண்டுபிடித்தார்கள். தன்னைக் கண்டுபிடித்ததையிட்டு தான் மிகவும் ஆனந்தப்படுவதாக இவர் கூறினார்.

இவர் தனது இப்பயணத்தில் நடந்து சென்ற 400Km இற்குக் கூடுதலான தூரத்தில், அதிகமான அளவை கால்களில் பாதணிகள் போடாமலேயே நடந்து சென்றிருக்கின்றார்.

இப்பயணம் தனக்கு மிகவும் அதிசயமான விளக்கங்களைப் பெற்றுத்தந்ததாயும் தனது குறிக்கோள்விடயமாயும் மிக நல்ல தெளிவுகளைப் பெற உதவியதாகவும் இவர் தெரிவித்தார்.

கடந்த 40 நாட்களாக இவர் உண்ட இலைகுழையும் சேற்று நீரும் இவரது உடல் நிறையை 20 கிலோவால் குறைந்திருந்தது. தற்பொழுது இது தனக்குப் போதுமானது என்றும் இவர் கூறினார். தனது உடல் தேர்ச்சிபெற வைத்தியசாலையில் இருந்தபோது, சுத்தமான நீரையும் பழங்களையும் மிக விருப்பமாய் உண்டார் றொபேர்ட் பொபுகி.

*- ஜெ. சியாந்தி.*

## அதிக வயது வித்தியாசத் திருமணம்

அதிக வயது வித்தியாசத்திற்குட்பட்ட வெளிநாட்டவர்- சுவிஸ்நாட்டவர் இவர்களுக்கிடையிலான திருமணங்கள் உண்மையான திருமணமாக அமைகின்றதா? சுவிஸ் பிரதம நீதிமன்றம் சுட்டிக்காட்டுகிறது. சுவிஸ் வதிவிட அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெறாத கொசோவோ நாட்டவர் ஒருவர் (வயது-38) 81 வயது சுவிஸ் நாட்டு மூதாட்டியைத் திருமணம் செய்துகொண்டுள்ளார். இவ்விடயமாய் சுவிஸ் நாட்டு அனுமதிப்பத்திரம் பெறும் நோக்குடனேயே இத்திருமணம் நடைபெற்றது என்ற கிரபுண்டன் மாநில நீதிமன்றம் எடுத்த முடிவையே சுவிஸ் நாட்டு பிரதம நீதிமன்றமும் எடுத்துள்ளது.

சீசன் வேலை என்று கூறப்படும் பருவவேலை(Saison Arbeit) செய்துவந்த இந் நபர், 1991-ம் ஆண்டில் இருந்து இப் பெண்மணியுடன் நட்பாய் இருந்துவருகிறார். இவருக்கு 1996-ம் ஆண்டில் (சீசன்வேலை) பருவவேலை மறுக்கப்பட்டது. இதன்பின் இவர் பத்து வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்திருந்த தனது மனைவியை விவாகரத்துச் செய்தார். இவரது பிள்ளைகள் மூன்றும் இவரது பொறுப்பிலேயே வாழ்கின்றனர்.

தனது விவாகரத்து முடிந்த ஒருவாரகாலத்தில் இவர் தன்னிலும் 43 வயதால் மூத்தவரான பெண்ணைத் திருமணம் செய்யப்போவதாக சுவிஸ் (St Moritz) சென்மொரிஷ் நகரத்து விவாகப்பதிவு அலுவலகத்திற்கு விண்ணப்பித்தார். மணமகளின் மகன் இத்திருமணத்திற்கு எதிர்ப்பாயிருந்த காரணத்தினால் திருமணம் தாமதமாகி 1997-ல் இத்திருமணம் நடைபெற்றது.

இந்நபர் வதிவிட அனுமதி பெறும் உள்நோக்குடனேயே இத்திருமணத்தைச் செய்துள்ளார் எனக் குற்றம்சாட்டி, கிரபுண்டன் மாநில வெளிநாட்டவருக்கான பொலிஸ் இலாகா இவருக்கு வதிவிட அனுமதி வழங்கமறுத்துவிட்டது.

பொலிஸ் இலாகா எடுத்த இந்த முடிவை கிரபுண்டன் மாநில நீதிமன்றமும் ஏற்றுள்ளது.

இவ்வழக்குத் தீர்ப்பு மூன்று நீதிபதிகளினால் கூறப்பட்டதாயினும் இருவர் இத்திருமணம் செய்தவர்களுக்குப் பாதகமாகவும், ஒருவர் சாதகமாகவும் தீர்ப்பளித்திருந்தனர்.

இத் தம்பதியர்க்கு சாதகமாக தீர்ப்பளித்த நீதிபதி குறிப்பிடுகையில், இவர்களிருவரும் 1991-ம் ஆண்டில் இருந்தே அன்னியோன்யமாக வாழ்ந்து வருகின்றனர் என்றும், ஆதலினால் இவர்கள் சேர்ந்து வாழும் விருப்புடன் திருமணம் செய்திருக்கலாம் என்றும், வதிவிட அனுமதியை மாத்திரமே இத்திருமணத்திற்குக் காரணமாகக் கொள்ள முடியாதுள்ளது என்றும், மணமகள் தான் தனியாக வாழ விரும்பாத காரணத்தினால் இத்திருமணத்திற்குச் சம்மதித்திருக்கின்றார் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதே போன்று வயதால் முதிர்ந்த ஆண் ஒருவர் இத்தகைய வயது வித்தியாசத்தில் திருமணம் செய்திருந்தால் சுவிஸ் நீதிமன்றம் இப்படி ஒரு தீர்ப்பை எவ்வாறு செய்திருக்கும் என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

*- ஜெ. சியாந்தி*

# ஈஸ்வரா!

## Ishwara

**21**-ம் நூற்றாண்டில் காலடி பதிக்க இன்னமும் மூன்றே மாதங்கள் இருக்கும் போது, நாகரிகத் தலைநகர் பாரிஸில் புதிய நூற்றாண்டுகளுக்கான பதிவுகளோடு 06.09.1999 திங்கட்கிழமை பகல் 12.00 மணிக்கு பிரபல பின்னணிப் பாடகர் உன்னி கிருஷ்ணனால் 19 Rue Cail, 75010 Paris என்னும் முகவரியில் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது "ஈஸ்வரா" புடவை, நகை மாளிகை.



பிரபல பின்னணிப் பாடகர் உன்னி கிருஷ்ணன் அவர்கள் "ஈஸ்வரா" புடவை - நகை மாளிகையைத் திறந்து வைக்கிறார்.

இதில் என்ன விஷேசம் என்று எண்ணுகிறீர்களா? நிட்சயமாக பல குறிப்பிடத்தக்க விசேடங்கள் உண்டு. பாரிஸ் நகரில் இத்தகைய பிரமாண்டமான நவீன அலங்காரமுடைய தமிழர்களது புடவை நிலையங்கள் இல்லை என்றே சொல்லலாம். பாரிஸ் "லா சப்பலில்" அமைந்துள்ள புடவை நிலையங்கள் அனைத்தும் பாரம்பரிய நமது நாட்டு புடவைகளையும், இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு றெடிமேட் உடுப்புக்களையும் மட்டுமே நமது மக்களுக்கு அறிமுகப்படுத்தி வந்தன.

"ஈஸ்வரா" முதல் தடவையாக நமது பாரம்பரிய உடைகளுடன், சொந்தமாகவே பல நவீன ஐரோப்பிய - இந்திய உடைகளை ஐரோப்பிய கால நிலைக்கும், நாகரிகத்துக்கும் ஏற்ற விதத்தில் முற்றிலும் புதிய டிசைன்களில் வடிவமைத்து வழங்குகின்றனர். 21-ம் நூற்றாண்டுக்கான இளைய தலைமுறையின் கனவுகள் மட்டுமல்ல, பழைய தலைமுறையின் பாரம்பரியங்களும் மேலை நாட்டு நாகரிகச் சூறாவளியில் அடித்துச் செல்லாது காப்பாற்றும் வகையில் அனைத்து வயது ஆண், பெண், குழந்தைகளுக்குமான ஆடைகளை அனைவரும் மெச்சும் வண்ணம் வடிவமைத்து வழங்குகின்றார்கள்.

இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் பஞ்சாபி, சுடிதார் போன்ற உடுப்புக்கள் அடக்கமாகவும் அழகாகவும் இருந்தபோதும் இங்குள்ள கால நிலைக்கு அணியக் கூடியதாக துணிகளிலோ, வடிவங்களிலோ, அளவீடுகளிலோ கவனமெடுக்கப் படுவதில்லை. ஆடம்பரமான அலங்காரங்களைக் கொண்ட விலையுயர்ந்த பஞ்சாபி, சுடிதார்கள் சாதாரண நாட்களில் அல்லது வேலைக்குப் போகும் வேளைகளில் அணிய முடியாததாகவே உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு "ஈஸ்வரா" இந்த நாட்டுக் கால நிலைக்கும், வசதிக்கும் ஏற்ற விதத்தில் சரியான அளவுகளில் பஞ்சாபி, சுடிதார்களைத் தயாரித்து வழங்குகின்றனர். இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் பஞ்சாபி, சுடிதார்கள் போலல்லாமல் அளவுகள் துல்லியமாகக் கணக்கிடப்பட்டு, மிக இலகுவாக அழகாகத் தோன்றும வண்ணம் களிசான்களிலும் (Pantalon) மாற்றங்கள் செய்து நாகரிக உலகின் நங்கையர்க்கு வழங்கப்படுகின்றது.

வேலைக்கும் பொது இடங்களுக்கும் அணிவதற்கு நமது பெண்கள் ஐரோப்பிய உடைகளை நமது கலாச்சாரங்களைப் பேணும் வகையில் தெரிவு செய்வதற்கு பல ஐரோப்பிய புடவை நிலையங்களுக்கு அலைய வேண்டிய நிலை இருந்தது. ஆனால் "ஈஸ்வரா" இந்தக் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் பல ஐரோப்பிய பாணி உடைகளை நம்மவர்க்கு ஏற்ற வகையில் தாமே தயாரித்து பெருமையோடு வழங்குகின்றார்கள்.

புலம்பெயர்ந்த நாடுகளில் ஆண், பெண், குழந்தைகளுக்கு தரமான உடுப்புக்களை வாங்குவதற்கு C & A, Mark & Spencer போன்ற ஐரோப்பிய கடைகளில் மிக உயர்ந்த விலை கொடுத்து வாங்கப்பட்டு வந்தது. தற்போது "ஈஸ்வரா" உங்களுக்கு அதே தரத்திலான அழகான ஆடைகளை மிகக் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் வழங்குகின்றார்கள்.


பாரிஸ் நகரம் என்றதும் வாசனைத் திரவியமான Parfums மனதைக் கரைத்துவிடும். உலகின் எந்தப் பாகத்திலிருந் பாரிசுக்கு வந்தாலும் பாரிஸ் பெர்பியூம்களின் வாசனையை நுகராமல், வாங்கி அநுபவிக்காமல் செல்வதில்லை. நம்மவர்களும் அதற்கு விதிவிலக்கல்ல. நமது வாழ்க்கைமுறை, சமையல் வாசனைகள் மற்றவர்களின் முகங்களைக் கோண வைக்காமல் பொது இடங்களிலும் வேலைத் தலங்களிலும் இதமான வாசனையோடு வலம்வர நமக்கேயான ரசனையோடு கூடிய தரமான Parfum களை உங்களுக்காக விசேடமாகத் தெரிவு செய்து வழங்குகின்றார்கள்.


அது மட்டுமா? இல்லவே இல்லை! இன்னமும் அதி முக்கியமான விடயம். ஆம்! தரமான தங்க நகைகளைத் தயாரித்து உத்தரவாதத்துடன் உங்களுக்கு வழங்கக்



காத்திருக்கிறார்கள் "ஈஸ்வரா" புடவை - நகை மாளிகையினர். இதில் என்ன விசேடம் என்று எண்ணுகின்றீர்களா? நீங்கள் ஈஸ்வராவில் தயாரித்துப் பெற்றுக்கொள்ளும் நகைகளுடன் பெறுமதியான பரிசுப் பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்.







# ஜே.என்.டிக்ஸிற்றின் வாக்குமூலம் 3

'அசைன்மென்ட் கொழும்பு' என்ற நூலில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டது.

## கொழும்பு பயணம்

சிறீலங்கா அரசாங்கம் அதன் தீர்மானங்களை உடனுக்குடன் நிறைவேற்றியது. நான் கொழும்பிற்கு 26 வைகாசி மாதம் மாலை 5.00 மணிக்குப் போய்ச்சேர்ந்தேன். சென்னையில் இருந்து சிறீலங்கா வெளியுறவு மந்திரி திரு.A.C.S கமீட்டை நான் அதே இரவு 8 மணிக்குச் சந்திக்க இருந்தேன். நான் வெளியுறவுத் தூதுவர் பணியகத்திற்குச் சென்று எனது உத்தியோகபூர்வ ஆவணங்களைச் சமர்ப்பித்து, பின் அரைமணி நேரமாக திரு. கமீட்டுடன் பேச்சுக்களை நடாத்தினேன். அவர், 'நான் சிறீலங்கா இந்திய உறவுகளில் உள்ள அரசியல் நோக்கின், ஓர் கடுமையான கட்டத்தில் வந்துள்ளேன்' என்று கூறினார். சிறீலங்கா ஓர் நல்ல திடகாத்திரமான முடிவைக்கொடுக்க, புதிய இந்தியப்பிரதம மந்திரிக்கு விருப்பமுண்டு என்பதையும் தெளிவுபடுத்தினார். இதன் காரணமாகவே சிறீலங்கா ஜனாதிபதி, சிறீலங்கா அரசின் அதிகாரிகளுடனும், சிறீலங்கா தமிழர் குழுக்களுடனும் 1977/78 தொடக்கம் எதிரொலித்துக் கொண்டிருக்கும் துரதிர்ஷ்டவசமான நிலையிலும் கூட முதல்முறையாக இக்கூட்டத்தைக் கூட்டினார்.



நான் அவருக்குக் கூறினேன், 'இந்தியாவுக்கு, சிறீலங்காவில் எவ்வித கெட்ட எண்ணங்களோ, அபிப்பிராய பேதங்களோ இல்லை. இந்தியா, சிறீலங்காவில் தற்பொழுது ஏற்பட்டுள்ள இன விரோதச் சிக்கலை, ஒருவருக்கும் பாதிப்பின்றி, சுமூக நிலையில் தீர்த்துவைக்க முயல்கின்றது' என்று.

திரு. ஜெயவர்த்தனா எனது உத்தியோகபூர்வ ஆவணங்களை அடுத்தநாள் சமர்ப்பிக்கும்படி வேண்டினார். ஓர் சிறு வைபவம் ஒன்று ஜனாதிபதி மாளிகையில் அடுத்தநாள் காலை 9.30 மணிக்கு நடைபெற்றது. அந்தக் காலத்தில் ஆங்கிலேய ஜனாதிபதிகள் வசித்து வந்த 'சிறீலங்காவில் உள்ள ஆங்கிலேய ஜனாதிபதிகள் மாளிகையில்' வரவேற்பு மண்டபத்தில் திரு. J.R ஜெயவர்த்தனா, சிறீலங்கா தேசிய உடையுடன் என்னை உத்தியோகபூர்வமாக வரவேற்றார். அதன்பின் எனது உத்தியோக பூர்வ ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. எம் இருவரது உரைகளும் பரிமாறப்பட்டது. இவ் வைபவம் முடிகின்ற சமயத்தில் நான் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தினேன்: வெளியுறவு திரு பண்டாரி அவர்கள் அடுத்தநாள் மாலை 4 மணிக்கு ஓர் பிரத்தியேக விமானத்தில் கொழும்பு வருகின்றார் என. இவ் விஜயத்தின் முக்கிய குறிக்கோள் யாதெனில், இலங்கை அரசாங்கத்தையும் தமிழ் குழுக்களையும் நேரில் வைத்து ஓர் சமரசத்தீர்வை எடுப்பதற்கு ஓர் உகந்த நிலை என்பதேயாகும். இக் கூட்டத்தின் பட்டியலை திரு. சக்சன், திரு J.R ஜெயவர்த்தனாவிற்குக் காட்டியுள்ளார். R.A.W, J.R.J உடைய காரியதரிசிகள் இதை அங்கீகாரம் செய்துள்ளனர். திரு பண்டாரி அவர்கள் இக்கூட்டத்தின் பெறுபேறுகளை சிறீலங்கா ஜனாதிபதிக்கு அறிவித்ததன் பிற்பாடு ஆனி, 1-ம் திகதி, சிறீலங்கா ஜனாதிபதி, திரு ராஜீவ் காந்தியை, இந்தியா (டெல்கி) வில் உத்தியோக பூர்வமாகச் சந்திக்க அழைப்பிதழை அனுப்பவேண்டும். திரு ஜெயவர்த்தனா அவர்கள், 'தற்பொழுது ராஜீவ் காந்தி அவர்களால் எடுக்கப்படும் இவ் அரிய முக்கிய பணி, இந்தியாவின் முன்னைய விரிசலை அழித்து, ஓர் நல்ல எதிர்காலத்தை உண்டுபண்ணும்' எனக் கூறினார்.

நானும் வழக்கமான பாணியில் ஓர் விருந்து உபசாரம் கொடுத்தேன்.

நான் சிறீலங்கா அரசாங்கப் பிரமுகர்களுக்கும், தமிழ்க் கட்சிகள் பிரமுகர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பியிருந்த போதிலும், எமது வைபவத்திற்குத் தமிழ் கட்சிப்பிரமுகர்கள் கூடுதலாக விஜயம் செய்தது குறிப்பிடத்தக்கது. சிறீலங்கா வெளிநாட்டு சேவைக் காரியாலயத்தைச் சேர்ந்த பொறுப்பதிகாரி திரு. மகேந்திரனும், வேறு சேவையில் உள்ள பழைய தமிழ் உத்தியோகஸ்தர்களும் பிரசன்னமாக இருந்தார்கள். அத்துடன் 5 அல்லது 6 அரசியற்கட்சி ஆதரவாளர்களும் இருந்தார்கள். எனது சிங்கள நண்பர் எனக்கு நகைச்சுவையுடன் கூறினார். எதுவாக இருப்பினும் 'இந்தியா தமிழ்ப் பயங்கரவாதிகளுக்கு உதவுகின்றது. அதேபோல் உங்கள் விருந்தினராக தமிழர்கள்தான் கூடவருகை தந்திருக்கின்றார்கள். ஆகவே உங்களுடன் சிறீலங்கா அரசு கவனமாகத்தான் இருக்கவேண்டும்' என்று சொல்லிச் சிரிக்க வைத்து மகிழ்ந்தார்.

எமது கொழும்பு வெளிநாட்டுத் தூதுவரது வதிவகம், ஓர் விசாலமான ஆறு படுக்கைகள் கொண்ட அறைகளையும், ஓர் வரவேற்பு மண்டபம் கீழ்மாடியிலும் ஓர் ஏக்கர் பூந்தோட்டங்களையும் கொண்ட விசாலமான வீடு, வளவு ஆகும். வீட்டுக் கூரைக்குச் சிவப்பு நிற ஓடுகள் பதித்து, ஆங்கிலேயரது ஓவியக்கலைகளினால் பிணைக்கப்பட்டுள்ளது. திருவாளர் V.V கிரி, இந்திய வெளிநாட்டுத் தூதுவராக சிறீலங்காவில் இருந்தபோது, நாட்டப்பட்ட அசோகா மரங்களும் ஆலமரங்களும் மேலும் அவ்விடத்திற்கு அழகு செய்கின்றது. அவ் இடத்தின் சூழல் மிக அமைதியாகவும் அழகாகவும் இருந்தவண்ணமே இப்பொழுதும் இருக்கின்றது. வைபவம் முடிந்த பிற்பாடு சகலரும் விடைபெற்றுச் செல்கின்ற பொழுது, தென்னிலங்கையில் ஓர் சீனித்தொழிற்சாலையில் (தனியாரது) பணிபுரியும் ஓர் இந்தியன் சிவில் எஞ்சினியர் என் முன் விடைபெற வந்தார். அவர் பின் வருமாறு எனது கைகளைப் பிடித்துக்கூறினார்: 'நான் சிறீலங்கா வந்து மூன்று வருடங்கள் ஆகின்றன. இப்போது நீங்கள் ஓர் நல்ல காலகட்டத்தை எய்தியுள்ளீர்கள். எனினும் சீனர்கள் கூறுவது போன்று நல்ல காலத்திலும் பிரச்சினைகள் வடிவெடுப்பதும் வழமை. நல்ல அதிர்ஷ்டம் உங்களுக்குக் கிடைக்கட்டும்' என வாழ்த்திச் சென்றார். அவரின் வாழ்த்துப்படி, எனது நீண்டகால வெளிநாட்டுச் சேவையில், இலங்கையில் பற்பல சூழ்நிலைகளைச் சந்தித்தபோதும் எனது வாழ்க்கை மிகவும் ஆர்வம்மிக்கதாயும் சந்தோசமானதாயும் இருந்தது என்பது உண்மையேயாகும்.

(வளரும்)

தொகுப்பு:
சி.சொக்கநாதன் பிரான்ஸ்

# தமிழர் நடந்த பாதை

9

## ஏற்கப்படாத மறைக்கப்பட்ட வரலாறே தமிழர் வரலாறு!

பேரா.கு.அரசேந்திரன்

ஆங்கிலம் உள்ளிட்ட மேலை மொழிகளில் ஏராளமான தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளன. திரவிட மொழிகட்கு மூலமாகத் தாயாக உள்ள தமிழ்மொழி, வடஇந்திய மொழிகட்கும் இந்தி, சமற்கிருதம், சிங்களம் போன்ற கீழை ஆரிய மொழிகட்கும் அடி ஊற்றாக அமைந்துள்ளது. இதற்கும் மேலாக இலத்தீன், கிரேக்கம் போன்ற மேலை ஆரிய மொழிகளின் வளர்ச்சிக்கும் தமிழ் ஆற்றிய பங்கு அளப்பரிது.

இமயம்வரை தமிழினம் பரவிய காரணத்தால் இந்திய மொழிகட்குத் தமிழ் அடிப்படையாயிருப்பதில் வியப்பில்லை. ஆனால் மேலை ஆரிய மொழிகட்குத் தமிழ் எதன் அடிப்படையில் மூலமாக முதலாகத் திகழ முடியும் என்று ஐயம் எழுவது இயல்பே.

வரலாற்றில் தொன்முது காலத்தில் குமரிக் கண்டத்தில் தோன்றிய தமிழர் தம் தமிழைப் பேசிக்கொண்டு இந்தியப் பகுதி முழுவதும் பரவி வாழ்ந்ததுடன் மட்டுமல்லாமல், இந்தியாவிற்கு வடமேற்காகக் கிளம்பி மைய ஆசியாவரை சென்றுள்ளனர். மைய ஆசியாவில் சென்று புகுந்த தமிழர் பேசிய தமிழே ஆரியமாகத் திரிந்தது. இது உண்மையே என்பதைத் தமிழுக்கும் மேலை ஆரிய மொழிகட்கும் உள்ள உறவை நாம் விளக்கப்போகும் பகுதியில் காணலாம்.

ஆரிய மொழிகட்கு அதுவும் மேலை ஆரிய மொழிகட்குத் தமிழ் வேராக உள்ளதென்ற உண்மையை அறிஞர் உலகம் ஏற்பதில்லை. தமிழ் ஆய்வை நாம் உரிமை பெற்ற தமிழ் மண்ணில் இருந்து நிகழ்த்தும்போதுதான் இக்கருத்துக்கு மேலை உலகமும் ஏனைய உலகமும் செவிசாய்க்கும். இவை ஒருபுறம் இருக்க, நாம் இங்கு சொல்ல வந்தது 'வேறொரு வகையிலான கீழை மேலை உறவு' பற்றியதாகும்.

தமிழர் கி.மு. 5000 தொடங்கி மேலை உலகுடன் வணிகம் நடத்தியுள்ளனர். அதன் காரணமாக மிகப்பல தமிழ்ச் சொற்கள் முதுபெரும் மேலை மொழிகளில் கலப்பதாயிற்று. இதன் வழியாகவும் ஆங்கிலம் போன்ற மேலை மொழிகளில் பல தமிழ்ச் சொற்கள் உருமாறிக் கலந்திருக்கின்றன. கீழை மேலை ஆரிய மொழிகட்கும் தமிழ் வேராக இருப்பதை ஒத்துக் கொள்ளாத மேலை அறிஞர் உலகம், வரலாற்றில் நடந்த அகப்புறச்சான்றுகளால் தொட்டுப் பார்க்கக்கூடிய பகுதியைப் பற்றிக் கூட வாய்திறப்பதில்லை. இதுவே தமிழர் வரலாற்றை இருட்டடிப்புச் செய்வதில் முதன்மையானதாகும்.

தமிழர் வரலாற்றை எழுதிய ஆசிரியர்களில் ஓரளவு நேர்மையைக் கடைப்பிடித்தவர் பி.டி சீனிவாசஐயங்கார், தமிழரின் வணிகம் பற்றித் தம் 'தமிழர் வரலாறு' என்ற நூலில் எழுதும் ஐயங்கார் ஓரிடத்தில் 'தமிழரின் அயல் உலகத் தொடர்பால் சொற்கள் பல மேலை உலக மொழிகட்குள் சென்று புகுந்தன' என்று உரைத்தார். 'உலகப் பெருநாடுகட்கு இடையிலான விரிவான வணிகப் போக்குவரத்தின் ஒரு விளைவு, தென்னாட்டு வணிகப் பண்டங்களின் தமிழ்ப் பெயர்கள் கிரேக்க பழங்குடியினரின் தூய கிரேக்க மொழியால் கடன்வாங்கப்பட்டன' என்பது ஐயங்கார் கூற்று.

சீனிவாச ஐயங்கார் மேற்சொன்ன கருத்திற்குச் சான்று உரைக்கையில் அரிசி - Oryza வாகவும், கருவாய்ப்பட்டை Karpian ஆகவும், இஞ்சி வேர் Ziggiberos ஆகவும் திப்பிலி அல்லது பிப்பிலி Peperi ஆகவும், வைடூரியம் Beryllos ஆகவும் கிரேக்கம் புகுந்ததைச் சுட்டிக்காட்டினார்.

தமிழர் வரலாற்றை எழுதிய பேரறிஞர்களில் குறிப்பிடத்தக்க வேறொருவர் கே.ஏ. நீலகண்ட சாத்திரியார். இவரின் ஆய்வு நேர்மையைப் பற்றிப் பாவாணர் பின் வருமாறு கூறுவார்' சாத்திரியார் மிகப்பெரிய அறிஞரே ஆயினும் ஆரியரைப் பற்றி எழுதும்போது துரும்பைத் தூணாக்குவார். தமிழரைப் பற்றி எழுதும்போது தூணைத் துரும்பாக்குவார்.'

மேற்சொன்ன போக்குடைய சாத்திரியாரே, தமிழரின் அயல் உலக வணிகம்பற்றி எழுதியபோது 'தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதியான பொருள்களின் பெயர்கள் எல்லாம் வடமொழிப் பெயர்களாக இல்லாமல் எல்லாம் தமிழாகவே இருந்தன' என்றார்.

சீனிவாச ஐயங்காரும் நீலகண்ட சாத்திரியாரும் தெரிவிக்கும் தமிழர் பண்டங்களின் பெயர்கள் மேலை உலகின் மொழிகளில் புழங்குவது உண்மையே என்றாலும் அவற்றை மேலை உலகம் தமிழ் என்று இன்று சொல்கிறதா? தமிழர்கள் கி.மு. வின் சில ஆயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே மேலை உலகின் மூத்த நாகரிகம் பெற்ற அரசுகளோடு வணிகம் செய்தவர்கள் என்ற உண்மையைத் தெரிவிக்கும் சான்றுகளாகவே இச்சொற்கள் திகழ்கின்றன என்று மேலை உலகம் தம் ஆய்வில் குறிக்கின்றதா?

ஆங்கில வேர்ச்சொல் அகராதி வரைந்த கீற்று, ஆனியன் ஆகிய அறிஞர் பெருமக்களும் ஆக்சுபோர்டு ஆங்கிலப் பேரகராதி வரைந்த அறிஞர் பெருமக்களும் தங்கள் நூல்களில் நன்றாக உலகிற்குத் தெரிந்த தமிழ்ச் சொற்களைக் கூடத் தமிழ் என்று எழுதுவதில்லை. Navy, Anchor போன்ற நாவாய், நங்கூரம் என்ற தமிழின் திரிபே. ஆனால் மறந்தும் இச்சொல் வரலாறு எழுதும்போது மேலைய மேலையறிஞர்கள் தமிழை நினைப்பதில்லை; தமிழை இணைப்பதில்லை.

கி.மு.வில் மேலை உலகிற்குத் தமிழகம் தந்த பண்டங்களுள் அரிசி, இஞ்சிவேர், மிளகு என்பன குறிப்பிடத்தக்கன. இன்னும் பல பொருள்களும் உண்டென்றாலும் இம் மூன்றையும் எடுத்துக்கொண்டு இவை மேலை ஆரிய மொழிகளில் திரிந்து வழங்குவதை ஆங்கில நூல்கள் வழியாகவே காண்போம். பல்வேறு மொழிகளில் மேலைய மூன்று சொற்களும் பல்வேறு திரிபுகளில் வழங்குவதை சி.டி. ஆனியன், கிற்று ஆகிய வேர்ச்சொல் அறிஞர்களும் ஆக்சுபோர்டு ஆங்கில அகராதியும் குறிப்பிடுவனவே கீழ்வரும் பட்டியல். ஆனால் இவற்றில் எவ்விடத்தும் இவை தமிழ் என்பதற்கான பதிவு காட்டப்படவே இல்லை.

**அரிசி Rice:**
Gr(கிரேக்கம்)oruza also orizon
Lat (இலத்தீன்) Oryza
Rom (உரோம்) Orizum
Mlg (Middle Low German) -Ris
Mlg (Middle High German) -Ris
Du (dutch)rijst
G(German)reis
Sw(Swedish)
Da.(Danish) -Ris
Sp.(Spanish) -arroz
Pg (portuguese) -arroz
Arab:ar rozz,Uruzz
M.E (Middle eng) rys
O.f (old french)ris
Mod. french riz
it.risu
Pr.(Provencal) ris
Eng: rice
Oldpers-ris
Afghan-Wrijzey
- Wrijey
- Wrijzah

**இஞ்சிவேர் Ginger**
ME gingivere (middle eng)
O.E (old eng) Gingiferce gingiber
which was Directly Medl)
O.F. (old French)-gingi (m) bre
Modern french-gin gember
Pr(provencal) -gingevere
Cat(Catalan) (a) gengibre
sp(Spanish) jenjibre
pg(Portuguese)-gengivre
Oit,(old italian) Gengiovo zenzavero
Mod-zenzeru
Rum(Rumanian) ghimber

medl (mediaeval latin)gingiber
zingeber
Russ(Russian)-imbir
inbir
L(Latin)zingiber(i)
Gr(greek) ziggiberris
prakrit-singebera
skt-cringaveram
Arab-zanjavil
Rum-zinzifil (Rumania)
Serb(serbian)-azenzefil
MHG(middle high german)-ingewer
G(Germaan ingwers

**திப்பிலி, பிப்பிலி Pepper**
OE Piper. pipor
Ofris (old frisian)piper
os-(old saxon)-pipari. pepar
du.peper
OHG Pfeffer
G-pfeffer
W.Germ
on -piparr
L.piper
Or.peivre
modfr.povre
pr/pobre
it pepe
OSI (old slavorici -piplru
Gr.Peperi
Ski pippali
ME.Piper peper
F Popper

(வளரும்)

## நோயற்ற வாழ்வே...

# சர்க்கரை நோய்

சர்க்கரை நோயின் காரணமாக இரத்தத்தில் அதிகமான அளவில் கலந்திருக்கும் சர்க்கரை நாளடைவில் சிறுநீரகத்தின் திசுக்களைப் பாதிப்பிற்கு உள்ளாக்குகின்றது. சிறுநீரில் கலந்து வெளிவரும் புரதச்சத்துப் போன்ற முக்கிய சத்துப் பொருட்களை, சிறுநீரகத்தில் காணப்படும் வடிகட்டிகள் போன்ற அமைப்பு பிரித்தெடுத்து நமது உடலின் உள்ளே மீண்டும் அனுப்பி வைக்கிறது. சிறுநீரகப் பாதிப்பின் போது இந்த வடிகட்டிகள் போன்ற அமைப்பின் திசுக்கள் பாதிக்கப்படுகின்றன. இதனால் உடலுக்குத் தேவையான புரதச்சத்தும் சிறுநீருடன் கலந்து வெளியேறுகின்றது. புரதச்சத்துக் குறைவினால் உடலில் பல்வேறு பக்க விளைவுகள் ஏற்படுகின்றன. நாளடைவில் சிறுநீரகத்திற்கு வரும் இரத்தக் குழாய்களும் பாதிக்கப்பட்டு அவை சுருங்கத் தொடங்குகின்றன. இதன் காரணமாக சிறுநீரகத்திற்கு வரும் இரத்தத்தின் அளவு குறைகின்றது. ஏற்கனவே பாதிக்கப்பட்ட சிறுநீரக திசுக்கள் இரத்த ஒட்டக் குறைவினால் முற்றிலும் செயல் இழக்கும் நிலையை அடைகின்றன. பல சர்க்கரை நோயாளிகள் முற்றிய சிறுநீரக செயல் இழப்பின் அறிகுறிகள் தென்பட்ட பிறகுதான் சிறுநீரக மருத்துவத்தை நாடுகின்றனர். இது, கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போல் தான். சிறுநீரகப் பாதிப்பு ஏற்படக்கூடிய வாய்ப்புக்களை பல சமயங்களில், நமது உடல்வெளிப்படுத்தும் வேறு எச்சரிக்கைகள் மூலம் தெரிந்து கொள்ளலாம். இதில் கண் பார்வை குறைவு ஏற்படுவது ஒரு முக்கிய அறிகுறியாகும். எனவே சர்க்கரை நோயாளிகள் கண் பார்வைக் குறைவுக்காக சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்பட்டால் உடனே சிறுநீரக செயல் திறனுக்குரிய பரிசோதனைகளையும் மேற்கொள்ள வேண்டும். இது போல திடீரென ஏற்படும் உயர் இரத்த அழுத்தக் குறைபாட்டையும் சிறுநீரகப் பாதிப்பிற்கான எச்சரிக்கையாகக் கொண்டு பரிசோதனைகள் செய்ய வேண்டும். சிறுநீரக பாதிப்பு உறுதியானால் அதிக கவனம் செலுத்தி இரத்த அழுத்தத்தை கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வருவது மிக அவசியமாகும். மேலும் சிறுநீரக பாதிப்படைந்த சர்க்கரை நோயாளிகளின் சிறுநீரகங்களில் ஏற்படும் வடிகட்டும் திறன் கோளாறினால் இவர்களுக்கு அளிக்கப்படும் சர்க்கரை நோய்க்கான மருந்துகள் அதிக நேரம் இரத்தத்தில் தங்குகின்றன. இதனால் இந் நோயாளிகளுக்கு சர்க்கரை நோய்க்கான மருந்தின் தேவை குறைகின்றது. தொடர்ந்து சர்க்கரை நோய் மருந்தின் தேவை குறைவதும் சிறு நீரக பாதிப்பின் அறிகுறியாக இருக்கலாம். இந் நிலையில் சர்க்கரை நோய் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டது போல் என நினைத்து சந்தோசப்படாமல் உடனடியாக சிறுநீரகச் செயல்த் திறன்பரிசோதனைகளைச் செய்து கொள்வது சிறந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அமையும்.

### உணவு முறை

பொதுவாக, சிறுநீரகத்தின்செயல் திறன் பாதிக்கப்படும் பொழுது உடலில் நீர்த்தேக்கம் ஏற்பட்டு உடல் வீக்கம் காணப்படும். இது போன்ற சமயங்களில் உணவில் எடுத்துக் கொள்ளும் திரவ ஆகாரங்கள், தண்ணீர் மற்றும் உப்பின் அளவினை மருத்துவர் ஆலோசனையின்படி குறைத்துக் கொள்ள வேண்டும். சாதாரணமாக சர்க்கரை நோயாளிகள் குறைவான மாச்சத்து, அதிக புரதச்சத்துள்ள உணவு முறையினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். இதற்காக கடலை, பயறு, அசைவ உணவு வகைகள், புரதச்சத்துப் பானங்கள் ஆகியவை சர்க்கரை நோயாளிகளின் தினசரி உணவுப்பட்டியலில் இடம் பெறுகின்றன. ஆனால் சர்க்கரை நோயினால் சிறு நீரகப்பாதிப்பு ஏற்பட்ட பின் இந்த உணவு முறை உகந்தது அல்ல. இதற்குப் பதிலாக குறைவான புரதச் சத்து, அதிக மாவுச் சத்து உள்ள உணவு முறையைமேற்கொள்ள வேண்டும். இது சிறு நீரகத்தின் வேலைப் பளுவை குறைக்கின்றது.

தோல் நோய் வராமல் தடுப்பது எப்படி.

தினசரி இரண்டு வேளையும் குளியுங்கள்.

குளியல் சோப்பை அடிக்கடி மாற்றாதீர்கள்.

இறுக்கமான உள்ளாடைகள், ஈரமான உள்ளாடைகளை கண்டிப்பாகத் தவிர்த்து விடுங்கள்

பிறருடைய ஆடைகளை, காலணிகளை உபயோகிக்காதீர்கள்.

தினமும் வியர்வை சிந்த உழைப்பது நல்லது. அல்லது உடற்பயிற்சி செய்வது அவசியம்.

தலைமுடியையும், நகங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்.

மன இறுக்கமில்லாமல் மகிழ்ச்சியாக இருக்கவும். எதையும் சமாளிக்கலாம் என்ற நம்பிக்கையுடன் வாழக் கற்றுக் கொள்ளுங்கள்.

### இரத்தக் கொதிப்பிற்கு வாழைப்பழம் சிறந்தது!

தினமும் இரண்டு வாழைப்பழங்களை உண்டு வந்தால் இரத்தக் கொதிப்பு ஏற்படாதாம். இதனை மணிபாலில் உள்ள கஸ்தூரிபா மெடிக் கல்லூரியில் செய்த ஆய்வு வெளிப்படுத்துகிறது. தற்சமயம் AGE Inhibitors என்கிற Enalaoril-Envas மருந்துகளைக் கொடுக்கிறார்கள். இந்த மருந்து வாழைப்பழத்தில் உள்ளது. பூவன் பழம் மிகச் சிறந்தது என்கிறார்கள்! மேலும் வாழைப்பழத்தில் உள்ளது Captopril போல இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

### தினம் ஒரு பூண்டு

தினம் ஒரு அரைப் பூண்டினை இலை வகைகளுடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் குடல், மலக்குடல் புற்று வராமல் தடுக்கிறது. இதயநோய் வராமல் தடுக்கும் ஆற்றலும் பூண்டிற்கு உண்டு. இதில் உள்ள 'டயலில் டைசல்பைடு' தான் புற்று நோய்க்கு எதிராக செயல்படுகிறது. பூண்டை சமைத்து உண்பதைவிட 'அப்படியே' சாப்பிடுவது நல்லது.

*நன்றி: உங்கள் நலம்*

## காலத்தைப் பதிவுசெய்து மாயோன் எழுதுவது

# நாலுபேருக்கு நல்லதென்றால்...

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

அவ்வாறு அறைந்துவிட்டால் பயங்கரவாதி என்று சொல்கிறாயா? சொல்—பாதகமில்லை.

ஒரு இனம், பெயர் சொல்லத்தக்க ஒரு இனம். வெளிப்படையாகத் தன்மானத்துடனும், கௌரவத்துடனும் கூடிய ஒரு இனம் மிகவும் அவமானப் படுத்தப்படுகையில், அதனைச் சகித்துக்கொண்டு போவதுதானா நீதி? அது தானா நியாயம்?

இல்லையென்று ஒருவர் கிளர்ந்தெழுகையில், அவர் பயங்கரவாதி —அப்படித்தானா உலகநீதி —அதுதான் உலக நீதியெனில், பாதகமில்லை, இருந்துவிட்டுப்போகட்டும் 'இந்தப்புது உலக நீதி.'

எங்கள் வளங்கள் அழிபடுகின்றன. எங்கள் வாழ்வு சிதைபடுகின்றது. போக்கிடமில்லாது நாம் தவிக்கின்றோம். இருப்பிடமில்லாது நாம் துடிக்கின்றோம். இந்த நிலையில் இது என்ன கொடுமை என்று ஒருவன் வெகுண்டெழுந்தால்.... வேலெடுத்துக்களம் புகுந்தால்....

அவன் பயங்கரவாதி— தனி நபர் பயங்கரவாதி — இவன் எவ்வாறு இங்ஙனம் செய்யலாம். இவனால் உலகம் இந்த விதமாய் பயங்கரவாதத்துக்குள்ளாகின்றது என்று தொடர்புச் சாதனங்கள் கதறலாம்.

கதறட்டுமே-யார் அதனைக் காதில் எடுத்துக்கொள்ளப்போகின்றனர். நீதி புரிந்தோர்-நியாயம் தெரிந்தோர்-இந்த நெஞ்சாரம் மிக்க செயலைத் தெரிந்தே கொள்வர்.

வன்முறை மீது காதல்கொண்ட மனநோயாளிகள் அல்லர் நாம். அரச பயங்கரவாத வன்முறை எம்மீது திணிக்கப்படுகின்றது.

வன்முறையை வன்முறையில் எதிர்கொள்ளல் எங்ஙனம் பயங்கரவாதம் ஆகிடும்.

அரச பயங்கரவாதம் வன்முறையைத் திணிக்கும்போது நாம் கைகட்டி, வாய் பொத்தி பாராமுகமாய் நிற்கவேண்டுமா?

அப்படி நின்றோமே — நின்றபோதும் ஏதும் கொடுமைகள் குறைந்ததா? இன்னும் கூடிக் கூடிச் சென்றதல்லவா?

எந்தவிதமாய் எங்கள் வாழ்வு இம்சைக்குள்ளாகவில்லை? எந்தக் கணத்திலேனும் சிரித்தபடி வாழமுடிகிறதா? இறுகிப்போன முகங்களை அல்லவா நாம் தாங்கி நிற்கிறோம். இரந்துபெற்ற உயிர் அல்லவா இப்போது எம்மிடம் இருக்கிறது.

நாம் நடந்து திரிகையில் புல் நசிந்துபோகவில்லை, எம் கால்நசிப்பில் எறும்போ வேறெந்தச் சிறு பிராணியோ இறந்து போகவில்லை. அத்தனை மென்மையான வாழ்வு எங்களுடையது.

மேன்மையான வாழ்வும் நாம் வாழ்ந்திருந்தோம். புல் அல்ல, புழு அல்ல எந்தச் சிறு உயிரும், எம் இம்சையினால் அழிந்துபோக நாம் அனுமதித்ததில்லை.

இன்னும் சொல்லப்போனால், எம் மூச்சுக்காற்றுப் பட்டே மலர்களும் மலர்கின்றன. எம் காலடி அதிர்வுகண்டே கடலும் தளும்புகின்றது.

**இந்த ஊரோடும் உலகோடும் உயிர்ப்புடன் நாம் வாழ்கின்றோம். 'மண்ணின் வேரோடும், விழுதுவிட்ட வாழ்வோடும் பிணைப்புடன் நாம் உயிர்க்கின்றோம்.**

அத்தனையும் அள்ளி எறியப்பட்டதென்றால்

அத்தனையும் அவலமாய் வீசப்பட்டதென்றால்,

அத்தனைக்கும் கொள்ளி வைபட்டதென்றால்,

அத்தனையும் கொளுத்தி எரிபட்டதென்றால்,

இத்தனையும் நாம் பொறுத்து, இனியும் சும்மா இருக்க வேண்டுமா? இத்தனைக்கும் ஏன் என்ற கேள்வி எழுப்பவேண்டாமா? இத்தனையும் எமக்கா நடந்தது என்று சினந்துகொள்ள வேண்டாமா? இத்தனையும் இனியும் நடக்க நாம் அனுமதிக்கப்போகிறோமா?

இல்லை என்ற பதில் சொன்னால், நாம் பயங்கரவாதியா? ஆகட்டும். அதனாலென்ன, இல்லை என்றபின் வேலெடுத்து, வாளெடுத்து, வில்லெடுத்துப் போர் புரிந்தால் பயங்கரவாதியா? பரவாயில்லை.

பயங்கரவாதிகளுக்கு நாம் பயங்கரவாதிகளாக இருக்கலாம். ஆயினும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நாம் போராளிகளாவோம்.

**அதுவே உன்னதம்.**
**அதுவே உயர்ந்த இலட்சியம்.**
**அதுவே உயரிய இலக்கு.**
**இல்லையா?**

அதற்குத் துணைபோகும் தொடர்புச் சாதனங்கள், முதலாளித்துவ நிறுவனங்கள், சமூக நல நிறுவனம் எனும் பெயரில் இயங்கும் சில அமைப்புக்கள்.

பயங்கரவாதம் என்பதற்கு பயங்கரமான வரையறையும் செய்து விடுவார்கள். ஆனால் இருக்கக்கூடிய ஒரே ஒரு பயங்கரவாதம்-அரச பயங்கரவாதமே.

அதனால்தான் அரச பயங்கரவாதம்-தன்னைக் காப்பாற்றிக்கொள்ள-தனக்கென்று பொலிஸ், இராணுவம் என்ற 'வெளிப்படையான' கூலிப்படைகளையும் 'மறைமுகமான' குண்டர் படைகளையும் கொண்டிருக்கின்றது.

இனவாதம் பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு மிகச் சரியான அமைப்பாக இருக்கின்றது.

அப்பொழுதுதான் நாம் மிகச் சரியான இடத்திற்கு வந்திருக்கின்றோம்-விடுதலைப்போரில் பயங்கரவாதம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

பலவீனங்கள் இருக்கலாம். பாதை தெளிவற்று இருக்கலாம். பயணத்திலும் தளர்ச்சி காணப்படலாம். நீண்ட நெடுந்தூரம் கடக்க வேண்டியதாக இருக்கலாம். 'ஆயினும் விடுதலைப் போரில் பயங்கரவாதம் என்ற விழல்ப் பேச்சுக்கே இடமில்லை.'

என்னை அடிக்கிறாய் நீ-ஒரு கன்னத்தில் அறைகிறாய்-மறு கன்னத்தையும் நான் காட்டவேண்டும் என்று எதிர்பார்ப்பது என்னவகையில் நியாயம்.

ஒரு கன்னத்தில் அறைந்தால் அறைந்தவனின் அதே கன்னத்தில் உன் விரல்களைப் பதி என்பதுதானே புதுமொழி!

# 'இந்து' இதழின் பத்திரிகை தர்ம விரோதப்போக்கு!

## மருத்துவர் இனியன் இளங்கோவன் அம்பலப்படுத்தினார்

தமிழ்நாட்டிலுள்ள சில பத்திரிகைகள் தொடர்ந்து பத்திரிகைத் தர்மத்திற்கு எதிராக செயல்பட்டு வருவதற்கு இந்தியப் பத்திரிக்கை கவுன்சில் கண்டனம் தெரிவித்து உள்ளது.

தமிழ் உணர்வாளர்களுக்கு எதிராக போடப்படும் பொய் வழக்குகள் பற்றி பரபரப்பான செய்திகளை வெளியிடும் பத்திரிகைகள், அந்த வழக்குகளில் குற்றம்சாட்டப்பட்டவர்களை நீதிமன்றம் விடுதலை செய்யும் செய்திகளை இருட்டடிப்புச் செய்வதை இந்திய பத்திரிகை கவுன்சிலின் பார்வைக்குத் தமிழ்நாட்டைச் சேர்ந்த மருத்துவரான இனியன் இளங்கோ என்னும் ஸ்ரீதர் கொண்டு வந்தார்.

### இது பற்றிய 'முழு விவரம் வருமாறு:

1997ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8ஆம் தேதி மருத்துவர் இனியன் இளங்கோ, சச்சிதானந்தம், ஈழவேந்தன் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மாலினி, பாண்டியன் மற்றும் பலர் க்யூ பிரிவு காவல்துறையினரால் திடீர் எனக் கைது செய்யப்பட்டனர். தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குத் தேவையான மருந்துகளை அனுப்புவது குறித்து இவர்கள் அனைவரும் கூடி சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. இந்தச் செய்தியை ஆங்கில இதழான இந்து உட்பட தமிழ்நாட்டின் முக்கிய பத்திரிகைகள் அனைத்தும் பரபரப்பாக வெளியிட்டன. காவல்துறை கூறிய பொய்யான குற்றச்சாட்டுகளுக்கு முக்கியத்துவம் அளித்த இந்தப் பத்திரிகைகள், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்புச் செய்திகளை வெளியிடுவதில் அக்கறை காட்டவில்லை. விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் ஈழத் தமிழர்களுக்கு எதிராகவும் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் வெறுப்புணர்வை வளர்க்கவேண்டும் என்ற நோக்கத்தில் பத்திரிகைகள் இந்தச் செய்தியை வெளியிட்டன. அதிலும் ஒரு மருத்துவர் என்ற முறையில் அவருடைய மனித நேயக் கடமையை இனியன் இளங்கோ செய்வதைக்கூட கொடிய குற்றமாக இந்தப் பத்திரிகைகள் சித்தரித்தன.

இந்த வழக்கு விசாரணையின்போது கூட அன்றாட நிகழ்ச்சிகளை விரிவாகவும் பக்கம் பக்கமாகவும் போட்டிபோட்டுக்கொண்டு இந்தப் பத்திரிகைகள் வெளியிட்டன. இந்து இதழ் இவ்விடயத்தில் முக்கிய பங்கு வகித்தது. ஆனால் இறுதியில் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை இந்து பத்திரிகை உட்பட எந்தப் பத்திரிகையும் வெளியிடவே இல்லை. இந்தத் தீர்ப்பில் மருத்துவர் இனியன் இளங்கோ, சதி நடைபெற்ற இடத்தில் இருந்தார் என்பதே ஐயத்திற்கு உரியது என்று கூறப்பட்டுள்ளது. மேலும் விடுதலைப் புலி என குற்றம் சாட்டப்பெற்ற பாண்டியன் என்பவர் அந்த அமைப்பின் உறுப்பினர் என்பதை காவல்துறை நிரூபிக்கவில்லை என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார் மேலும் குற்றம் சாட்டப்பட்ட சச்சிதானந்தம், ஈழவேந்தன், மாலினி உள்பட அனைவருமே குற்றமற்றவர்கள் என்று கூறி நீதிமன்றம் விடுதலை செய்தது.

ஆனால் இந்த வழக்கு பற்றி தொடக்கம் முதல் விரிவான செய்திகளை வெளியிட்டு வந்த பத்திரிகைகள், இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்ட போது அதை அடியோடு இருட்டடிப்பு செய்துவிட்டன. ஏனென்றால் க்யூ பிரிவு காவல்துறை தொடுத்த பொய்யான வழக்குக்கு இந்தப் பத்திரிகைகள் கொடுத்த முக்கியத்துவம் தவறானது என்றும் உள்நோக்கம் கொண்டது என்பதும் மக்கள் மத்தியில் அம்பலம் ஆகிவிடும் என்ற காரணத்தினால் நீதிமன்றத் தீர்ப்பையே இந்தப் பத்திரிகைகள் மூடிமறைத்து விட்டன.

நீதி மன்றத்தில் தானும் மற்றவர்களும் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபித்த மருத்துவர் இனியன் இளங்கோ, மேற்கண்ட பத்திரிகைகளின் முகமூடியைக் கிழித்து எறிவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளில் இறங்கினார்.

அகில இந்திய பத்திரிகைக் கவுன்சிலுக்கு இந்த வழக்கு பற்றி புகார் செய்தார். அந்த கவுன்சிலின் தலைவரான பி.பி. சாவந்த் சென்னை வந்தபோது அவரை நேரில் சந்தித்தும் முறையிட்டார். அவர் அளித்த ஆதாரங்களையெல்லாம் பார்வையிட்ட பத்திரிகை கவுன்சில் இந்து, தினத்தந்தி, தினமலர், மாலைமுரசு, மாலைமலர் ஆகிய பத்திரிகை ஆசிரியர்களுக்கு இது குறித்து ஒரு 'தாக்கீது' அனுப்பியது.

தங்களின் வஞ்சகமான போக்கு அம்பலமானதைக் கண்ட இந்து பத்திரிகை ஆகஸ்டு 24-ம் தேதி இதழில் வேறு வழியில்லாமல் இந்தத் தீர்ப்பை வெளியிட்டது.

தீர்ப்பு வெளியாகி ஓராண்டு காலத்திற்குப் பிறகு இந்தத் தீர்ப்பை இந்து வெளியிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது! அதிலும் இந்து இதழ் நாணயமாக நடந்து கொள்ளவில்லை. தீர்ப்பு கூறப்பட்ட நாளையே இருட்டடிப்பு செய்து இப்போதுதான் தீர்ப்பு கூறப்பட்டது போல செய்தியை வெளியிட்டுள்ளது. எந்தச் செய்தியையும் எப்படி வேண்டுமானாலும் திரித்துக் கூறலாம், இருட்டடிப்புச் செய்யலாம் என்ற இறுமாப்புடன் செயல்பட்டு வந்த இந்து போன்ற பத்திரிகைகளுக்கு தகுந்த பாடத்தினை மருத்துவர் இனியன் இளங்கோ தனி ஒருவராக இருந்து சாதித்துக் காட்டியிருப்பது பாராட்டத்தக்கது.

*நன்றி- தென்செய்தி*


ஜேர்மனி பொன் (Bonn) நகரில்

யாழ் ரவல்ஸ்

YARL TRAVELS

*Thomas Mann Str 21,53111 Bonn*



உலகின் எப்பாகங்களுக்கும் மலிவு விலையில்

பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்

சிறீலங்கா, இந்தியா, சிங்கப்பூர், கனடா

ஆகிய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.



தொலைபேசி இலக்கம்: 0228/9652885 – தொலைநகல்: 0228/9652985

GE-Pub.


# தொழில்வாய்ப்பும் பற்றாக்குறைக்கு எதிராக சுவிஸ் பிரதம மந்திரி காட்டும் சமிக்ஞை

## தஞ்சம் கோருகின்ற அகதிகள் இதனால் பாதிப்புக்குள்ளாவர்?

சுவிஸ் அரசு வேலை வாய்ப்புப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக தீர்மானித்துள்ள திட்டமானது 1-ம் திகதி செப்டெம்பர் மாதத்திற்குப் பின் அகதித் தஞ்சம் கோருகின்ற அகதிகளின் தொழில் வாய்ப்பினைப் பாதிப்பதாய் அமைகிறது. இவ்விடயமானது தற்காலிகமாய் தஞ்சம் கொடுக்க தீர்மானிக்க வேண்டியுள்ள வெளிநாட்டவருக்கான அனுமதிப்பத்திரமாகிய (Vorlaufig Aurgenommene) தற்காலிக அனுமதிப்பத்திரம் பெறும் அகதிகள் ஒரு வருடகாலத்திற்குத் தொழில் செய்வதற்கு தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்நாட்டில் தஞ்சம் கோரியுள்ள அகதிகள் இந்நாட்டின் வேலையில்லாப் பிரச்சினையை அதிகப்படுத்த காரணமாக அமையாத வகையிலேயே தீர்மானிக்கப்பட்டதென்று கடந்த 25-ம் திகதி ஆகஸ்ட் மாதம் சுவிஸ் நாட்டுப் பிரதமமந்திரிகளில் ஒருவரான - Ruth Metzler [ருத் மெட்ஸ்லர்] அகதிகள் தஞ்சம் கோரும் திணைக்களத்திற்கு அறியத்தந்துள்ளார்.

தற்போதைய நிலையில் கூடுதலான அகதித் தஞ்சப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற கொசோவோ நாட்டு அகதிகள், மூன்று தொடக்கம் ஆறுமாதகாலம்வரை வேலை அனுமதியின்றி இருக்கின்றனர். இதேவேளை வரையறுக்கப்பட்ட காலக்கெடு முடிந்தும் வேலை தேடி எடுக்க முடியாமலும் பலர் இருக்கின்றனர். கடந்த காலங்களிலும் பார்க்க தற்பொழுதைய நிலையில் குறைவாக இருக்கும் அகதிகள் தஞ்சக்கோரிக்கையானது எதிர்காலங்களில் கூடலாம் என்ற அச்சத்தின் பேரிலேயே இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதென்று கூறப்பட்டுள்ளது. எதிர்வருகின்ற இலையுதிர்காலத்தில் அகதிகளின் தஞ்சம் கோரும் எண்ணிக்கை கூடலாம் என்றும் அஞ்சப்படுகின்றது.

இதேவேளை இந்நாட்டில் தரப்படுகிற அகதிகள் தஞ்ச அனுமதியை துஸ்பிரயோகம் செய்யாமலும்; அதாவது தொழில் மூலம் சம்பாதிக்கும் குறிக்கோளை அகதிகள் தஞ்சக்கோரிக்கையின் மூலம் நிறைவேற்ற முயலுபவர்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும் இந்நடவடிக்கை உள்ளதென்று மேலும் அவர் கூறினார். இந்நடவடிக்கையை ஆதரித்து சுவிஸ்நாட்டு மாநிலங்கள் கூடுதலான ஆதரவைத் தந்துள்ளன.

### மற்றைய நாடுகளைப்போலவும்:

அகதிகள் தஞ்சக்கோரிக்கை சம்பந்தமான சட்டவிதி இல.9 இற்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்ற இந்நடவடிக்கையை உடனடியாக அமுல்ப்படுத்த சுவிஸ் அரசு அனுமதியளித்துள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட 9-ம் இலக்கச் சட்டமும், எதிர்வருகின்ற ஒக்டோபர் மாதத்தில் வெளிவரவிருக்கும் புதிய சட்டமும் உண்மையான அகதிகளின் சரியான தேவைகளைச் சீர்படுத்த உதவியளிக்கும். இவ்வகதிகளுக்கான வேலைத் தடையானது அவர்களது அடிப்படைத்தேவைகளைப் பாதிக்காத வகையில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் இந்த ஒரு வருடத்திற்கான வேலைத்தடையானது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஒரு வருடத்துக்கு மேலாகவும் கூட்டப்படலாம் என்றும் இத்தகைய வேலைத்தடை France, Sweden, Italy, Holland ஆகிய நாடுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுவருவதாயும் அறியத்தரப்பட்டுள்ளது.

அகதிகளுக்குவேலை வழங்காமையினால் அவர்கள் பாதிப்படையாமல் இருப்பதற்கான திட்ட வேலைகளும் நடைமுறைப்படுத்தப்படும். இவ்விடயமாய் கொசோவோ அகதிகளுக்காக 5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்பக்கட்டமாய் BBT நிறுவனம் இதற்கான பயிற்சித் திட்டத்திற்கு எதிர்வரும் நவம்பர் மாதம் தொடக்கம் பெப்ரவரி மர்தம்வரை 1000, தொடக்கம் 2000 வரையிலான அகதிகளை ஈடுபடுத்தவுள்ளது. 16 வாரங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இப்பயிற்சி வகுப்புகளுக்கு ஒவ்வொரு வாரந்தோறும் 25 மணித்தியாலங்கள் பயன்படுத்தப்படும். இந் நடவடிக்கைக்காக மட்டும் சுவிஸ் அரசு 2 மில்லியன் பிராங்குகளைச் செலவிடத் திட்டமிட்டுள்ளது.

*- ஜெ. சியாந்தி.*

உங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்கள், உடுப்பு வகைகள், வீடியோ பிரதிகள் மற்றும் அனைத்து தேவைகளுக்கும்,

அத்துடன்

வாகனசேவை, ஐங்கரன் வீடியோ பிரதிகளின் ஏக விநியோகஸ்தர்கள்

# கருமாரி SARL



Tel: 01 48 35 00 61

Fax: 01 48 35 00 84

V.S.V V.S.V



18.09.99
சனிக்கிழமை
16.51 முதல் 18.25 மணி
வரையுள்ள சுபமுகூர்த்த
வேளையில்
தொழில் அதிபர்
திரு. வெற்றிவேலு
ஜெயேந்திரன் (ஜெயா)
அவர்கள் திறந்துவைப்பார்.



12, Av Paul Vaillant Couturier
93120 La Courneuve

# பிரெஞ்சுப் புகலிடத்தில் தமிழ்

தாயகத்திலும் மற்றும் உலகெங்கிலும் பரவிவாழும் உற்றார் உறவினர்களுடன் நெருக்கமாக நம் சிறார்கள்-பேசி உறவாட வேண்டாமா?

ஆம், அவர்கள் தமிழ்ச்சோலைப் பள்ளிகளில் நம் மொழியையும், கலை பண்பாட்டையும், வரலாற்றையும் கற்கிறார்கள்.

பிரெஞ்சு மொழிப்புலத்தில் நம் வளரும் தலைமுறையினருக்கு 'தமிழ்' அடையாள அறிவூட்டலைத் தலையாய பணியாகக் கொண்டு உருவகம் பெற்றுள்ளது தமிழ்ச்சோலை. சுமார் 2½ வருட ஆரம்ப அனுபவம், இன்று 30 பள்ளிகளில் சுமார் 70 ஆசிரியர்களும் ஆயிரம் மாணவர்களுமாக கல்விப்பணியைத் தொடர்கின்றது.




தமிழ்ச்சோலையால் வெளியிடப்பட்ட தமிழ்நூல்

இதுவரையில் தமிழ்ச்சோலை விளம்பரப்படுத்தலில் அதிக ஆர்வம் காட்டியிருக்கவில்லை. சமூக ஆர்வலர்களும், தமிழ் ஆர்வலர்களும், தாராளர்களுமாக இணைந்து பள்ளி உருவாக்கலுக்கு அய



பாரிஸ்— 17 தமிழ்ச்சோலை முதலாம் ஆண்டுவிழா

ராது தொண்டாற்றி வருகின்றனர். மறுபுறம் துறைசார் அறிவு ஜீவிகள் தம் உழைப்பைநல்கி நம் வளரும் சந்ததியினருக்கு அறிவூட்டி வழிகாட்டுகின்றனர். பிரான்சில் எல்லோராலும் அறியப்பட்ட நிறுவனமாகி, ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் இணைந்து தம் கற்கை நெறியினைத் தொடரும் பணி இப்போது எம்முன் நிற்கின்றது. போதிய இடவசதி, மூலதனமின்மை, புலம்பெயர் சூழ்நிலைக்கு ஏற்றதான பாடவிதானமின்மையென- பல்வேறு குறைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் தன் முதலாவது பாடநூலை வெளியிட்டுள்ளது. இதுமட்டுமல்லாது 'எங்கள் தமிழ்ச்சோலை' என்ற முக்கால குழந்தைகள் இதழ் வெளிக் கொணர்ந்துள்ளது. தனித்தனியே சிறு பள்ளிகளாக இயங்கும் நிலையில் பொதுமைப்படுத்திய செயற்பாடுகளையும், கூட்டுறவுத்தன்மையை வெளிப்படுத்தும் வகையிலும் பொதுப்போட்டிகள், பொது அரங்கங்களிலெல்லாம் நம் சிறார்கள் தன் திறமையை வெளிக்காட்டத் தொடங்கியுள்ளார்கள். ஒவ்வொரு பள்ளிகளும் தம்மளவில் ஆண்டு விழாக்களை நடாத்தி வருகின்றன. இதன் அடுத்த விரிவாக்கமாக தமிழ்ச்சோலையின் ஒருங்




தமிழ்ச்சோலையின் ஆசிரியர் வழிகாட்டி நூல்

கிணைந்த வெளிப்பாடுகள் அரங்கம் காண விழைகின்றோம். முதல் அரங்கம் 17.10.99ல் நிகழ்த்தப்படவுள்ளது. அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் விரிவான வரவேற்பு நிகழ்வொன்றையும் நம் சிறார்கள் காட்டவுள்ளார்கள்.

புலம்பெயர் நாடொன்றில் வந்து குந்திய மூத்த தலைமுறை கடும் சுமைகளையெல்லாம் ஏற்றவர்கள். கண்ணைக்கட்டி காட்டில்விட்ட நிலையில் வந்திறங்கிய இவர்களின் அயராத உழைப்பு, தான் சார்ந்த உறவுகளையும், சமூகத்தையும் தென்பூட்டி, ஆறுதல் படுத்தியது என்



வில்லியே லு பெல்— கோணேஸ் தமிழ்ச்சோலை முதலாம் ஆண்டுவிழா

பதை யாராலும் மறுக்கமுடியாது. இப்போது இவர்களுடன் வருங்காலத்தலைமுறை முகம் பார்த்து ஏங்கி நிற்கிறது. என் செய்வோம்? தன் ஆணிவேர் பற்றிய உறவுநிலை புரியாதவர்களாகத் தவிக்கும் இந்த இளந் தலைமுறையினர் சாதனையாளர்களாகத் திகழ நாம் ஏணிகளாவோம்.

பிறக்கும் முன்பே அம்மாவின் வயிற்றிலிருந்து கேட்ட மொழி தாய் மொழி. அம்மா, அப்பா அறிமுகக் கொஞ்சலுடன் சூழலறிவைப் பெறத்தொடங்கும் குழந்தை நேசிக்கும் மொழி தாய்மொழி. வீட்டில் உறவாடும் மொழி. இம்மொழியை அறிதல், கூடுதல் தன்னம்பிக்கையை வளர்க்கும். உறவினர்களுடன் நேசபாவத்தை வெளிப்படுத்த வகைசெய்யும். வீட்டுமொழியும், சூழல் மொழியும் தெளிவாகக் கற்பதால் இரட்டை மொழி வல்லுநர்களாக இயல்பாகவே வளர்கின்றார்கள். இது அவர்களது திறமையை வளர்க்க மிகப் பெரிய வாய்ப்பாக அமைகிறது. இதற்கு வழிகோல பெற்றோரின் நேர வுசதியின்மையைக் கவனத்தில்கொண்டே எம் பள்ளிகள் உருவகம் பெற்றுள்ளன.

★ ஆரம்பக்கல்வி (4வயது முதல் 17 வயது வரை)

தொடக்கப் . பள்ளியிலிருந்து கல்வி இறுதியாண்டு BAC வரை புலம்பெயர் சூழலுக்கமைவாக இலகு முறையில் கற்பிக்கப்படும் தமிழ் பாடத் திட்டம்.

★ உயர்கல்வி (18 வயதின் மேல்)

விரிவான இலக்கண விளக்கமும், தமிழ் இலக்கிய வரலாறும் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்ட மேற்படிப்பு.

இப்போது , விரிவாக்கத்திட்டத்துடன் அனைவரது ஆதரவுகளையும் நாடி நிற்கிறது தமிழ்ச்சோலை. ■

புகலிட நாடுகளில் குடும்பத்தோடு சென்று, குடியுரிமை பெற்று வாழும் தமிழ்ச்சமூகம், 'இந்த நாட்டில் வாழ வந்துவிட்டோம். இந்நாட்டின் போக்கோடு ஒன்று கலந்துவிட வேண்டியதுதானே'என்று கருதி, தங்கள் பிள்ளைகட்கு ஆங்கில மயமான வாழ்க்கை முறையைக் கற்பிக்கின்றனர். இதனால் தங்கள் குழந்தைகளோடு தமிழில் பேசவோ, தமிழ்ப்பண்பாடு கலை, எதையும் கற்பிக்கவோ முற்படுவதில்லை.

இன்னும் சொல்லப்போனால் தங்கள் வீட்டில் இருக்கும்போதுகூட தங்கள் குழந்தைகளோடு தமிழில் பேசுவதற்கு பயிற்சி பெறுவதில்லை. தங்களை ஆங்கில மொழியாளர்களாகவே கருதி வாழ முனைகின்றனர். இதன் விளைவு பெற்றோர்கள் கண் முன்னாலேயே குழந்தைகள் தமிழ்மொழி, பண்பாடு, கலை, பழக்க வழக்கங்கள் ஏதுமறியாதவர்களாக வாழ்கின்றனர். அடுத்த சந்ததி தமிழர்கள் தமிழ் அறவே தெரியாத, வெறும் பெயர் தாங்கித் தமிழர்களாக வாழ நேரிடுகிறது. அதன்பின் அந்தச் சந்ததி தங்கள் மொழி வழி, இனவழி, தொடர்புகளை கலை–பண்பாட்டு தொடர்புகளை இழந்து நிற்க நேரிடுகிறது.

இந்நிலை ஏற்பட்டுவிடாமல் தடுப்பதிலும், தங்கள் குழந்தைகள் தமிழைக் கற்றுக்கொள்ளவும் கவனம் செலுத்தி வருபவர்கள் உலகெங்கும் பரவி அகதிகளாக வாழும் ஈழத் தமிழர்களே ஆவர். எந்நிலையிலும் ஈழத் தமிழ்ப் பெற்றோர்கள் தமிழ்ப்பண்பாட்டு அடிப்படையிலான பழக்க வழக்கங்களையே பேணி நடக்கின்றனர். இடையறாது தூண்டி துணை நிற்கின்றனர்.

ஒவ்வொரு சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் தமிழ் வகுப்புகளை நடாத்துகின்றனர். அடிக்கடி கலை நிகழ்ச்சிகளை நடாத்துகின்றனர். தமிழ் கற்பிப்பதற்காக இவர்கள் நடத்தும் தமிழ்ப் பள்ளிகள் பாரிசில் மட்டும் இருபதுக்குமேல் இயங்கி வருகின்றன.

**– மணவை முஸ்தபா**

நன்றி: தேவி

## புகலிட நிகழ்வுகள்

### டென்மார்க்கில்

# விடுதலை நாதம் 99

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இடம்பெயர்ந்த மக்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டங்களுக்கு உதவும் முகமாக 14.08.99 சனிக்கிழமை டென்மார்க்கிலுள்ள







முன்னணி இசைக் குழுக்களையும், பாடகர்களையும் ஒருங்கிணைத்து விடுதலை நாதம் 99 என்ற பெயரில் மாபெரும் இசை விழாவை மிகச் சிறப்பான முறையில் நடாத்தியுள்ளது. இவ் இசை விழாவை மாவீரர் குடும்பத்தைச் சார்ந்த செல்வன் அன்புமயில் விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

விடுதலை நாதம் 99 இல் யாழ் இசைக்குழு, லில்ல பெல்ட் இசைக்குழு, தமிழீழ இசைக் குழு என்பன கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

டென்மார்க்கிலுள்ள பிரபல பாடகர்கள் முதல் தடவையாக ஒன்றிணைந்து விடுதலைப் பாடல்களைப் பாடியது இங்கு குறிப்பிடத்தக்கது.

புலம்பெயர் சூழலுக்கேற்றவகையில் எம் தமிழ்மொழி அடையாள அறிவூட்டலை பாடத்திட்டமாக வரையும் கடமையில் தமிழ் ஆர்வலர்களும், சமூக ஆர்வலர்களும், ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இதன் முதற் கட்டமாக தமிழ்ச் சுவடி–1 வெளிவந்துவிட்டது. தொடரப்படும் அடுத்தகட்ட வேலைகள் முடிய சுமார் 2 வருடங்களாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகளுக்கான செலவீனங்களை ஈடுசெய்ய, எம் முகம் பார்த்து வளரும் நம் சிறார்களின் எதிர்கால நலன்களுக்காக அனைவரும் உளப்பூர்வமாக ஒருங்கிணைவோம்! செயற்படுவோம்!!

**தமிழ்ச்சோலை**

தலைமைப் பணியகம்
22, Rue perdonnet, 75010 Paris.
Tel: 01 40 37 68 68 - Fax: 01 40 37 64 64

நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்!
Notre langue maternelle est la racine de notre bien être!

**நல்வாய்ப்புக் குலுக்கல்**

பிரான்சு தமிழ்ச்சோலைப் பள்ளிகளின் வளர்ச்சிக்காக
Aidons nos enfantsà apprendre leur langue maternelle `Tamoul'

நல்வாய்ப்புக் குலுக்கல்


குலுக்கல் நாள்: 17.10.1999 ஞாயிறு
அன்பளிப்பு 10 Frs மட்டுமே

1er பரிசு: கணினி (Pentium-II Complet)
2e பரிசு: புகைப்படக் கருவி (Canon-N 500)
3e பரிசு: மின் இசைக்கோவை (Orgue-Casio)
4e பரிசு: நவீன தையல் இயந்திரம் (Singer)
5e பரிசு: உயர்தர துவிச்சக்கரவண்டி (Vélo Vtt)

தவிர 100 ஆறுதல் பரிசில்கள்

# சிங்கப்பூரில் மேற்கிந்தியத்தீவுகள் கொண்டாட்டம்

மேற்கிந்தியத்தீவுகள், இந்தியா, சிம்பாவே ஆகிய மூன்று நாடுகள் கலந்துகொண்ட கொக்கா கோலாகிண்ண ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் மேற்கிந்தியதீவுகளுக்கு ஒரே கொண்டாட்டம். இரு தெரிவுப்போட்டிகளிலும் வெற்றி பெற்ற தோடு இறுதியாட்டத்தில் இந்தியாவையும் மடக்கிப்போட்டு கிண்ணத்தையும் பெற்றுக்கொண்டது. 07.09.99 நடைபெறுவதாக



இருந்த இவ்விறுதியாட்டம் மழையினால் இடையில் நிறுத்தப் பட்டு மீண்டும் மறுநாள் 08.09.99 நடைபெற்றபோது இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அணித்தலைவர் டெண் டுல்கர் ஓட்டமேதும் பெறாமல் ஆட்டமிழந்தபோது மைதானத் தில் நுழைந்த ராவிட் ராகுல் நிதானமாக ஆட்டத்தை நகர்த்தி, 8 நாலுகள், 2 ஆறுகள் அடங்கலாக 103 ஆட்டங்களைப் பெற் றார். அவருக்குத் துணைகொடுத்த பந்துவீச்சாளரான கோப்றா தன்னாலும் துடுப்பாட முடியும் என்பதை பிரதிபலிப்பதுபோல் 60 பந்துகளில் 61 ஓட்டங்களைப் பெற்றார். இதில் 3 நாலுகள் 3 ஆறுகள் அடங்கும். முடிவில் இந்திய அணி 6 விக்கெட்டுகள் இழப்புடன் 254 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்காடிய மேற் கிந்திய தீவுகள் வெற்றியைத் தடுப்பதுபோல் இந்திய பந்துவீச் சாளர்கள் செயல்பட்டு முன்வரிசையிலுள்ள நாலு வீரர்களை 67 ஓட்டங்களுக்குள் வெளியேற்றி இந்திய அணியே வெற்றி பெறும் என்ற சமிக்கையைக் காண்பித்தனர். அப்போது மேற்கிந் திய தீவுகளுக்காக துடுப்பாட நுழைந்த புதிய வீரன் ஃபவல் மிக அற்புதமாக பந்துகளைப் பதம்பார்த்து 9 நாலுகள் 8 ஆறுகளை அடித்து 93 பந்தில் 124 ஓட்டங்களைப் பெற்றார். மீண்டும் ஒரு விவியன் ரிச்சட்ஸ் வந்துவிட்டதுபோல் ஆடிய அவரின் நெருப்பு ஆட்டம் வெற்றியை இடம் மாற்றியது. இந்திய பந்து வீச்சாளர்க ளின் தந்திரங்கள் யாவும் தவிடு பொடியாக 47.4 ஓவர்களில் 4 விக்கெட் வித்தியாசத்தில் மேற்கிந்தியதீவுகள் வெற்றிபெற்றது. இவ்வாட்டத்தின் நாயகனாக மட்டுமன்றி இவ்வாட்டத் தொட ரின் நாயகனாகவும் ஃபவல் தெரிவானார் என்பது குறிப்பிடத் தக்கது.

# உலக சம்பியன் அவுஸ்திரேலியாவை சுருட்டிப்போட்டது சிறீலங்கா

ஒருநாள் தொடரை வெற்றி கொண்ட ஆனந்தத்தில், கண்டி அஸ்கிரியா மைதானத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ் டில் உலகசம்பியன் அவுஸ்தி ரேலியாவை மூன்றே மூன்று நாட்களில் சுருட்டிப்போட்டது சிறீலங்கா கிரிக்கெட் அணி 11.09.99 அன்று முடிவு எட்டப் படும்போது சிறீலங்கா அணி 6 விக்கெட்டுகளால் வெற்றியைக் கொண்டாடியது.

பூவா தலையா போட்டுப் பார்த்து வெற்றிபெற்ற அவுஸ்தி ரேலியன் தலைவர் ஸ்ரீவ் வோவ் முதலில் துடுப்பாட்டத்தை விரும்பினார். வோவ் விரும்பி யது சில நிமிடங்களில் சுக்கு நூறாகி மைதானத்திலிருந்து அவுஸ்திரேலிய வீரர்கள் ஆட்ட மிழந்து அணிவகுத்துக்கொண் டிருந்தனர். மூன்று மாதங்கள் முன்னதாக இங்கிலாந்தில் கலக் குக் கலக்கிய அவுஸ்திரேலியா வுக்கா இந்தநிலை என்பதுபோல் 60 ஓட்டங்களுக்குள் 7 விக்கெட் டுகள் சரிந்துவிட்டன. ஆனால் ரிக்கி பொயின்டின்ங் மட்டும் தப்பித்து கொஞ்சம் கௌரவத் தைக் காப்பதுபோல் ஆடி 96 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சாளர் கில்ஸ்பை. மிகவும் நிதானமாக ஆடி 41 ஓட்டங்க ளுடன் பொயின்டிங்குக்கு உத வினார். முடிவில் 188 ஓட்டங்க ளுக்குமேல் கங்காரு தேசத்தால் கடக்க முடியவில்லை. பதிலுக் காடிய சிறீலங்கா அவுஸ்திரே லியாவைக் காட்டிலும் நன்றாக ஆடியது. ஆனால் பெரிய அள வுக்கு ஓட்டக்குவிப்பு இடம் பெறவில்லை. சிறீலங்கா அணி வெற்றிக்கு பல சந்தர்ப்பங்க ளில் காரணகர்த்தாவாக விளங் கிய அரவிந்தடி சில்வா இப் போட்டியிலும் தன்பங்கை திறம்பட ஆற்றி 78 ஓட்டங்களை யும் புதிய பிரதித்தலைவர் ஜெய



வர்த்தனே 46 ஓட்டங்களையும் பெற்று சிறீலங்கா எண்ணிக் கையை 234 வரை நீட்டினர். சிறீலங்கா துடுப்பாடியபோது ஜெயவர்த்தனேயின் ஆட் டத்தை முறியடிக்குமுகமாக பந்தைத் தடுத்தபோது அவுஸ்தி ரேலிய அணித்தலைவர் ஸ்ரிவ் வோவும் வேகப்பந்துவீச்சாளர் கில்ஸ்பையும் காயமேற்பட்டுத் தொடர்ந்து ஆடமுடியாது வில கிக்கொண்டனர். முன்னரை விட மோசமாக இரண்டாவது இனிங்சைச் சந்தித்த அவுஸ்தி ரேலியா 140 ஓட்டங்களை மட் டுமே பெற்றது. இம்முறையும் பொயின்டிங் சிறப்பாக ஆடி 51 ஓட்டங்களைப் பெற்றார். 94 ஓட்டங்களை மட்டும் பெற் றால் போதும் என்றநிலையில் ஆடிய சிறீலங்கா 4 விக்கெட் இழப்புக்களுடன் வெற்றியின் இலக்கை அடைந்தது. அரவிந்த டிசில்வா ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களைப் பெற்றார். இப் போட்டியில் ஓட்டங்கள் குவிக்கமுடியாத நிலையிலும் சிறப்பாக ஆடி ஓட்டங்கள் குவித்த அரவிந்தடி சில்வாவும், ரிக்கி பொயின்டிங்கும் கூட் டாக சிறப்புவீரர்களாக தெரி வாகினர்.

# இத்தாலிய கார் ஓட்டப் பந்தயத்தில் ஜேர்மனியர்கள் வெற்றி

உலக கார்ஓட்ட சம்பியன் போட்டிகள் வரிசையில் 12.09.99 இத்தாலியின் மொன்சா நகரில் நடைபெற்ற கார்ஓட்டப் பந்த யத்தில் (Formula-1) ஜேர்மனியர் கள் முதலாம், இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட னர். மக்லேறனுக்கும், ஃபறாறிக் கும் கடும்போட்டி நிலவும் போது எதிர்பாராத விதத்தில் யோர்டன் ஓட்டுநர் ஃபிறன் சன் முதலாமிடத்தையும் சூமாக் கரின் சகோதரன் றோல்ப் சூமாக்கர் ஓட்டிய வில்லியம்ஸ் இரண்டாம் இடத்தையும் பெற்






றுக்கொண்டது. பின்லாந்து ஓட்டுநர் சாலோ ஓட்டிய ஃபறாறி மூன்றாம் இடத்தைப் பெற்றது. இவ்வருடம் ஃபிறன் சன் பெறும் இரண்டாவது வெற்றி இதுவாகும். இதற்கு முன்னர் பிரான்ஸ் ஓட்டத்தில் வெற்றியாளரானார். இன்ன மும் மூன்று போட்டிகள் மீத மாக இருக்கும்போது மக்லே றன் ஹக்கினனும் ஃபறாறி ஈர் வினும் சம புள்ளிகளாக 60-ஐ பெற்றுள்ளனர். கார்களின் நிலையில் ஃபறாறியைக் காட்டி லும் 6 புள்ளிகளால் மக்லேறன் முன்னணி வகிக்கிறது.

# அமெரிக்கன் ஓப்பன் முடிவுகள்

### பெண்கள் ஒற்றையர் ஆட்டம்

## அக்காவை வென்ற கிங்கிஸ் தங்கையிடம் தோல்வி

அரையிறுதிப்போட்டியில் வீனூஸ் வில்லியம்சைத் தோற்க டித்து சற்று நிம்மதி பெருமூச் சுடன் இறுதியாட்டத்தில் சரி



யான வில்லியம்சைச் சந்தித் தார் முதல்நிலை வீராங்கனை மாட்டீனா கிங்கிஸ். வீனூஸ்சைக் காட்டிலும் சரினா பலம்குன்றி யவராகவே கருதப்பட்டது. ஆனால் அக்காவிடம் ஆடியது தங்கையிடம் கிடைக்கும் என கிங்கிஸ் எதிர்பார்த்திருந்தால் அது தப்பு என்பதை சரினா உணர்த்தியிருக்கிறார். வளர்ந்து வரும் வீனூஸ், சரினா சகோத ரிகள் எதிர்காலத்தில் பலருக் கும் அச்சுறுத்தலாக அமையும் என்பதை அமெரிக்கன் ஓப்பன் முடிவுகள் காட்டியிருக்கிறது. அரையிறுதியில் 2-ம் நிலையி லுள்ள டவன்போட்டை 6:4, 1:6. 6:4 என தோற்கடித்த சரினா இறுதியில் மாட்டீனா கிங்கிசை 6:3,7:6 எனத் தோற்கடித்து முதல் இருவரிசை வீராங்கனைகளை யும் வென்ற பெருமையுடன் தனது முதலாவது பெரிய டெனிஸ் வெற்றியையும் (Grand Slam) பெற்றிருக்கிறார். 17 வயதான சரினா 41 வருடத்திற்குப் பின் வெற்றிபெறும் ஆபிரிக்க அமெ ரிக்கர் என்ற பெருமையையும் பெறுகிறார். 41க்கு முன் வெற்றி பெற்றவர் அத்தெலா கிப்சன்.

### பெண்கள் இரட்டையர் ஆட்டம்

## வில்லியம்ஸ் சகோதரிகள் வெற்றி

குறுகிய காலத்தில் டெனிஸ் விளையாட்டில் பெரும் ஆதிக் கம் செலுத்தும் சரினா, வீனூஸ் வில்லியம்ஸ் சகோதரிகள் இரட்டையர் ஆட்டத்தில் வெற்றி பெற்றுள்ளனர். 11.09.99 ஒற்றையர் ஆட்டத்தை வென்ற சரினா மறுநாள் 12.09.99 அக்கா வீனூஸ்சுடன் இணைந்து சூபின், ரெஸ்ரூட் சோடியை 4:6, 6:1.6:4 எனத் தோற்கடித்துள்ளனர்.

### ஆண்கள் ஒற்றையர் ஆட்டம்

## அமெரிக்கர்களின் இறுதியாட்டம்

அமெரிக்கர்களான அகஸி யும், மார்டினும் மோதிய இறுதி யாட்டம் மிகவும் விறுவிறுப் பாக நுணுக்கமான ஆட்டமா கவே இருந்தது. வெல்வது ஒரு அமெரிக்கராக இருந்தாலும் முதல் இடம் யாருக்கு என்பது தான் இவ்விறுதியாட்டம். முதல் சுற்றில் மாட்டின் சற்று தளர்ந்து காணப்பட்டாலும் 2-ம், 3-ம் சுற் றுக்களில் கடுமையான போட் டியை ஏற்படுத்தி அகஸியை வென்றாலும் 4-ம், 5-ம் சுற்றுக ளில் அகஸ்ரியின் கரமே மீண் டும் ஓங்கியது. 6:4, 6:7, 6:7, 6:3, 6:2 என அகஸி வெற்றி பெற்ற தன் மூலம் மீண்டும் முதல்தர வீரர் நிலைக்கு உயர்ந்திருக்கி றார்.

### ஆண்கள் இரட்டையர் ஆட்டம்

## முதல்தர இந்திய சோடிக்கு வெற்றி கைக்கெட்டவில்லை

உலகின் முதல்தர இரட் டையர் சோடியான இந்திய வீரர்களான பகவதி பயஸ் சோடி 11-ம் நிலையிலுள்ள பையரின், லறியவ் சோடியிடம் தோல்வியைக்கண்டது. முதல் சுற்றில் கடுமையான போட்டி நிலவியபோதும் பகவதி பயஸ் அதிர்ஷ்டம் அற்றவர்களாகவே முடிந்தது. 7:6, 6:4 என பைய ரின் லறியங் சோடி வெற்றி யைத் தமதாக்கிக்கொண்டனர்.

– பொன்.தாமோதரம்

*(32-ம் பக்கத் தொடர்ச்சி)*

## பொலிஸ்.......

வீங்கியிருந்ததை உறவினர்கள் கண்டனர். அவரால் நடக்க முடியவில்லை. காய்ச்சலினால் அவர் பீடிக்கப்பட்டிருந்தார் போலவும் தோன்றியது. கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த இவர் வெள்ளவத்தையில் வைத்து ஒகஸ்ட் 4 இல் கைதானார். கயிற்றில் கட்டித்தொங்கவிடப்பட்டு அவர் தாக்கப்பட்டுள்ளார் என்று வேறு வட்டாரங்கள் கூறுகின்றன.

'பல வருடங்களாக மிகவும் பரவலான மனித உரிமை மீறலாக சிறிலங்காவின் சித்திரவதை விளங்கின்றது. சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து வாக்குமூலங்கள் மன்னிப்புச் சபையால் பெறப்பட்டிருக்கின்றன. மருத்துவ அத்தாட்சிப் பத்திரங்களும் இந்த வாக்குமூலங்களை உண்மையென்று நிரூபிக்கின்றன. வடக்குக் கிழக்கைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கிறார்கள். கைது செய்வதற்கும் தடுத்து வைப்பதற்குமான பரந்தளவிலான அதிகாரங்கள் சிறீலங்கா ஆயுதப்படைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மனித உரிமை மீறல்கள் பெருமளவில் இடம் பெறுவதற்கு இந்த அதிகாரங்கள் பங்களிப்புச் செய்கின்றன. சித்திரவதை செய்பவர்கள் தண்டனைகளில் இருந்து தப்பக்கூடிய நிலைமை இருப்பதால், சித்திரவதைச் சம்பவங்கள் தொடருகின்றன. சித்திரவதை செய்தமைக்காக இதுநாள்வரை சிறிலங்கா பாதுகாப்புப் படைகளின் எந்தவொரு உறுப்பினரும் நீதியின் முன்நிறுத்தப்பட்டதாக இல்லை' என்று மன்னிப்புச் சபை அதன் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

*(32-ம் பக்கத் தொடர்ச்சி)*

## தூத்துக்குடி.......

பட்டுள்ளது. எனினும் இதுவரை இவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை படகில் இவர்கள் ஏற்றிச் சென்ற செத்தல் மிளகாய் சாக்குகள் கடலில் மிதப்பதாகவும் படகுகளில் தேடுதல் நடாத்தியவர்கள் அறிவித்துள்ளனர். தற்போது உலங்குவானூர்தி மூலமும் இவர்களை தேடும் பணி அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனினும் இரு நாட்களாக தேடப்பட்டும் இவர்களை கண்டுபிடிக்க முடியாததால், காணாமல் போயுள்ள 12 பேரும் கடலில் தத்தளிக்கும்போது சிறீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டோ அல்லது சுட்டுக் கொல்லப்பட்டோ இருக்கலாம் என்வும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

# வட்டக்கச்சியில் விமானத் தாக்குதல் இருவர் பலி

*(12.09.99)*

வன்னி, வட்டக்கச்சி பகுதியில் சிறிலங்கா விமானப்படைகள் நடாத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது. கடந்த வியாழன் மதியம் 11.45 மணியளவில் வட்டக்கச்சி பகுதியை சுற்றி வட்டமிட்ட குண்டுவீச்சு விமானங்கள் மக்கள் குடியிருப்புகளை நோக்கி தாக்குதலை நடாத்தியதாகவும் இதன்போது இருவர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

*(32-ம் பக்கத் தொடர்ச்சி)*

## லெப். கேணல்.......

களின் குரல் வானொலி அறிவித்துள்ளது. கடந்த ஐந்தாம் திகதி யாழ்ப்பாணத்தில் இப்போராளி சயனைட் உட்கொண்டு வீரச்சாவை தழுவிக் கொண்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

*(32-ம் பக்கத் தொடர்ச்சி)*

## நீலன் கொலை.......

கான குழுவும் மட்டக்களப்பில் இருந்தே வந்துள்ளது எனச் சிறிலங்கா கூட்டுப்படைகளின் பேச்சாளர் பிரிகேடியர் தென்னகோன் தெரிவித்துள்ளார். கடந்த வியாழனன்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றிலேயே தென்னகோன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

*(32-ம் பக்கத் தொடர்ச்சி)*

## இராணுவத்தின்.......

காரி இன்று அதிகாலை தமது தரப்பு சேதம் 53 என, 'றொயிட்டர்' செய்தி நிறுவனத்திடம் தெரிவித்த அதேவேளை, 116 புலிகள் கொல்லப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

வவுனியாவில் ஏராளமான உலங்கு வானூர்திகள் நேற்று பறந்து திரிந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.


# வீர வணக்கம்



தாயின் மடியில்: **27.04.1963**

தாயக மண்ணில்: **04.09.1999**

## மேஜர் மிதுலா

செல்வி நித்தியலட்சுமி (யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டைச் சேர்ந்த செல்வி நித்தியலட்சுமி சோமசேகரம் அவர்கள் 04.09.99 அன்று வீரமரணமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற திரு.சோமசேகரம், திருமதி சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மகளும், பாலசுப்பிரமணியம் (பாபு-பிரான்ஸ்), பாஸ்கரன் (நந்தன்-பிரான்ஸ்), சியாமளா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலசுப்பிரமணியம் சகுந்தலாதேவியின் (பிரான்ஸ்) அருமை மைத்துனியும், திவ்வியா, திவாகர் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

தொடர்புகளுக்கு:
01 42 04 47 34(பாபு)
01 45 06 75 68 (நந்தன்)
9, Rud Emile Duclaux
92150 Suresnes
France

விநாயகர்வீதி
நல்லூர் வடக்கு
கல்வியங்காடு
தமிழீழம்.

*தகவல்: சகோதரர்கள்.*

Pub


**ஈழமுரசில் வெகுவிரைவில்.....**

**உலக வரலாற்றில் பதிவானவர்கள்**

கடந்த 20 நூற்றாண்டுகளில் உலக வரலாற்றில் தங்கள் செயற்பாடுகளின் மூலம் ஒரு பதிவினை ஏற்படுத்திச் சென்றவர்களை, மனித வரலாற்றுப்போக்கில் பல மாறுதல்களை ஏற்படுத்திய பல்வேறு மனித முகங்களை உங்கள் முன் ஈழமுரசு தொடராகத் தருகின்றது. நூற்றுக்கணக்கான இவ் வரலாற்றுப் பதிவாளர்களை வாரம் ஒருவராக பதிவு செய்கின்றது ஈழமுரசு. ஆ-ர்


## வாகனசேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும், மற்றும் வாகனத்தேவைகளுக்கும் (ஐரோப்பிய நாடுகள் உட்பட) சாரதியுடனோ, சாரதி இன்றியோ பெற்றுக்கொள்ளலாம்.

**அலெக்ஸ்**

தொலைபேசி: 01 48 37 59 67



## எட்டாம் ஆண்டு வீரவணக்கமும் நினைவஞ்சலியும்



தோற்றம் 1976.08.25

மறைவு 1991.09.16

**கல்கத்.கிருசாந்**

மார்க்கண்டு-மதனரூபன் (பெரியபழம்)

யாழ் மத்தியகல்லூரி

நாலு இரண்டு ஆண்டுகள்
நடைமெலிந்து நிற்கின்றோம்

நாற்றிசையெங்கும் தேடுகின்றோம்
கண்களும் ஒளி இழந்து நிற்கின்றோம்

புன்னகை சிரிப்போடும்
பூர்த்துத்தான் வருவாயோ

கல்விக்கூடத்துள் மழலையும் கனைக்கிறது
காதோரம் இனிமை கீதமும் பாய்கிறது

எமக்கெட்டிய சேதியும் பொய்யாகாதோ
புன்னகையுடன் புனைந்து நிற்க

தங்களுக்கும் தங்கள் தோழமைகளுக்கும்
எம்மனதாற பூச் சரங்கள் பொலிய
குவிந்து பொலிவிழந்து நிற்கின்றோம்

உங்கள் இனிய அப்பா, அம்மா, அன்புத்தம்பிமார், அருமைத்தங்கை.

புதியவன் மார்க்கண்டு இரவீந்திராதேவி
மதனாராஜன் (சின்னப்பழம்)
மயூறதி (நிஷா)
மதனாகரன் (பவுணர்)
மகிந்தன் (பாபு)

தகவல்-தந்தை
பி.மார்க்கண்டு.சுவிஸ்
026.912 74 84

தமிழீழம்
புதுவையூர் கிழக்கு
புதுவையூர்

Pub



# தமிழர் தொலைபேசி நிலையம்

**ALLO COM** itineris SFR **ALLO BOX**

**27, Rue du Clos,**
**75020 Paris**
Tel: 01 43 73 00 11 Fax: 01 43 73 02 64
M°: Maraîchers / Porte de Montreuil / Bus: 26

Bouygues Telecom

**59, Rue d'Avron,**
**75020 Paris**
Tel: 01 43 73 76 83
Fax: 01 43 73 96 31

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub

# பொலிஸ் நிலையங்களில் தமிழ் இளைஞர்கள் கடும் சித்திரவதை – சர்வதேச மன்னிப்பு சபை

தலைநகர் கொழும்பில் பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் மூன்று தமிழ் இளைஞர்கள் கடுமையாகச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு அவசரமாக மருத்துவ உதவி தேவைப்படுவதாகவும் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்திருக்கிறது.

மாணவரான ஸ்ரீராம், அந்தோனிப்பிள்ளை பினோத் விமல்ராஜ், சிவஞானசுந்தரம் ஸ்ரீகாந்தன் ஆகியோரே சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட தமிழ் இளைஞர்களாவர். ஸ்ரீராம் மிரிஹான பொலிஸ் நிலையத்தில் வைத்துக் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். திறந்த பல்கலைக்கழகத்தின் இறுதிவருட மாணவனான இவர் கடந்த ஓகஸ்ட் 25 இல் கொட்டாஞ்சேனையில் வைத்து கலாநிதி நீலன் திருச்செல்வம் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவரை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒரு உறுப்பினர் என்று பொலிசார் சந்தேகிப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'மிரிஹான பொலிசாரினால் கைது செய்யப்பட்ட வேறு 8 மாணவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இவர்களில் இருவர் கடுமையான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். கயிற்றில் கட்டித் தொங்கவிடப்பட்டு இவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அடிகாயங்கள் இவர்களின் உடம்பில் காணப்படுகின்றன.

'மன்னாரைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை பினோத் விமல்ராஜ் நியூ ஏசியா லொட்ஜில் வைத்து ஓகஸ்டில் கைது செய்யப்பட்டார். கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டபோது அவரது உடல் பூராவும் தாக்குதலுக்குள்ளாகியிருக்கிறது. நகத்தில் குண்டூசி ஏற்றப்பட்டிருக்கிறது. மல வாயிலுக்குள் இரும்புக் கம்பி செலுத்தப்பட்டிருக்கிறது.

'சிவஞான்சுந்தரம் ஸ்ரீகாந்தன் கொழும்பில் குற்றத்தடுப்புப் பணியகத்தின் தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார். கைதாகி ஒரு மாத காலத்தின் பின்னர் செப்டெம்பர் 4 இல் முதல் தடவையாக அவரைப் பார்வையிடுவதற்கு உறவினர்கள் அனுமதிக்கப்பட்டனர். ஐந்து நிமிடத்துக்கே இவ்வனுமதி கிடைத்தது. அவரின் முகம்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## தூத்துக்குடியில் இருந்து கொழும்பு வந்த படகு மூழ்கியது

(13.09.99)

தூத்துக்குடியில் இருந்து கொழும்பு நோக்கி சரக்குகளை ஏற்றிக்கொண்டு வந்து கொண்டிருந்த படகொன்று கடலில் மூழ்கியுள்ளது. நேற்று முன்தினம் அதிகாலை நடுக்கடலில் பயணித்துக் கொண்டிருந்தபோது காலநிலை மோசமானதால் பலத்த காற்று வீசியதாகவும் அதன் போது படகில் நீர் நுழைந்து படகு மூழ்கத் தொடங்கியதாகவும் இதில் பயணம் செய்து கொண்டிருந்த மாலுமி உட்பட 12 பேர் தற்காப்பு சிறிய படகுள் மூலம் வெளியேறி தூத்துக்குடி துறைமுகத்துடன் தொடர்பு கொண்டபோது தொடர்புகள் எதுவும் கிடைக்கவில்லை என்றும், இதேவேளை அப் பகுதியில் வந்துகொண்டிருந்த இன்னொரு கப்பல் இவர்களது வயர்லெஸ் செய்தியைக் கேட்டு தூத்துக்குடிக்கு அறிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து இவர்களை தேடும்பணி நேற்று ஆரம்பிக்கப்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## இராணுவத்தின் உடல்கள் சிதறிக்கிடக்கின்றன

மன்னார் சமர்க்களத்தில் இருந்து 20ற்கு மேற்பட்ட இராணுவத்தினரின் உடல்களை விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்றுள்ளதாகவும், மேலும் பல உடல்கள் சமர் இடம்பெற்ற இடங்களில் சிதறுண்டு கிடப்பதாகவும் புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

இச் சமரில் கொல்லப்பட்ட இராணுவம் தொடர்பான விபரங்களை அறிவிப்பதில் இராணுவத் தலைமை பலத்த தடுமாற்றத்தை வெளிக்காட்டியுள்ளது. முதலில் 18 இராணுவத்தினர் கொல்லப்பட்ட அதே வேளை 50 புலிகள் தமது படையினரால் கொல்லப்பட்டதாக அறிவித்த இராணுவம், பின்னர் புலிகளிடம் இராணுவத்தினரின் சடலங்கள் உள்ளமையாலும், 45 சடலங்கள் அநுராதபுரத்தில் இருந்தமையாலும் தமது சேத விபரத்தை 49 என அறிவித்துள்ளனர். ஆயினும் மற்றுமொரு இராணுவ உயரதி

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## லெப். கேணல் செந்தமிழ் வீரச்சாவு

(12.09.99)

லெப்.கேணல் செந்தமிழ் அல்லது செந்தமிழ்செல்வன் என அழைக்கப்படும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த சிவபாக்கிநாதன் பிரபாகரன் வீரச்சாவை தழுவிக்கொண்டள்ளதாக புலி

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## நீலன் கொலை மட்டக்களப்பில் தீட்டப்பட்டது

**- தென்னகோன்**

(12.09.99)

நீலன் திருச்செல்வம் படுகொலை செய்யப்பட்டதற்குக் காரணமாக இருந்த தற்கொலைக் குண்டுதாரி யாரென்பது இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. ஆனால் இக் கொலைக்கான திட்டம் மட்டக்களப்பில் வைத்தே திட்டமிடப்பட்டுள்ளதுடன், இத் தாக்குதலை மேற்கொள்வதற்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## எல்லைப்படையின் முதலாவது மாவீரர்

(13.09.99)

தமிழீழ எல்லைப் படையை சேர்ந்த அப்பன் நேற்று முன்தினம் முரசுமோட்டையில் வீரச்சாவடைந்துள்ளார். எல்லைப் படையில் முதல் வீரச்சாவடைந்த மாவீரர் இவராவார். இவரது வித்துடல் நேற்றுக் காலை பத்து மணியளவில் கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன், தளபதி பால்ராஜ், தளபதி கருணா, தளபதி சுடர் உட்பட ஏராளமான போராளிகளும் பொது மக்களும் கலந்துகொண்டு இறுதி மரியாதை செலுத்தினர். இவ் இறுதி நிகழ்வில் சு.ப.தமிழ்ச்செல்வன் உரைநிகழ்த்துகையில், தமிழர் வரலாற்றில் இது ஒரு புதிய அத்தியாயம். மக்கள் போராட்டமாக மாறியுள்ள எமது விடுதலைப் போராட்டம் அப்பனின் வீரச்சாவுடன் இது மக்கள் போராட்டம் என்பதை உலகம் முழுவதும் அறியச் செய்துள்ளது எனத் தெரிவித்தார்.

கே.ஆர்.எஸ். என்றபிறைசெஸ்
537 High Road, Wembley
Middlesey, Hao 2 Dj, Tel: 0181- 9024590
நிர்வாகி: G.சதீஸ்
Pub
★ Kingfish- 2.59 ல் இருந்து
★ நீலக்கால் [துப்பரவு செய்த] நண்டு £3.89 ல் இருந்து
★ 20 Kg Broken Basmath £7.99 இலிருந்து; 20 கிலோ Broken Basmath £7.99 இலங்கை மரக்கறிவகை 99P
★ CD 2.99 இல் இருந்து
★ Audio 99 இல் இருந்து
★ நல்லெண்ணை £3.49; 1/2 போத்தல் £1.79
★ ஞானம்காட் 10% விலைக் கழிவில்